


உளிகளை
விழுங்கும்
தினம்



வாழ்வதற்கே
துணிவு
வேணும்

மே 01 - மே 07, 2011 May 01 - May 07, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்



அச்சின் வலி



மே I செங்குருதி முதல் நீலம் வரை

தெற்கில் முயல்; வடக்கில் ஆமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளிகளை விழுங்கும் தினம்



ஜெரா

## உழைப்பாளர்களின் உற்பத்திப் பேட்டை

**2008 ஜூவின் மாதம், புதுக்குடியிருப்பு சந்தை**

நானும் மதி எனப்படும் என் நண்பனும், கூவிக் கூவி மரக்கறி விற்பனை செய்யும் சிறார்களை ஒளிப் பதிவுக் கருவியில் படமாக்கி கொண்டிருக்கிறோம்.

நான் இதற்கு முதல் மரக்கறி வாங்கும் பாணியில் பல தடவை அந்தச் சிறார்களுடன் கதைத்திருக்கிறேன். அப் பிரதேசத்தின் பின் தங்கிய இடங்களான வேணாவில், கைவேலிப் பகுதிகளைச் சேந்தவர்கள் அந்தச் சிறார் கள்.10 அல்லது 12 வயது நிரம்பபெற்றவர்கள். ''அப்பா உழைப்பில்லை '', ''அப்பா இல்ல'' 'இடம்பெயர்ந்தனாங் கள்', 'பள்ளிக்கூடம் போறதில்லை' இவை தான் நான் அவர் களிடமிருந்து பெற்றுக் கொண்ட தகவல்கள். அவர்களின் வியாபார தந்திரமே தனியானது. எப்போதும் சனக்கூட்டம் முண்டியடிக்கும். இதனால் அம் முதலாளிமார் அந்த சிறு வர்களை யாரிடமும் கதைக்க விடுவதில்லை. இதை வைத் துக் கொண்டு ஒரு ஆவணப்படம் தயாரிக்க நாம் திட்ட மிட்டோம்.

யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாகப் படமெடுத் ததை அந்த நெரிசல் சனத்தில் யாரோ ஒருவன் கண்டு விட்டான். பின்னாலிருந்து ஒரு கை என்தோளைத் தட்டியது. ''என்ன செய்யிறியள்''. மதி முழுசத் தொடங்கினான். எனக்குத் தலை சுற்றியது. முதலையின் வாயில் அகப்பட்டு விட்டோம். 'இங்க வாங்கோடா' அந்த நபர் அழைத்துப் போகப் பின்னாலேயே சென்றோம். சனமெல்லாம் வேடிக்கை பார்த்தது. அவர்களின் எண்ணம் நாம் 'ஆழ ஊடுருவும் படையினர்' என்று. அந்த காலப்பகுதியில் வன்னியில் எல் லோரும் சந்தேகத்துடனேயே பார்க்கப்பட்டனர். அந்தள வுக்கு இராணுவத்தினரின் ஆள ஊடுருவும் படையினரும், புலனாய்வுப் பிரிவினரும் மக்களோடு கலந்திருந்தனர். கூட் டிப்போனவர்கள், நாம் பற்றிய முழு விபரமும் எழுதி வாங் கினர். நாம் படித்த பாடசாலையிலிருந்து கடை சியாய் சாப் பிட்ட உணவு வரை எல்லாவற்றையும் மாறி மாறிக் கக்கி விட்டோம். அந்தளவுக்கு எமக்கு முன்னிருந் தவரின் வார்த்தை களில் குரூரம் இருந்தது. எம்மைவிட 10 வயது கூட இருக்கும்.

'போக்கி'யில் இரைச்சல்களோடு ஏதோ பேசினார். ஒரு பச்சை நிற வாகனத்தில் ஏற்றிச்செல்லப்பட்டோம். விசுவமடு பகுதியில் இருந்த ஒரு வீட்டில் விடப்பட்டோம். இரவு 7 மணி இருக்கும். மாதவன் மாஸ்ரர் என்பவர் எம்மை மீண்டும் விசாரித்தார். இடுப்பில் பிஸ்ரல் கட்டியிருந்தமை எம்மை பீதியடைய செய்தது. ஒரு துளி தண்ணீர் கூட தராமல் முழுவதையும் கறந்து எடுத்துவிட்டார் மனுசன்.

'இது கடைசி வார்னிங், இனிமேல் இப்படி யெல்லாம் நடந்து மாட்டினீங்கள் எண்டால்....! அதையெல்லாம் கவனிக்க எங்கட ஆக்கள் இருக்கினம்'.

ஒன்றும் சொல்லவில்லை. துரத்திவிட்டார். வெளிநாட்டி லிருந்து நண்பன் ஒருவன் அனுப்பிய காசில் வாங்கிய கெமராவை பறிகொடுத்துவிட்டு இருளுக்குள் பயணிக்க தொடங்கினோம். பாவம் அந்தச் சின்னத் தொழிலாளர்கள்.

நான் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வரும் வரைக்கும் சந்தைக்குப் போகும் போதெல்லாம் கண்டிருக்கிறேன். எந்த ஆக்களும் அவர்களைப் பாடசாலைக்குச் சேர்க்க வில்லை. ★

## பார்த்துப் பழகிய தொழிலாளர்கள்

அன்றாடம் மோதிக்கொள்ளும் முகங் களில் உழைத்தோய்ந்த தடயங்களைப் பார்த்திருக்கிறேன். பரபரப்பான மதியப் பொழுது களில் நான் வந்தமரும் உணவுக் கடை மேசைக்கு முன்னால் வாழை இலையில் சுற்றிக் கட்டிய உணவுப் பொட்டலத்துடன் வந்தமர்வான் ஒரு சிறு பிஞ்சு. பத்தில் இருந்து பதின்மூன்று வயதிருக்கும். உடல் மறைத் திருக்கும் துணியெல்லாம் வாகனங்களின் கறுப்பு சிதழ் பூசப்பட்டிருக்கும். கைகளில் வெளித் தெரியும் உடற்பாகங்களில் இரும்பு கடித்த காயங்கள் பழையனவாகவும் புதியன வாகவும் ஒவ்வொருநாளும் அவனில் தென் படும். வீட்டில் வறுமையாம். வேலை அவனை தன்னுள் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொள்ள அவனுக்கான பாடசாலை இடம் மாறியது. ★

என் எச்சில் கோப்பைகளைக் கழுவி அடுக்கும் பத்து வயதுப் பையனை எனக்குத் தெரியும். பல்கலைக்கழகத் தெருவில் உள்ள பிரபலமான உணவகத்தில் கோப்பை கழுவு கிறான். அவனை யாரும் கண்டுகொள்ள வில்லை. அண்மையில் அவனுடன் கதைக்க முயற்சித்தேன். அந்தப் படித்த முதலாளி எச்சரித்தான் 'இது வேலை நேரம், கதைக் காதே, ஆக்களைக் கவனி' பையனைப் பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை. ★

## அரசியலில் கலங்கும் உழைப்பு

எந்த விடயத்தையும் அரசியாலாக்கிப் பார்ப்பதில் சர்வவல்லமை படைத்த நாடு இலங்கை. இதை ஒரு இராஜ தந்திரமாகவும் பயன்படுத்தி வருகிறது. இந்த பொது அரசியல் புத்தி இன்று நேற்று உருவானதல்ல. இன்றைக்கு 2900 வருடங்களுக்கு மேற்பட்டது. அதாவது வட இந் தியாவிலிருந்து பரப்பப்பட்ட பௌத்தம் இலங்கையில் மட்டும் தான் அக்காலத்திலேயே அரசியலாக்கப்பட்டது. பௌத்தம் உருவாகிய இடத்திலேயே அழிந்து விட இலங்கை இன்றும் ஒரு பௌத்த பூமியாக வாழ்கின்றமைக்கு எதையும் அரசியலாக்கும் சக்தி படைத்தவர்களே காரணம்.

அவர்களின் வழிவந்தவர்கள் தானே தற்போதைய சிங்கள ஆட்சியாளர்களும். அத்தந்திரத்தை எல்லா விட யங்களிலும் பிரயோகிக்கின்றனர். யுத்த வெற்றி, விளை யாட்டுக்கள், கொண்டாட்டங்கள் என அனைத்துக்கும் அனுசரனை விளம்பரமளிப்பது இலங்கை அரசியல் தான்.

தொழிலாளர் தினம் இலங்கையில் என்று அறிமுகப் படுத்தப்பட்டதோ அன்றிலிருந்தே அது அரசியல் சாயம் பூசப்பட்ட நிகழ்வு தான். உள்நாட்டு அரசியலில் அரசியல் தலைவர்கள் தொழிலாளர்களைக் கூட தமது வாக்கு அந் தஸ்தைப் பெருக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்களாக பயன் படுத்தி வந்திருக்கின்றனர். இதுபோன்றதொரு சந்தர்ப்பத் தில் தான் பிரேமதாஸ சொர்க்கம் திரும்பினார் என்பது இன் னும் இறக்காமல் இருக்கும் தொழிலாளர் மனதில் நினை விருக்கும்.

அந்த தினத்தில் மட்டும் சம்பள உயர்வு, உரிமைகள் பற்றி பேசுவதும், அதற்குப் பதிலாக தொழிலாளர் வாழ்த்துப் பாடுவதும், வாக்களிப்பதும் தான் இலங்கை மே தினத்தின் வரலாறு.

இது வரைக்குமான இந்த மே தின அரசியல் கடந்த இரண்டு வருடங்களாக அவ்வளவு சோபிக்கவில்லை என்றே சொல்லவேண்டும். கடந்த ஆண்டு கண்டுகொள்ளப்பட வேயில்லை. ஆனால் இவ்வருடம் கோலாகல ஏற்பாடுகளை காணப்போகிறது. இதற்கும் மிகப் பலமானதொரு அரசியல் பின்புலம் இல்லாமல் இல்லை. அதாவது ஐ.நாவின் இறுக் குதல்களுக்கு எதிராக தொழிலாளர் தினத்தை முன்னிறுத் தப் போகிறார்கள்.

அதற்காக நாடு முழுவதுமிருந்து 10 லட்சம் விவசா யிகளை திரட்டப்போவதாக ஜனாதிபதி தெரி வித்துள்ளார். பல எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ள போதிலும் மே தினத்தை சாதித்துவிடுவார்கள். ஏனெனில் தொழிலாளர்கள் தான் வக்கற்றவர்களாகிப் போய்விட்டனரே.

பேருந்துகளை மட்டும் அனுப்பினால் போதும் சாப்பாட்டு பொதிகளுக்காகவும், தண்ணீர் போத்தல்களுக்காகவும், சொர்க்கம் வரை போய் கோஷம் எழுப்பவும் எமது பாமரத் தொழிலாளர் தயார். அந்தளவுக்கு இலங்கையரசு தொழி லாளர்கள் மீதான வாழ்வுப் புலங்களை சுரண்டியிருக்கிறது. அனைத்துமே லாப அரசியலுக்காக இத்தீவில் விற்பனை செய்யப்பட்டு விட்டன.

உழைப்பாளர்களிடம் மிஞ்சியிருப்பது கந்தல்கள் மட்டும் தான். போகின்ற போக்கில் அதையும் நம் உள்ளூர் அரசியல் வாதிகள் விற்றுவிடுவார்கள்.

## ஓடாய்ப் போனோர் தினம்

உலகை இயக்குகின்ற சக்தி தொழிலாளர்களுடையது. அதற்கான விசை உருவாக்கப்படுவது அவர்களினது திருப்தியான உழைப்பிலிருந்து தான்.

குடிமக்கள் யாவரும் அடிமை நிலையிலிருந்த மன்னராட்சிக்காலங்களிலும், நில பிரபுத்துவ காலங்களிலும் உழைப்பவர்களின் மகத்துவம் சரியான வகையில் புரிந்து கொள்ளப்படவில்லை. குறிப்பிட்ட ஆட்சிமுறைகளுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்கிய போது தான் உழைப்பாளர்களின் பலம் தெரியத் தொடங்கியது. தொழிற்சாலைகளிலும், பண்ணைகளிலும் எட்டு மணி நேர உழைப்பு கோரப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் தொழிலாளர் புரட்சிகள் வெடித்தன. 1890 மே 01 அன்று அனைத்துல அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்த வேண்டும் என்று சர்வதேச மட்டத்திலான அறைகூவல் விடப்பட்டது. பின்னாளில் இதுவே தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் பயனாக பொதுவுடமை தத்துவத்தின் அடிப்படையிலான அரசுகள் உருவாகின. மன்னர்களும் முதலாளிகளும் சற்று பின்வாங்கினர்.

ரஷ்யாவிலும், சீனாவிலும் அந்த தத்துவம் தவறான புரிதல்களோடு அனுகப்பட்டமையினாலும், தொழிலாளிகள் முதலாளிகளாக மாறி மீண்டும் தொழிலாளிகள் மீது அடக்கு முறைகளை மேற் கொண்டதாலும் தொழிலாளர் வர்க்கமும் அவர்களது போராட்டமும் முதலாளியத்திடம் மீண்டும் சரண டைந்தது.

முதலாளியம் தொழிலாளர்களை சரிவரக்கவனித்துக் கொண்டது. சலுகைகள், கடன்கள் போன்றன முதலாளிகள் மீதான தொழிலாளர் விசுவாசத்தை அதிகரித்தன. தம் உரிமைகள், உணர்வுகள், மறக்கச் செய்யப்பட்டனர். விசுவாசம் என்ற மாயச்சொல் எட்டு மணிநேரத்தை 12 மணி நேரமாக்கினாலும் கண்டுகொள்ளச் செய்யவில்லை.

உலகம் முழுவதும் கிளை பரப்பியுள்ள முதலாளிகளுக்கு சுரண்டு கருவிகளாக தொழிலாளர்கள் மாறிவிட்டனர். தொழிலாளர்களின் அனைத்தையும் தீர்மானிப்பவர்களாக முதலாளிகள் மாறிவிட்டனர். மே- தினம் உட்பட அனைத்து கொண்டாட்டங்களும் அவர்களுடையதாகிப் போய்விட்டது. தொழிலாளர்களுக்கான நாளிலும் அவர்கள் தொழிலாளர்கள் தான். ஊர்வலம் போவதும், கொடி பிடிப்பதும், கூட்டம் போடுவதும் மேதின உழைப்புக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சின் வலி



காலையில் எழுந்தவுடன் பெரும்பாலனவர்கள் தேடியலைவது அன்றைய தினசரி நாளிதழ்களைத் தான். அந்தக் கணத்தில் கிடைப்பதை படித்ததும் தூக்கிப் போட்டு விட்டு அவரவர் காரியங்களுக்குக் கிளம்பி விடுவார். சில நாட் களுக்கு பின் வீட்டுமூலைகளில் குவியும் பத்திரிகைகள், மாதக்கடைசியில் கடைகளுக்கு மீள் விற்பனையாகி தன் ஆயுளை முடித்துக் கொள்ளும். வெளி யாகும் காலையில் மட்டும் தான் அதன் உயிர் பெறுமதியானது. அதன் பின் எங்கேயாவது பிரச்சினை கிளம்பும் போதுதான் நாள் பத்திரிகைகள் தேடப்படும்.

இந்த நிலையில் நோக்கப்படும் தினசரி ஒன்றின் உருவாக்கம், சமூகத் தளத்தில் அதன் பெறுமதி, ஏற்படுத்தும் விளைவு, உருவாக்கத்தில் எதிர்கொள் ளும் நெருக்கடிகள் எனப்பல அச்சு ஊடக விடயங்கள் பற்றி பேசுகின்ற படம், அண்மையில் வெளியாகியிருக்கின்ற ''கோ''.

வழமையான தமிழகச் சினிமாதான். பாடல், சண்டை, காதல், என்ற அமைப் புக்குள் இழையோடும் பிரதான கதை பலரையும் பேச வைத்திருக்கிறது. அதற் குள் பிணைந்திருக்கும் பிரதான கதை நம் அரசியலற்ற வெளிபற்றியும் சிந் திக்க வைக்கிறது. அரசியல் அற்றுக்கிடக்கும் அல்லது மாற்று அரசியலை வேண்டி நிற்கும் சமூகமொன்றிற்கு புதிய சிந்தனை கொண்ட இளைய அரசியல் அணி யொன்றை அறிமுகப்படுத்துவதிலும், ஆணித்தரப்படுத்துவதிலும், அழிப்பதிலும் தினசரிகளுக்கு காத்திரமான பங்கிருப்பதை ''கோ'' தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

படக்கதையின் சுவாரஸ்யத்திற்காகத் தவறான முன் தெரிவு இடம்பெற்றி ருக்கிறது. ஆனாலும் அதனைப் பத்திரிகையொன்றினால் நேர்த்தியாகவும் செய்து முடிக்க முடியும் என்பதைப் பார்க்கும் சாதாரணன் கூடப்புரிந்து கொள்வான்.

இதைவிட தினசரி வாசகர்களுக்குத் தெரிவது வெளியாகும் செய்திகள் மட் டுமே. ஆனால் காலைப்பத்திரிகை ஒன்றின் உருவாக்கம் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் இடம் பெறுகிறது என்பதை ''கோ'' காட்சிப்படுத்தியிருக்கிறது.

பத்திரிகையொன்று பொது வெளியில் நிகழ்த்தும் தாக்கங்களை விட, அதன் உள்ளக அமைப்பில் செயற்படும் விதமும் படமாக்கப்பட்டிருக்கிறது.

நம் உள்ளூர் பத்திரிகைகள் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்களை சொல் லாமல் சொல்கிறது.செய்தியென்பது புகைப்படங்களால் சொல்லப்படும் வன்மை மிக்க அழகியல் என்னும் கோட்பாட்டை காட்சிகள் உருவமாக்குகின்றன.

படத்தில் பல இடங்களில் புகைப்படப் பிடிப்பாளனும், செய்தியாளனும், செய் தித் தொகுப்பாளனும் ஒத்துப் போகவேண்டிய தருணங்கள் காட்டப்படுகின் றன. அவ்வாறு கூட்டாக சேர்ந்து எழுதும் போதே சமூக தளத்தில் குறித்த பத்தி ரிகை பொறுப்புணர்வுடன் செயற்படும் அந்தஸ்தை பெறுவதும் படிமமாக்கப் பட்டுள்ளது. இது நமது நாட்டுப்பத்திரிகைகளுக்கு ஒரு பாடமாகலாம்.

ஒரு நாளின் பத்திரிகை வெளியீட்டிற்கான தலைப்புச் செய்தி உட்பட அனைத்து காரியங்களும் நிறுவுற்ற பின்னர், அச்சு இயந்திரத்துக்கான விரல் விசை வழங்கப்படும் கணத்தில் கூட, பிந்திக் கிடைக் கும் சூடான செய் திக்காக அன்றைய தின முழு உழைப்பையும் வீண டிக்க செய்யும் கணங்களும் இந்த தொழிலில் உண்டு. இதனையும் ''கோ'' குறிப்பிடத் தவறவில்லை.

ஒரு பத்திரிகை நிறுவனத்தின் நிலைத்திருப்பும், அது பெற்றுக் கொள்ளும் அங்கீகாரமும் வெளியிடும் செய்திகளின் உண்மைத் தன்மைகளிலேயே தங்கி யிருக்கிறது. பொது வாசகனின் நிராக ரிப்பும், ஏற்றுக் கொள்ளலும் இதனை அடிப்படை யாகக் கொண்டதே. நம் மூரில் பல பத்திரிகைகள் உருவாகியதும் பின்னர் காணா மலேயே போனமைக்கும் இது தான் காரணம். வழங்கப்படும் புதுச் செய்திகளும் வெறுமனே எழுத்தாக மட்டும் அமையாமல் உச்சமான காட்சிப்படுத்தல் ஊடாக அச்சிடப்படும் பத்திரிகைகளுக்கே வாச கரின் தனித்துவம் அளிக்கப்படுகிறது என்ற செய்தியை கற்பிக்கும் படம் ஒன்று தமிழில் வெளியாகியுள்ளமை இதுவே முதல் தடவையாகலாம் நமது நாட்டில் அரசியல்வாதிகளால் பத்திரிகையாளர்கள் காணமல் போவது, தாக்கப்படுவது பத்திரிகை நிறுவனங்கள் தக்கிரையாக் கப்படுவது, அடித்து நொறுக்கப்படுவது போன்றன வழமையானவை. இவை களைச் சாதாரண வாசகன் செய்தியாக வாசித்து அறிந்துகொள்ள செய்திகள் கிடைக்கின்றன.

ஆனால் தாக்கப்படும் அந்தக் கணத்தின் கொந்தளிப்பை, அரசியல் வாதி களின் பிரச்சினைகளை , அச்சுறுத்தல்களை சமாளிக்க மேற்கொள்ளப்படும் அதி ரடி நடவடிக்கைகளை காட்சிப்படுத்தியிருப்பது, இனி அவ்வாறான செய்தி களைப் பத்திரிகைகளில் படிக்கும் போதெல்லாம் படத்தில் இடம்பெறும் தாக்கு தல் காட்சியை நினைவுபடுத்தும்.

சினிமா என்று பார்க்கும் போது ''கோ'' தோல்விக்கு அண்மித்தான ஒரு படம். ஆனால் பேசிய கதை பத்திரிகைதுறை பற்றி கொஞ்சம் சிந்திக்க வைத்திருக்கிறது. ✱

அட்சயன்

# ஜெனிவாவில் 'கார்' காலம்

உலகின் மிக பிரமாண்டமான ஓட்டோ மொபைல் கண்காட்சியான 'ஜெனிவா மோட்டார் ஷோ', அண்மையில் நடைபெற்றது. உலகின் அத்தனை கார் தயாரிப்பாளர்களும் இந்த ஓட்டோ ஷோவுக்கான சுவிட்சர் லாந்து நாட்டில் குவிந்திருந்தனர். ஃபெராரி, லம்போகினி, ஆஸ்டின் மார்ட் டின், ஃபோக்ஸ்வாகன், டொயோட்டா, போர்டு என உலகின் அத்தனை கார் நிறுவனங்களும் இதில் கலந்துகொண்டன. இந்த ஓட்டோ ஷோவில் இந் திய நிறுவனமான டாட்டாவும் கலந்துகொண்டது. அதில் கலந்துகொண்ட சில கார்கள்.

**பக்ஸல்**

இந்தியாவில் நானோ என்றால், உலகத்துக்கு பக்ஸல் என்கிறது டாட்டா. நானோவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டு இருக்கும் பக்ஸல், ஐரோப்பிய நாடுகளை மனதில் வைத்து வடிவமைக்கப்பட்டு இருக் கிறது. நானோவில் 600 சிசி இன்ஜின் என்றால், பக்ஸலில் 1.2 லீற்றர் இன்ஜின். மேல்நோக்கித் திறக்கும் சிஸர் டோர், ஸ்டார்ட் ஸ்டாப் பட்டன், ஸ்பெஷல் டயர்கள் எனப் பல சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கிறது இந்த பக்ஸல்.

**லம்போகினி அவன்டாடெர்**

லம்போகினியின் சுப்பர் ஸ்பெஷல் கார் அவன்டாடெர்.

அடுத்த இரண்டு தலைமுறைகளுக்கு அப்பால் வர வேண்டிய கார் என அவன்டாடெரைப் புகழ்கிறது ஓட்டோ மொபைல் உலகம். இது லம்போகினி முர்சியலாகோவை விட எடை குறைவாகவும், வலு அதிகமாகவும், அதிக மைலேஜ் தரும் வகையிலும் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. 6.5 லீற்றர் V 12 இன்ஜின் கொண்ட அவன்டாடெடர், 691 bhp சக்தியை வெளிப்படுத்து கிறது. 0-100 கி.மீ வேகத்தை வெறும் இரண்டே விநாடிகளில் கடக்கும் இதன் கட்டுப்படுத்தப்பட்ட வேகம், மணிக்கு 300 கி.மீ. மே மாதம் முதல் இங்கிலாந் தில் விற்பனைக்கு வர இருக்கும் இந்த காரின் விலை, இங்கிலாந்தில் இரண்டு கோடி ரூபாய்.

**போர்டு ப-மேக்ஸ்**


போர்டின் புத்தம் புது வரவுக் கார் ப-மேக்ஸ். மினி சைஸ் எஸ்யூவி என்றுதான் இதனை அழைக்கிறார்கள். இந்தியா உட்பட, சின்னக் கார்களுக்கு மார்க்கெட் அதிகம் உள்ள நாடு களில் விற்பனை செய்யப்பட இருக்கும் இந்த ப-மேக்ஸ், 1 லிற்றர் இன்ஜினைக் கொண்டிருக்கிறது. ஐந்து பேர் உட் காரும் இடவசதி கொண்ட இந்த காரில் பல நவீன வசதி களையும் அறிமுகப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது போர்டு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் தேடும் ஏ.எம்.எம்.அலி



உணவுக்கு உருசி தரும் தேங்காய்ப்பால், சம்பலுக்குச் சுவை தரும் தேங்காய்ப்பூ எல்லாமே இந்தத் தேங்காய் என்கிற காயிலிருந்துதான் பெறப்படுகிறதென்பதை இங்குள்ள யாவருமே நன்றாக அறிந்திருப்பர். அதனோடு தேங்காயிலிருந்து பெறப்படும் எண்ணெயில் தயாரான பொரியலும் வறுவலும் சுவைதருவது போல் தேங்காய் நெய்யில் தாளித்த கறியின் வாசத்திலேயே உணவை உண்டுவிடலாம் என்பதும் உண்மையே.

அண்மைக் காலங்களில் சந்தைக்கு வந்த தேங்காய்களின் விலை அதிகரிப்பு அரசியலில் பேசப்பட்டுப் பிரபல்யமானதையும் அறிந்திருப்பீர்கள். தேங்காயின் சிறப்புரைக்கும் வரிகளுடன் தன் உணர்வுரைக்கும் கவிஞரின் கவிதை ஒன்று

**என்றைக்கும் காயாக இருக்கின்ற தேங்காயே**
**இன்றைக்கு நீ ஹீரோ என் வீட்டு அடுக்களையில்**
**உண்டிக்கு நீ இன்றேல் ருசியில்லை உனைவாங்க**
**சந்தைக்கு நான்சென்றேன் தலைநிமிர்ந்து நிற்கின்றாய்**

சந்தைக்குச் சென்று தேங்காய் வாங்க முயன்றால் அங்கே தேங்காயின் கேள்வி அதிகரிப்பால் தலை நிமிர்ந்து நிற்கிறது

**விலைகேட்டால் தலைசுற்றும் விண்ணோக்கி உன்னன்னை**
**குலைபோட்டுக் காய்த்தென்ன குசினிக்குளாதிக்க**
**வலைபோட்டு விலைவிரித்தாய் வறியவர்கள் தம்வீட்டில்**
**உலைபோட்டுச் சோற்றோடு உண்ணும்பூ உன்பூவே**

தேங்காயே உன் விலை ஏறி என் தலை சுற்றுகிறது ஆனால் குசினிக்குள் உன் ஆதிக்கம் குறைவதில்லை. நீயின்றி சோற்றோடு உன் பூவின் பாற்சுவையின்றி உணவை உண்ண முடிவதில்லையே என்கிறார்.

**என்வீட்டில் திண்டாட்டம் இரண்டு துருவலகு**
**முன்கூட்டிச் செய்யாத முட்டாள் தனத்தாலே**
**முட்டைக்குச் சற்றேதான் முழுப்பருமன் உடையவுனை**
**சட்டிக்குள் பிழிந்தூற்றத் தவிக்கின்றாள் என்னில்லாள்**

பெரிய தேங்காய்க்குப் பெரிய துருவலகும் சிறிய தேங்காய்க்குச் சிறிய துருவலகும் வாங்கி வைத்திருந்தாற்றான் விலையேறும் காலத்தில் காசுக்கேற்ற அளவு தேங்காயை வாங்கவும் அதனை எந்தத் துருவலகு கொண்டு துருவவும் இயலும். இப்பொழுது சிறிய முட்டை அளவு தேங்காயை வாங்கி வைத்துக்கொண்டு அதனைத் துருவ மனையாள் படும் பாட்டைக் கண்ட கவிஞர் தவிக்கிறார்.

**மைதிலி.தேவராஜா**

**சாட்டுக்குப் பாலூற்றிச் சமைத்திடலாம் என்றாலோ**
**சோற்றுக்குச் சுவைசேர்க்கும் சொதியாக இருக்காதே**
**நாக்குக்குச் சுவையூட்டும் நல்லகறியொன்றையவள்**
**ஆக்குதற்குத் தேவைநீ ஆயிடினும் விலைபெரிதே**

சோற்றோடு சுவையான சொதி சேர்க்கத் தேங்காய் வேணும் அதிகரித்துவிட்ட தேங்காய் விலையால் அதனை வாங்க இயலாமல் அங்கலாய்த்து நிற்கும் கவிஞரின் வேதனை வளர்கிறது

**தலையாலே நீதந்து தாகத்தைத் தணித்தாலும்**
**விலையாலே எங்கட்கு வேதனையைத் தருகினறீர்**
**நிலையாக இவ்வுயர்வு நீடித்தால் எம்வாழ்வு**
**குலையாதோ தென்னைகளே குறைப்பீரே எம்கவலை**

தென்னைகளே எமது கவலைதீர அதிகம் காய்களைத் தாருங்கள் என்கின்ற கவிஞர் தென்னம்பிள்ளைகளை அதிகம் நாட்டுங்கள் என்றே உரத்தொலிக்கின்றார். கவிஞரின் பிறந்த ஊரான கிண்ணியாவுக்குப் பெருமை சேர்க்கும் எழுத்தாளர் வரிசையில் ஏ.எம்.எம்.அலி அவர்களும் இடம்பிடித்துக் கொண்டுள்ளார். அவரது ''குடையும் அடைமழையும்'' எனும் முதலாவது கவிதைத் தொகுதியிலிருந்து பெறப்பட்ட கவிதையே இது.

1948ஆம் ஆண்டு ஒக் டோபர் மாதம் 13ஆம் நாள் பிறந்தவர். 1974இல் தமது கவிதைகள் மூலம் தன்னை ஒரு கவிஞராக உலகறியச் செய்தவர் தற்பொழுதும் எழுத்துலகோடு தம்மை இணைத் துக்கொண்டுள்ள அவரது இலக்கியப் பணி தொடரும் என நம்புகிறோம். ✱ ✱ ✱

# அருகில் இருங்கள்

கானா மூனா ஒரு முதலாளியார். கானாமூனா என்பது கந்தர் முருகேசர் என்ற அவரது முழுப் பெயரின் சுருக்கம். எல்லோருமே அவரைப் கானா மூனா என்றுதான் அழைப்பார்கள். அவர் ஒரு கூப்பன் கடை வைத்திருந்தார். இரண்டு அறைகளைக் கொண்ட அவரது வீட்டில் ஓரறையைக் கடைக்குப் பயன்படுத்தினார். அவரின் கடையில் கூப்பன் பங்கீட்டுப் பொருட்கள் சிலவும் சவர்க்காரம் தீப்பெட்டி போன்ற ஓரிரு ஏனைய பொருட்களும் விற்பனைக்கிருந்தன. அந்தக் காலத்தில் அரசாங்கம் சில சலுகைகளோடு பொருள்களைப் பெறக் குடும்பத்தினருக்குக் கூப்பன்களை வழங்கியிருந்தது. பாவனையில் இருந்த அந்தக் கூப்பன்களுக்கான பொருள்களை அப்பிரதேச மக்களுக்கு கட்டுப்பாட்டு விலைக்கும் சில சமயம் நிவாரண அடிப்படையில் இலவசமாகவும் வழங்குவதே அவரின் கடையில் நிகழும் பிரதான வியாபாரம். வாராவாரம் ஓரிரு தினங்கள் வியாபாரம் நடக்கும். அத்துடன் அக் கிராமத்து நாட்டுப்புறச் சிறியரக ஆடுகளைச் சினைப்படுத்துவதன் மூலம் நல்ல உயர்ந்த ரக ஆடுகளை இனப் பெருக்கம் செய்வதற்கென்றே இரண்டு பெரிய இனகடா ஆடுகளை வளர்த்து வந்தார். அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் அவருக்குப் போதுமானது. அவரது குடும்பத்தினர் பட்டணத்தில் வசித்தனர். அவருக் கான உணவை உறவினர் ஒருவரின் வீட்டிலிருந்து பெற்று கொள்ளுவார். நல்ல அறிவாளி. தினசரி பத்திரிகைகள் வாசிப் பார். அங்கு கூடும் நண்பர்களோடு அரசியல் பற்றியும் சமூகக் குறைபாடுகள் பற்றியும் பேசுவார், வாதிடுவார். நான் பள்ளிக்கூடம் போகாத நாட்களில் பல வேளைகளில் அவரது கடைக்குப் போவதுண்டு. அப்பொழுதெல்லாம் அன்றைய பேப்பரை என் கையில் தந்து உரத்து வாசிக்கச் சொல் லுவார். அவர் தெரிந்தெடுத்துத் தரும் செய்திகளை நான் வாசிப்பேன். எனது வாசிப்புப் பயிற்சி மேம்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம் என நினைக்கிறேன்.

**நெடுந்தீவு மகேஷ்**

அவர் வளர்த்து வந்த அந்த உயர்ந்த ரக ஆட்டுக் கடாக்கள் இரண்டுமே அழகானவை. கம்பீரமானவை. நீண்ட செவிகளுடன் அவை உயர்ந்து நிற்கும் அழகுக் கோலம் மனத்தை ஈர்க்கும். அவை இரண்டுமே அவரது வீட்டு விறாந்தையில் இருந்த மரத் தூண் கம்பம் ஒவ்வொன்றிலும் கயிற்றில் தனித்தனியாகக் கட்டப்பட்டிருக்கும். அவர் அதன் அயலில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருப்பார். இரவில் அதன் அருகில் போடப்பட்டிருந்த கட் டிலில் கானா மூனா படுத்துக் கொள்வார். அவரின் விறாந்தைத் தூண் கம்பத்தில் கட்டப்பட்டிருந்த ஆடுகளுள் ஒன்று ஒரு நாள் இரவு களவு போய் விட்டது. அதனைக் கள்வர்கள் யாரோ கடத்திக் கொண்டு போய் வெட்டிக் கொன்று தின்று விட் டார்கள். அவரால் அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை. கள்வர்களையும் அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அயலிலிருந்த குளக்கரையில் ஆட்டுத் தோலை மாத்திரம் கண்டெடுத்தனர். மிகவும் கவலைப்பட்டார். எஞ்சியுள்ள அந்த ஓராட்டையும் காப்பாற்ற வேண்டுமே என்ற கவ லையோடு அதனைப் பாதுகாக்கும் உத்திகள் குறித் துச் சிந்தித்தார். ஆட்டின் காலில் கட்டப்பட்டுள்ள கயிற்றை பகலில் தூண்கம்பத்திலும் இரவிலே தூங்கும் போது தனது வலதுகாலுடனும் பிணைத் துவிடுதல் நல்லதென எண்ணினார். இரவில் கள் வர்கள் ஆட்டைக் களவாட வந்தால் காலில் பிணைத் துள்ள கயிற்றின் மூலம் ஆட்டின் அசைவைக் கண்டு கொள்ளலாம் அப்போது விழித்துக் கொண்டு கள்வரைப் பிடித்துவிடலாம், ஆட்டைப் பாதுகாக் கலாம் எனத் தீர்மானித்தார். அதன்படி இரவிலே ஆட்டின் கால் கயிற்றை கானா மூனா தனது காலுடன் இணைத் துக் கட்டிக் கொண்டே நித் திரை செய்தார். சில நாட் கள் கழிந்த பின்னர் ஒரு நாள் காலை யில் அவர் எழுந்து பார்த்த போது ஆட்டின் காலில் கட்டப்பட்டிருந்த கயிறு அருகிலிருந்த மரத் தூணுடன் பிணைக்கப்பட்டிருந்தது. அதன் படி பார்த்தால் கானா மூனாவே அந்த மரத் தூணுடன் கயிற்றால் பிணைக்கப்பட்டிருந்தார். ஆட்டைக் காணவில்லை. அவர் ஏமாந்து போனார். கள்வர்கள் அவரின் தந்திரத்தை வென்று விட்டார்கள். அன்று காலையிலேயே அந்தச் செய்தி அறிந்த பலரும் அங்கு வந்து அவரிடத்தில் துக்கம் விசாரித்தனர். நானும் போயிருந்தேன். கானா மூனாவோ தன்னுடைய மடைத் தனத்தால் தான் ஆடு தொலைந்ததாகச் சொல்லி வேதனைப்பட்டார். ஆட்டுக்கும் தனக்கும் இருந்த நெருக் கத்தை அந்தக் கயிறு தான் குழப்பிப் போட்டது எனச் சொல்லி வருத்தப்பட்டார். அது தான் உண்மையும் கூட ஏனென்றால் ஆட்டுக்கும் அவருக்கும் இருந்த இணைப்பு ஒரு கயிற்றால் குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு எட்டிப் போயிருந்ததாலேயே ஆடு களவு போனது. ஆட்டை அருகிலேயே வைத்துக் கொண்டு தூங்கி இருந்தால் கள்வர்கள் ஆட்டைக் களவாடும் அசைவு தெரிந்திருக்கும். ஆட்டிற்கும் தனக்குமான நெருக்கம் குறைந்தமையாலேயே ஆட்டை இழக்க நேரிட்டது என்பது அவரது கணிப்பு.

இவ்வாறுதான் எமது நாட்டில் பல்வேறு நோக்கங்களுடனும் கொள்கைகளுடனும் தோன்றும் கட்சிகளும் அவற்றின் செயற்பாடுகளும் அமைந்து விடுகின்றன. அதனால் கட்சிகளின் அங்கத்துவ இழப்பைக் காப்பாற்றவும் இயலாமல் போய்விடுகிறது. கட்சிக் கொள்கைகளிலோ செயற்பாடுகளிலோ நெருக்கமான இணைப்போ ஈடுபாடோ இன்றிக் கயிற்றால் கட்டப்பட்டவர்கள் போல அங்கத்தவர்கள் தூரத்திலேயே நிற்கிறார்கள். தாம் இணைக்கப்பட்ட அங்கத்துவக் கயிறுகளால் கட்சியின் கொள்கைகளோடு இணைக்கப்படாமலே தூரமாகி நிற்கிறார்கள். அதனால் அவர்கள் காணாமல் போவதும் கட்சி மாறுவதும் இலகுவாகி விடுகிறது. கட்சியின் நோக்கம் சிதைவுறுவதற்கும் இதுவே காரணமாகும். அவர்கள் தமது கட்சியில் நெருங்கிச் செயற்படவும் கொள்கையில் உறுதியாய் நிலைத்திருக்கவும் நெருக்கம் அவசியமாகிறது. அந்த நெருக்கத்தைப் பெற தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிருவாகக் குழுவினரும் அங்கத்தவர்களுமாகிய ஏனைய தரப்பினரும் நெருங்கி ஒன்றிணைந்து அந்நியோன்னியமாக கருத்துக்களைப் பரிமாறிச் செயற்படுதலை உறுதி செய்தல் வேண்டும். நெருக்கமான உறவு, ஐக்கியம் இல்லையேல் எல் லாமே தொலைந்து போய் விடும். கயிற்றில் கட்டப்பட்ட ஆடுகளைப் போலத் தூரத்தே நின்று தொலைந்து போகாமல் அருகில் மிக அருகில் நெருங்கி இருந்து செயலாற்றுங்கள். சிந்தியுங்கள். ✱



தொலையா நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 1 ; செங்குருதி முதல் நீலம் வரை

சந்திரசேகர ஆசாத்



**1886 மே முதலாம் நாள்.**

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரத்தின் ஒரு பெரும் தொழிற்சாலையிலிருந்து புறப்பட்ட அந்தத் தொழிலாளர்களின் பேரணி ஒரு புரட்சிகர எழுச்சியுடன் நகர வீதிகளினூடாக நகர்ந்து கொண்டிருந்தது. இயந்திரங்கள் திடீரென அமைதியடைகின்றன. இரவும் பகலும் இடைவிடாது புகை தள்ளும் தொழிற்சாலைகளின் புகை போக்கிகள் தமது மூச்சை நிறுத்தி விடுகின்றன. அந்நேரம் இயங்கிக் கொண்டிருந்த அத்தனை ஆலைகளின் தொழிலாளர்களும் அப்படியே போட்டது போட்டபடி விட்டு பேரணியில் இணைகின்றனர். பொங்கி வரும் பெருவெள்ளமாக நகரும் ஊர்வலம் எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை முழங்கியவாறு முன் நகர்கிறது. எங்கும் ஒரு புரட்சிகரப் பேரெழுச்சி மேலெழுந்து வானமண்டலத்தையே அதிர வைக்கிறது.

பேரணி நகர மையத்தை நெருங்கிய போது மாடிக் கட்டங்களிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் பாய்கின்றன. குண்டர்களும் ஆலை முதலாளிகளின் கூலிப் படையினரும் தொழிலாளர் மீது கண்மூடித்தமான தாக்குதலைத் தொடர்கின்றனர். இதில் நான்கு தொழிலாளர்கள் உயிரிழந்து விடுகின்றனர். ஆனால் உழைக்கும் மக்கள் பின் வாங்கி விடவில்லை. தாங்கள் ஏற்றி வந்த வெண் கொடிகளை தங்கள் விழுந்த தோழர்களின் குருதிகளில் தோய்த்து செங்கொடிகளாக்கி ஏற்றியவாறு பேரணியைத் தொடர்கின்றனர்.

**1886 மே 04**

சிக்காக்கோ நகரின் புறநகர்ப்பகுதியில் அமைந்த கமர்கட் சதுக்கத்தில் மே முதல் நாள் இடம்பெற்ற படுகொலைகளைக் கண்டித்து ஒரு பொதுக் கூட்டம் நடத்த ஏராளமான பொதுமக்கள் ஒன்று கூடுகின்றனர். சதுக்கத்தில் நிரம்பி வழியும் மக்கள் முன் உரையாற்ற தயாராக தொழிலாளர்களின் தலைவர்கள் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். பொதுக்கூட்டம் ஆரம்பிப்பதற்குச் சில நிமிடங்கள் முன்பாக சனத்திரள் மத்தியில் ஒரு குண்டு வெடிக்க ஒரு பொலிஸ் காரன் கொல்லப்படுகிறான். அதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏராளமானோர் கொல்லப்படுகின்றனர். இச்சம்பவத்தின் அடிப்படையில் பல தொழிலாளர்களின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் நிறுத்தப்படுகின்றனர். முக்கிய தலைவர்கள் பலர் தூக்கிலிடப்படுகின்றனர். வேறு பலருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது.

இச்சம்பவங்களின் எதிரொலியாக ஆஸ்திரியா, ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் போராட்டங்கள் வெடிக்கின்றன. உலகெங்கும் எட்டு மணி நேரக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில் பாரிஸ் நகரில் இடம்பெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் கூட்டத் தொடரில் கார்ல்மாக்ஸ் அவர்களால் மே முதல்நாள் தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் பல நாடுகளில் இந்நாள் விடுமுறை நாளாக்கப்பட்டது. அன்றிலிருந்து உழைக்கும் மக்கள் இதைத் தங்கள் கோரிக்கைகளை உரத்து ஒலிக்கும் ஒரு புரட்சிகர நாளாகக் கொண்டாடி வருகின்றனர். உலக நகரங்களிலெல்லாம் செங்கொடிகளை ஏற்றி தொழிலாளர்கள் நடத்தும் பேரணிகள் உழைக்கும் மக்களின் வலிமையையும், உணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் தனித்துவமாக அமைந்திருக்கும்.

**1953 மே முதல் நாள்!**

இலங்கையில் கொழும்பு, ஹட்டன், யாழ்ப்பாணம், திருமலை போன்ற முக்கிய நகரங்களில் சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றின் தலைமையில் பிரமாண்டமான பேரணிகள் இடம்பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாளித்துவ அடக்கு முறைக்கு எதிராகவும், தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைக் கோரியும் மேடைகளில் முழங்கினர்.

அதன் தொடர்ச்சியாக இலங்கையெங்கும் 1953 ஹர்த்தால் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியே ஈடாடும் அளவுக்கு நாடெங்கும் போராட்டங்கள் வெடித்தன. அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கா பதவியை ராஜனாமா செய்யுமளவுக்கு போராட்டங்கள் வேகமடைந்தன. அதையடுத்து சேர்.ஜோன் கொத்தலாவலை பதவியேற்று கொடிய அடக்குமுறைச் சட்டங்கள் மூலமும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மூலமும் போராட்டங்களை முறியடித்தார்.

**1966 மே முதல் நாள்!**

அந்த நாள்கள் வடக்கில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டங்கள் முனைப்புப் பெற்றிருந்த காலம். அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி மேதினக் கொண்டாட்டங்களுக்குத் தடைவிதித்திருந்தது.

ஆனால் மே நாளன்று மாலை எவருமே எதிர்பாராத வகையில் ராஜா தியேட்டருக்கு முன்பிருந்து சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஒரு ஊர்வலம் செங்கொடிகளை ஏந்தி கோஷமிட்டவாறு ஆரம்பமாகியது. கடைகளில் வேலை செய்து கொண்டிருந்த பணியாளர்கள், வீதியில் நின்ற இளைஞர்கள் எனப் பலரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

சத்திரச் சந்தியில் வைத்து ஊர்வலத்தின் மீது தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன. முக்கிய தோழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். காலப்போக்கில் இடது சாரிகளின் தொழிற்சங்கப்பலம் சிதைக்கப்பட்டது. ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கென தொழிற்சங்கங்களைத் தங்கள் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற அமைத்துக் கொண்டன. செங்கொடிகளை ஏந்திக் கொண்டாட வேண்டிய மே தினம் பச்சை, நீலம் எனப் பலவர்ணங்களில் கொண்டாடும் மரபு ஆரம்பித்தது. அது மட்டுமின்றி இவ்விழாக்கள் அவற்றின் புரட்சிகரத் தன்மைகளை இழந்து வெறும் களியாட்ட விழாக்களாக மாற்றப்பட்டன.

ஆரம்பத்தில் ஜே.வி.பியின் மேதின நிகழ்வுகள் புரட்சிகரமாக இருந்த போதிலும் அதன் இனவாதக் கொள்கைகள் காரணமாகப் பாட்டாளிவர்க்கத்தன்மையை இழந்து விட்டது.

**2009 மே முதல் நாள்!**

அது இலங்கையின் வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத கறையை ஏற்படுத்திய மே நாள். உரிமைக்காக குரல் கொடுத்த மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் அடக்கப்பட்டு ஆயிரமாயிரமாகக் கொன்று குவிக்கப்பட்ட நாள். எறிகணை வீச்சுகளும், கொத்து குண்டுகளும், தொலைதூரத் துப்பாக்கி வேட்டுக்களும் பீரங்கிகளும் தமிழ் மக்களின் குருதியை ஆறாக ஓடவிட்ட நாள். கேட்க நாதியற்றவர்களாகத் தமிழ் மக்கள் மடிந்த நாள்! உலகத் தொழிலாளி வர்க்கத் தின் உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கும் அந்த நாளில் இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைக் குரலுக்கு மரணங்களாலும் மனித உரிமை மீறல்களாலும் சமாதி கட்டிக் கொண்டிருந்தது. அன்று ஆண்கள் பெண் கள், குழந்தைகள், முதியோர், நோயாளிகள் ஊனமுற் றோர் என்ற பேதமின்றி அனைவரும் கொல்லப்பட் டுக் கொண்டிருந்தனர்.

**2011 மே முதல் நாள்!**

போரின் இறுதி நாள்களின் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ள இவ்வேளையில், அவ்வறிக்கைக்கு எதிரான எழுச்சியாக இம் மேதினம் அமைய வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறைகூவல் விடுத்துள்ளார்.

தொழிலாளர்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் உரி மைக்குரலாக ஓங்கி ஒலிக் கும் மே தினம் உரிமைகள் மீறப்பட்டமையைச் சுட் டிக்காட்டும் ஒரு அறிக்கைக்கு எதிராகப் பயன்ப டுத் தப்படுவது எவ்வளவு நகைப்புக்கிடமானதும் வினோ தமானதும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

வேலையற்றோர் பிரச்சினை, வாழ்க்கைச் செலவு உயர்வு, எரிபொருள், மா என்பவற்றின் விலை யேற்றம் உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு. வாக்களிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படாமை. தொழிலாளர்கள், மாணவர்களின் போராட்டங்கள் மீதான ஒடுக்குமுறை, அரசாங்கம் தொடர்ந்து மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறமை போன்றவற்றின் அடிப்படையில் மே தினம் இவற்றுக்கு எதிரான உழைக்கும் மக்களின் குரலாகவே அமையவேண்டும். ஆனால் மக்களை அவற் றிலிருந்து திசைதிருப்பி, ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக குரல் கொடுக்கத் தூண்டும் கபட நாடகத்தை சிங்கள மக்கள் புரிந்து கொள் வார்களா? என்பது சந்தேகம் தான். ஏனெனில் அவர் கள் இன வெறிச் சிந்தனையாலும் போர் வெற்றி மமதை யாலும் போதையூட்டப்பட்டுள்ளனர்.

எனினும் இந்நிலை நீடிக்கப் போவதில்லை. உண்மைகள் அம்பலப்படும் போது- ஆட்சியாளர் களின் தேசிய வேடம் கலையும் போது - தமிழ் ,சிங்கள,முஸ்லிம் மக்கள் அனைவருமே விழிப்படைந்து ஒன்றிணைவார்கள்.

அன்று மேதினம் தன் புரட்சிகரத் தன்மையுடன் ஏந்தப்பட்ட செங்கொடிகளுடன் ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் வெற்றித்தினமாகக் கொண்டாடப் படும்.

* * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

01, மே - 07, மே, 2011

85,ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன்: 0115738005

பாக்ஸ்: 0115517944 - 5

E-mail: editorial@sudaroli.com


## இவர்களால் எப்படி முடியும்?

இலங்கை அரசு என்னதான் கேட்டுக் கொண்டும், நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. பகிரங்கப்படுத்திவிட்டது. இறுதிப் போரில் பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரித்தமைக்கு கொழும்பு அரசுதான் முக்கிய பொறுப்பாளி என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

ஆண்கள் நீதி விசாரணை இன்றிச் சுடப்பட்டார்கள், பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்கள், லட்சக்கணக்கான அப்பாவி மக்கள் தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள் என்று அந்த அறிக்கை உண்மைகளை வெளிச்சம் போட்டுக்காட்டி உள்ளது.

மனிதாபிமான மீட்புப் போர் என்று அரசு சொன்னதன் பொருள் என்ன என்பதை ஐ.நா. அறிக்கை இப்போது முழு உலகுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டது.

இவை எல்லாம் இதற்கு முன்னர் தெரியாதவைகள் அல்ல. இத்தகைய இழப்புக்கள் பற்றியும் மக்களுக்கு ஏற்பட்ட மோசமான துன்பங்கள் பற்றியும் கதைத்தவர்கள், சுட்டிக்காட்டியவர்கள் எல்லோரையும் முன்னர் தேசத்துரோகிகள் என்றது அரசு. இந்த நாட்டில் அரசுக்கு எதிராக எதைச் சொன்னாலும் அவர்கள் அந்தப் பட்டத்தாலேயே அடக்கப்பட்டார்கள்; மீண்டும் எதிர்த்து நின்றால் கொல்லப்பட்டார்கள்.

ஐ.நா. இலங்கைக்கு வெளியே இருப்பதால் அதனைத் தேசத் துரோகி என்று கூறமுடியாத நிலையில், நாட்டைச் சீர்குலைக்க நிபுணர் குழுவும் ஐ.நா. பொதுச் செயலாளரும் சதி செய்கிறார்கள் என்று குமுறி வெடிக்கிறார்கள் அமைச்சர்கள்.

நிபுணர் குழுவின் அறிக்கை, நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைத்துவிடும் என்றும் அரசு கண்ணீர் வடிக்கிறது. இது நீலிக் கண்ணீர் என்பது அதைச் சொல்பவர்கள் உட்பட எல்லோருக்கும் தெரியும்.

ஐ.நாவின் அறிக்கையை அரசு முற்றாக நிராகரித்து விட்டது. அது அடிப்படைகளற்றது; நம்பத்தகுந்த ஆதாரங்கள் கொண்டு தயாரிக்கப்படாதது என்று கூறுகிறது. ஊரைக் கூட்டி இந்த விடயத்தைச் சொல்லும் அரசு அதே விடயத்தை ஐ.நாவுக்கு மட்டும் நேரில் சொல்ல மறுக்கிறது.

அதேசமயம் அரசு சார்பில் கருத்துக்களைத் தெரிவிக்கும் அமைச்சர்களோ செய்தியாளர் மாநாடுகளில் வெடித்துக் குமுறுகிறார்கள். ''எங்கள் படையினரை ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டோம்'' என்பதுதான் அவர்களது உணர்ச்சிகரமான கோஷம். என்னை மின்சாரக் கதிரையில் அமர வைத்தாலும் படையினரைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று ஜனாதிபதியும்கூட உரத்துக் குரல் எழுப்பி இருந்தார்.

உணர்ச்சிவசப்படும் மனிதர்கள் எல்லோரும் விடும் தவறு போன்று அரசும் இந்த விடயத்தில் அவசரப்பட்டு வார்த்தைகளை விடுவதன் மூலம் சில உண்மைகளை உளறி வைக்கிறது.

ஐ.நா. அறிக்கை தவறானது என்றும் அதில் கூறப்பட்டுள்ள தவறுகள் எதனையும் படையினர் செய்யவில்லை என்றும் கூறும் அரசு, அதே படையினரைக் காட்டியும் கொடுக்க மாட்டோம் என்கிறது.

தவறு செய்யாதவர்களை எப்படிக் காட்டிக் கொடுக்க முடியும்? நான் யாரையும் காட்டிக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னால் தவறு செய்தவர்களை எனக்குத் தெரியும் என்றுதானே அர்த்தமாகிறது.

தவறு செய்தவரை எனக்குத் தெரிந்திருக்கும் போது மட்டும்தான் நான் அவரைக் காட்டிக் கொடுக்காமல் இருக்க முடியும். நடக்காத தவறு ஒன்றுக்காக, தவறிழைக்காத குற்றவாளி ஒருவரை எப்படிக் காட்டிக் கொடுக்காமல் இருக்க முடியும்?

இன்றைய அரசின் நிலைப்பாடு இதுதான். நான் காட்டிக்கொடுக்கமாட்டேன் என்பதன் மூலமே தமது படையினர் தவறு செய்தவர்கள்தான் என்பதை அரசும் அமைச்சர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்த உண்மையைப் பகிரங்கமாகச் சொல்லத்தான் அவர்களுக்குத் துணிவில்லை. அப்படிச் சொல்லிவிட்டால் எங்கே தங்கள் அரசியல் பறிபோய்விடுமோ, அந்த வெற்றிடத்தை எதிர்க் கட்சியினர் பயன்படுத்தி விடுவார்களோ என்று அஞ்சுகிறார்கள்.

தமது அரசியல் சுயலாபத்துக்காக ஒட்டு மொத்த மக்களையும் ஏமாற்றி, ஒரு பகுதி மக்களின் உணர்வுகளைச் சிதைக்கும் இத்தகைய அரசியல் தலைவர்களால் எப்படி இதயசுத்தியுடன் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முடியும்?

# "எங்களை அழ விடுங்கள்!"

இணையங்கள் மீண்டும் உஷாரோடு தம் வியாபாரத்தை தொடங்கிவிட்டன. இரத்தமும் சதையும் கொப்பளிக்கும் புகைப்படங்களும், வீடியோக்களும் அவற்றின் சந்தையை நிரப்பி நுகர்வோரைக் கூவியழைக்கத் தொடங்கியுள்ளன. தலையில்லாமல், முகம் சிதைந்து, கற்பழிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு என ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொருவிதமான கதையைச் சொல்கின்றன. ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையின் வரவோடு, இதுவரையும் ஒளித்து வைத்திருந்த கோரக் காட்சிகளையெல்லாம் காட்டி விடவேண்டும் என்ற கங்கணத்தோடு இணையங்கள் களமிறங்கியிருக்கின்றன. யாருக்கும் தெரியவராது என்ற மமதையோடு ஆடப்பட்ட ஊழியின் சிறு பகுதியை யாவது இந்த ஒளிப் படங்களும், காட்சிக் கோர்வைகளும் வெளிப்படுத்துவதை மறுக்க முடியாது தான். எனினும் ஊழியின் கோரத்தை இவை மீண்டும் கண்முன் நிறுத்தி இறுதிப் போரின் வதைபட்ட மனங்களின் காயங்களை பிராண்டி, சீழ் வடியச் செய்கின்றன.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. கால் போன படி நீள்கின்ற அதன் பயணத்தில் முள்ளிவாய்க்கால் ஊழி இரண்டு வருட தூரத்துக்கப்பால் தொலையப் போகின்றது. ஆயினும் தாம் அடக்கி வைத்திருந்த கண்ணீரை வெளியேற்றும் வழி தெரியாது இன்னமும் அவலத்தின் வாழ்வு தான் வன்னி மக்களுக்கு. இறுதிப் போரின் போது எந்தப் பக்கமும் தப்பிக்க முடியாத பெரு வெளி ஒன்றில் சிக்குண்ட மக்களை நோக்கி போரின் நாக்குகள் ஆவேசத்துடன் நீண்டு சென்றன. யாரையும் தப்பிக்க விடக் கூடாது என்ற எண்ணத்தில் போர் தன் இரைகளை - அப்பாவி மக்களை - ஆற அமர அடித்து வீழ்த்தியது. தம் கண் முன்னே வீழ்ந்து, இறந்தவர்களை அடக்கம் செய்யக் கூட அவகாசமற்றவர்களாக ஓட வேண்டிய நிலை மக்களுக்கு. உயிரை மட்டுமாவது தக்கவைப்பதற்கான அந்த ஓட்டத்தில் குண்டடி பட்டு வீழ்ந்த துணையை, பிள்ளையை, சகோதரனை தூக்கிக் கொண்டு வரவோ, உயிரைக் காப்பறவோ போராயுதங்கள் விடவில்லை. குற்றுயிரோடு காயம் பட்டவர்களை அப்படியே விட்டுவிட்டு வந்தவர்கள் அநேகம் பேர்.

ஆனாலும் எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு, நடந்தவற்றுக்கெல்லாம் 'சுபம்' போட்டுவிட்டார்கள் ஆட்சியாளர்கள். சரணடைந்த மக்களின் வாய்கள் இறுகத் தைக்கப்பட்டன. தப்பித் தவறியேனும் எவரும் வெளியாருக்குத் தம் அவலங்களை, கண் முன் நிகழ்ந்த ஊழியைச் சொல்ல முடியாத படி எங்கும் புலனாய்வுக் கண்கள் பொருத்தப்பட்டன. நலன் புரி நிலையம் என்ற பெயரில் ஆடு மாடுகளைக் கூட அடைத்து வைக்கத் தகுதியற்ற முகாம்களில் கூட்டம் கூட்டமாக மக்கள் அடைக்கப்பட்டனர். போராட்டத்துக்கு துணை புரிந்ததாகக் கூறி குடும்பங்களிலிருந்து பல ஆண்கள் களவாடப்பட்டனர். பின்னர் அவர்களில் சிலர் வெகு தூரங்களிலுள்ள தடுப்பு முகாம்களில் இருப்பதாகச் செய்தி வந்தது. பலரின் நிலை இன்னமும் என்னவென்று தெரியாது.

எல்லாவற்றையும் காலம் ஆற்றும் என்ற வாக்கு இவர்கள் விடயத்தில் பொய்த்துப் போனது. காணமல் போன அல்லது கண் முன்னே மரணித்த உறவுகளின் நினைவுகள் மக்களை விடாமல் துரத்துகின்றன. செத்தவீடுகளில் அழாமல் இருப்பவர்களைக் கூட அவர்களின் முதுகில் அடித்தாவது அழவைப்பார்கள். உள்ளிருக்கும் எல்லாத் துயரங்களையும் கண்ணீர் கழுவிக் கொண்டு வெளியே வந்துவிடும் என்பதே இதற்கான காரணம். ஆனால் மாபெரும் மனிதப் பேரவலத்தைச் சந்தித்துவிட்டு வந்தவர்களுக்கு அழுவதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.


கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் முதலாண்டு நினைவுக்காக அமைதியான முறையில் மக்கள் பிரார்த்திப்பதற்குக் கூட அதிகாரம் தடை விதித்திருந்தது. ஆனாலும் களியாட்டங்களும், அருவருக்கத்தக்க இசை நிகழ்வுகளும் அரசின் அனுசரணையோடு போரால் வாடிய மக்களின் இடங்களில் அமளிதுமளியாக அரங்கேறின. இப்போது - இன்னும் சில நாள்களில் - முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் இரண்டாம் ஆண்டு வரவிருக்கிறது. ஆனால் இப்போது கூட தம் உறவுகளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவதற்கு அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகம் தான். 'ஓ' வென்று ஒரு முறை அந்த நாளில் அழுது புலம்பி இத்தனை நாளும் அடைகாத்திருந்த சோகங்களையெல்லாம் வெளியே கொட்டுவதற்கு மக்கள் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் இது தான் -

''எங்களுக்கு நீதி தராவிட்டாலும் பரவாயில்லை. ஒரேயொரு முறை எங்களை அழுவதற்காவது அனுமதியுங்கள்''. ✱

பிரமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுவுக்குள்ளா மலையகம்?

மலையக மக்கள் மதுவுக்கு அடிமையாகி விட்டனர் எனக் கேவலப்படுத்துவதையும், அதனால் தான் மலையக மக்களின் வாழ்க்கைத்தரம் பின் தள்ளப் பட்டுள்ளது என்று விமர்சிப்பதையும் முதலில் கைவிட வேண்டும் என வலியுறுத்துகின்றார் அனுபவமிக்க தொழிற்சங்கவாதியும், முன்னாள் பிரதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் கடமையாற்றியவருமான வீ. புத்திரசிகாமணி.

உலகளாவிய அளவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி மதுவுக்கு அடிமையானவர்கள் பட்டியலில் ரஷ்யா முதலாவது இடத்திலும் இலங்கை இரண்டாவது இடத்திலும் இருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

உண்மை நிலைமை இப்படி இருக்கும் போது தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் தான் மதுவுக்கு அடிமையாகி உள்ளனர் என்று ஒரு பக்கமாக குற்றம் சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று புத்திரசிகாமணி கூறுகின்றார்.

மலையக சமூகம் பின் தள்ளப்பட்ட சமூகம் அல்ல. வளர்ந்து வரும் சமூகம் என்பது தான் சரி.

உலகிலேயே ஆகக் கூடுதலாக உழைப்பவர்களும் குறைந்த சம்பளத்தைப் பெறுபவர்களும் இந்த மலையகத் தொழிலாளர்கள் தான்.

**இரா.புத்திரசிகாமணி**

குறைந்த வருமானத்தைப் பெற்ற போதும் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்காக தமது வருமானத்தில் கூடிய அளவு தொகையை இவர்கள் செலவிடுகின்றனர்.இதனால் தான் இன்று மலையகத்தில் டாக்டர்களும், சட்டத்தரணிகளும், கணிசமான எண்ணிக்கையிலான பட்டதாரிகளும் உருவாக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சில தனியார் தோட்டங்களைத் தவிர பெரும்பாலான தோட்டங்களில் முன்பு லயன் என்று கூறப்பட்ட குடியிருப்புகளை தோட்ட உரிமையாளர்களினதோ, வேறு அமைப்புகளினதோ உதவி இன்றி தமது சொந்தச் செலவில் இந்தத் தொழிலாளர்கள் தமக்கேற்ற வகையில் மாற்றி அமைந்துள்ளதைக் காணமுடியும்.

தனியார் தோட்டங்கள் இதற்கு அனுமதிப்பதில்லை. அவர்களும் அனுமதி வழங்கினால் அத்தோட்டத் தொழிலாளர்களும் தமது குடியிருப்புகளை வசதிமிக்கதாக மாற்றி அமைத்துக் கொள்வார்கள் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

ஒரு காலத்தில் தோட்டத்தொழிலாளர்கள் கைநாட்டு போடுபவர்கள், படிப்பறிவற்றவர்கள் என்று கூறப்பட்டது. அந்தக் கருத்து இன்று மலையேறி விட்டது. இன்று வீட்டுக்கு வீடு படித்த இளைஞர், யுவதிகள் இருக்கின்றனர்.

அரசாங்க உத்தியோகம் கிடைக்காவிட்டாலும், தமது கல்விக்கேற்ப, தகுதிக்கேற்ப தனியார்துறைகளிலும் சுயதொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள இளைஞர்களும், யுவதிகளும் தமது பெற்றோரைத் தோட்ட வேலைக்கு செல்ல விடாது நிறுத்தித் தாமே பாதுகாக்கின்றனர் என்பதும் பெருமையளிக்கின்றது.

> **உலகிலேயே ஆகக் கூடுதலாக உழைப்பவர்களும் குறைந்த சம்பளத்தைப் பெறுபவர்களும் இந்த மலையகத் தொழிலாளர்கள் தான்.**

இதனால் இன்று பெருந் தோட்டத் துறையில் தொழிலாளர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சுமார் 40 வீத மானதொழிலாளர்கள் இன்று தோட்டத் தொழிலைக் கை விட்டு விட்டனர்.

எஞ்சி உள்ள 60 வீதமான தோட்டத் தொழிலாளர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டுள்ளனர்.

உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பள உயர்வும் கிடைப்பதில்லை.

கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டு ஒப்பந்தத்தின்படி நாட்சம்பளம் 405/= ரூபா என்று கூறப்பட்டாலும் அடிப்படை சம்பளம் 285/= ரூபா மட்டுமே. பத்து சதவீதமானவர்களால் மட்டுமே 405/= ரூபா பெற முடிகிறது. பல்வேறு காரணங்களினால் குறித்த தொகை மறுக்கப்பட்டு வருகின்றது.

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, விடுமுறை போனஸ், சேவைக்கான பணம், பிரசவ சகாயப்பணம், நட்டஈடுகள் என்பன வழங்கப்படும் போது அது 285/= ரூபா நாட் சம்பளம் என்ற அடிப்படையிலேயே கணிப்பிடப்படுகின்றது.

இப்பொழுது இரண்டு பேர் வேலை செய்யும் ஒரு சிறு குடும்பத்தின் செலவு ஆயிரம் ரூபாவையும் தாண்டி விடுகின்றது. இன்றைய நிலைப்படி இவர் கள் தினசரி 1000 ரூபாவை ஊதியமாகப் பெறு வதில்லை.

உணவு, உடை, உறையுள், பிரயாணம், மின் கட்டணம் என்பனவற்றுடன் தமது பிள்ளைகளின் படிப்புச் செலவுக்காகவும் பெரும் பகுதியைச் செலவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கான வருமானம் கிடைக்கின்றதா ? இல்லையே.

எட்டு மணி நேர வேலை என்று பெயருக்குக் கூறப்பட்டபோதும் பெண் தொழிலாளர் பத்து மணி நேர வேலை செய்கின்றனர்.மாலையில் இருந்து தேயிலைத் தோட்டங்களில் தாம் பறித்த கொழுந்துகளைத் தலையில் சுமந்து சென்று தொழிற்சாலைகளில் ஒப்படைத்து விட்டு வீடு திரும்பும் போது நன்றாகவே இருட்டி விடுகின்றது.

எனவே தொழிலாளர்களின் சம்பளம் இதய சுத்தியுடன் தீர்மானிக்கப்பட வேண்டும். கூட்டு ஒப் பந்தம் செய்பவர்கள் கீழ்கண்ட விடயங்களை மனதில் கொள்ள வேண் டும்.

* அடிப்படைச் சம்பளம் 500/= ரூபாவுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.
* இதர கொடுப்பனவுகள் 300/= ரூபாவுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.
* ஞாயிறு, போயா மற்றும் அரச விடுமுறை தினங்களில் வேலை செய் தால் அதற்கான ஒன்றரை நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும்.
* ஒன்றரை நாள் சம்பளம் வழங்கப்படுவதைக் காரணம் காட்டி கூடுதலாக வேலை வாங்கக்கூடாது.
* அடிப்படைச் சம்பளம் உட்பட சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மொத்த சம்பளத்திற்கும் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் உட்பட சகல கொடுப்பனவுகளும் கணிப்பிடப்பிட வேண்டும்.

இந்த அடிப்படையில் சம்பளம் கணிப்பிடப்பிட்டால் எட்டுமணி நேர வேலைக்கு எண்ணூறு ரூபா சம்பளம் என்று அமையும்.

உன்மையாகவே தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டவர்கள் இவற்றை முன் வைப்பார்களா?

இதை விட்டு விட்டு தோட்டத் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையாகி விட்டனர். அனால் தான் முன்னேற்றம் இல்லை. என்று ஒரு தலைபட்சமாக குறை கூறுவதை கைவிட்டு உருப்படியான திட்டங் களை உரியவர்கள் முன் வைக்க வேண் டும். * * *

# மோதிர விரல் வசியம்

**ஆண்களுக்கு ஆள்காட்டி விரலைக் காட்டிலும் மோதிர விரல் நீளமாக இருக்கிறதா? இப்படி நீளமான மோதிர விரல் உள்ள ஆண்கள் அதிக வசீகரத்தைப் பெற்ற நபர்களாக உள்ளனர். மோதிர விரல் நீளமான ஆண்களே கவர்ச்சியானவர்கள்.**

**அவர்கள் தான் எங்களது நீண்ட கால வாழ்க்கைத் துணையாக வர வேண்டும் என பெண்கள் கூறுகிறார்கள். இந்தப் புதிய ஆய்வினை ஜெனிவா பல்கலைகழக ஆய்வாளர்கள் மேற்கொண்டனர்.**


**ஆள்காட்டி விரலுக்கும், மோதிர விரலுக்கும் உள்ள விகிதம் பாலின ஹோர்மோனுடன் தொடர்புடையதாக உள்ளது. ஆள்காட்டி விரலை விட மோதிர விரல் நீளமாக இருக்கும் ஆண்களை பார்க்கும் போது, பெண்களுக்கு ஹோர்மோன் அதிக அளவில் தூண்டப்படுகிறது.**

**இதனால் மோதிர விரல் நீளமாக உடைய ஆண்கள் பெண்களுக்கு கூடுதல் அழகாகத் தெரிகிறார்கள். இடது கையை விட வலது கையில் மோதிர விரல் நீளமாக இருக்கும் பட்சத்தில் பெண களை அது வெகுவாகக் கவர்கிற என ஆய்வுத் தலைவர் வைத்தியர் லே பெர்டன்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுகளம் சரியில்லையாம்



டெல்லியில் உள்ள பெரோஸ் ஷா கோட்லா மைதானம் சிறியதாக மாற்றியமைக்கப்பட்டதே அதிக அளவில் சிக்ஸர்கள் அடிக்கப்பட்டதற்கு காரணம் என பஞ்சாப் கப்டன் கில்கிறிஸ்ட் குற்றம்சாட்டியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி அணி 231 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் ஆடிய பஞ்சாப் 202 ஓட்டங்கள் எடுத்து தோல்வி கண்டது. இந்த ஆட்டத்தில் மொத்தம் 23 சிக்ஸர்களும், 41 பவுண்டரிகளும் அடிக்கப்பட்டன.

இந்த நிலையில் மைதானம் குறித்து கில்கிறிஸ்ட் கூறியதாவது: நாங்கள் 200 ஓட்டங்களுக்கு மேல் குவித்த போதும், 29 ஓட்டங்களால் தோல்வி கண்டோம்.

நிச்சயம் பவுண்டரிகள் எல்லைகளின் தூரம் குறைக்கப்பட்டுள்ளது. துடுப்பாட்ட வீரர்கள் எளிதாக சிக்ஸர் அடிக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மைதானத்தின் அளவை குறைப்பது சில நேரங்களில் தோல்விக்கும் வழிவகுத்துவிடும்.

இந்த தோல்விக்கு தனி ஒரு நபரை காரணம் சொல்ல முடியாது. பீல்டிங் மற்றும் பந்துவீச்சில் தேவையான அளவுக்கு சிறப்பாக செயல்படவில்லை. மைதானத்தில் பனிப்பொழிவு அதிகமாக இருந்ததும் ஒரு காரணம் என்றார்.✱

# எல்லாமே இவன் காலில்



பிரிட்டனில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சம்பியன் லீக் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் அடித்த அபாரமான கோல்கள் மூலம் பீலே, மரடோனா ஆகியோர் சாதனையை லயனல் மேர்சி சமன் செய்துள்ளார். ரியல் மட்ரிட் அணிக்கெதிரான இந்தப் போட்டியில் தோல்வியின் விளிம்பில் நின்ற பார்சிலோனா அணியைத் தனது கோல்மூலம் 2:0 என்ற அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றுள்ளார் மேர்சி. இதுவரை இத் தொடரில் அவர் 52 கோல்கள் அடித்து உதைபந்தாட்ட ஜாம்பவான்களான மரடோனா, பீலே ஆகியோரின் சாதனைகளை எட்டிப்பிடித்துள்ளார்.

சம்பயன் லீக் தொடரில் மரடோனா, பீலே ஆகியோர் 52 கோல்களை அடித்து சாதனை வீரர்களாக வலம் வந்தனர். அந்தச் சாதனையை நெருங்கிக் கொண்டிருந்த சிடோனே ஸிடேன் உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். அதன் பின்னர் அந்தச் சாதனை எவராலும் நெருங்கப்படமுடியாத ஒன்றாக இருந்தது. எனினும் இந்தப் பருவகாலத்தில் தன்னுடைய கால் வித்தையை அபாரமாக வெளிப்படுத்திய லயனல் மேர்சி, அரையிறுதிப் போட்டியின் போது லீக் போட்டியில் அதிக கோல்கள் போட்டவர்கள் வரிசையில் இணைந்துகொண்டார். இறுதிப் போட்டியிலும் மேர்சியின் கால்கள் தமது அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தும் ஆனால் சம்பியன் லீக் போட்டிகளில் அதிக கோல்களைப் போட்ட வீரர் என்ற சாதனையை தனதாக்கிக்கொள்ள மேர்சியால் முடியும்.

# தகுதியான தலைவர்தானா?

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்ஷான் புதிதாகப் பதவியேற்றுள்ளார்.உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் இலங்கை தோல்வியுற்றதைத் தொடர்ந்து அணித்தலைவர் பதவியில் இருந்து சங்ககார விலகினார். இதன்பின் ஐ.பி.எல் போட்டிகளில் இலங்கையணி வீரர்கள் தமது கவனத்தை திருப்பியிருந்த நேரத்தில், புதிய தலைமைத்துவம் பற்றிய அறிவிப்பும், இங்கிலாந்துடனான போட்டிகளுக்கு முன்னதாக நடைபெறவுள்ள பயிற்சிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கை வீரர்கள் உடனடியாக நாடு திரும்பவேண்டும் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. உலகக்கிண்ண இறுதிப்போட்டியைக் கண்டுகளிக்கச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்தவையும், விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்தகமகேவையும் இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் உரிய முறையில் உபசரிக்கவில்லை என்பதாலேயே இலங்கை வீரர்கள் ஐ.பி.எல் போட்டிகளை இடைநடுவிலேயே கைவிட்டுவிட்டு வரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.



டில்ஷான் அவசரமாக நாட்டுக்குத் திரும்பி தலைமைப் பொறுப்பை கையேற்ற பின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஐ.பி.எல். போட்டிகளை விடவும் தேசிய அணிக்கே வீரர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனத் திருவாய் மலர்ந்துள்ளார். தலைவரான அடுத்த நொடியே இலங்கைக் கிரிக்கெட் சபையின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஆமாம் சாமி போடுபவராக மாறியுள்ள டில்ஷான் , உண்மையிலேயே அணித்தலைவர் பதவிக்கு தகுதியானவர்தானா? என்பது விவாதத்துக்குரிய விடயம்.

1999 ஆம் ஆண்டு சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான டில்ஷான் ஆரம்ப கட்டத்தில் மத்தியவரிசை வீரராகவே களமிறங்கி வந்தார். சகலதுறை வீரராக மிளிர்ந்த டில்ஷான் அணியில் நிரந்தர இடத்தைப்பிடித்துக் கொண்டார்.எனினும் அவருடைய தனிப்பட்ட நடத்தை காரணமாக டில்ஷான் இடையிடையே அணியில் இருந்து தூக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றன. ஒருமுறை தென்னாபிரிக்காவுக்கு இலங்கையணி சென்ற போது, இரவு விடுதியொன்றில் குடித்துக் கும்மாளம் இட்டதாகவும், வெளிநாட்டு மங்கை ஒருவரை ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் டில்ஷான் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.ஆனால் அவையெல்லாம் காலப்போக்கில் மறைந்து போயின. அதன் பின்னர் மும்பயிலும் இவ்வாறான கேளிக்கை விடுதியில் அணியின் உத்தரவை மீறி, விருந்துகளில் கலந்து கொண்டு சர்ச்சையைக் கிளப்பினார்.

இதன் பின்னர் சங்ககார அணித்தலைவராகப் பதவியேற்ற பின்னர் அணியின் துடுப்பாட்ட வரிசையில் மாற்றத்தைக் கொண்டுவந்தார்.அதுவரையும் நடுத்தர வீரராகக் களமிறங்கி வந்ததால், முதலில் மந்தமாக தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்து இறுதி ஓவர்களிலேயே அதிரடி காட்டுவது டில்ஷானின் ஸ்டைலாக இருந்தது. ஆனால் சங்ககாரவின் புண்ணியத்தால் டில்ஷான் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்பட்டதால் போட்டியின் தொடக்கத்தில் கட்டாய 'பவர் பிளே'யை நன்கு பயன்படுத்தி அதிரடியில் இறங்கினார். அதற்கு கைமேல் பலனும் கிடைத்தது. எதிரணியின் பந்துகள் எல்லைக் கோட்டை முத்தமிட்டன. இதுவரையும் அதிரடித்துடுப்பாட்டத்துக்கு சனத் ஜெயசூரியாவை மட்டுமே நம்பியிருந்த இலங்கையணிக்கு டில்ஷானின் அதிரடி நம்பிக்கையளித்தது. டில்ஷானின் அதிரடி பலம் பெற, ஜெயசூரியா அணியில் இருந்து ஓரங்கட்டப்படுமளவுக்கு நிலைமை மாறியது. ஒருநாள் போட்டிகளில் மாத்திரமல்லாது 'ருவென்ரி-20' போட்டிகளிலும் டில்ஷானின் கை ஓங்கியது. இலங்கையணியின் வெற்றிக்கு டில்ஷானின் இருப்பு அவசியமானதொன்றாக மாறியது.

எனினும் பலமுறை முக்கியமான போட்டிகளில் டில்ஷான் அணியின் காலை வாரியதுமுண்டு. உலகக்கிண்ண 'ருவென்ரி-20' இறுதிப்போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக டில்ஷான் சொதப்பியதாலேயே இலங்கையணி கிண்ணத்தை கைப்பற்றமுடியாமல் போனது. அத்தோடு இவ்வருடம் நடைபெற்ற உலகக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் இறுதிப்போட்டியிலும் இந்திய அணிக்கெதிராக வழக்கத்துக்கு மாறாக மந்தமாக டில்ஷான் ஆடினார். இல்லாவிட்டால் இலங்கையின் ஸ்கோர் இன்னும் உயர்ந்திருக்கும்.

இதைவிட இந்திய அணிக்கெதிரான போட்டி ஒன்றில் இந்திய வீரர் ஷேவாக் சதமடிப்பதைத் தடுக்க சுழல் பந்து வீச்சாளர் சுராஜ் ரண்டிவிடம் முறையற்ற பந்தை வீசுமாறு டில்ஷான் ஆலோசனை வழங்கியதாகவும் சர்ச்சை எழுந்தது.

அத்தோடு எதிரணியின் ஆட்டத்தால் அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டு தன் ஆட்டத்தைக் கோட்டைவிடும் சுபாவம் டில்ஷானுக்குண்டு. அதனாலேயே மேலே சொல்லப்பட்ட இரண்டு இறுதிப்போட்டிகளிலும் டில்ஷான் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்றொரு விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

இவ்வாறு தலைமைத்துவத்துக்கான தகுதிகளில் பலவற்றைக் கொண்டிருக்காத டில்ஷான் அரசியல் தலையீடுகள் காரணமாகவே அணித்தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. பொதுவாகவே ஆரம்ப வீரர்களாக அதிரடியில் கலக்கியவர்கள் அணித்தலைவர்களானதும் துடுப்பாட்டத்தில் மோசமான பெறுபேற்றையே வெளிப்படுத்தியுள்ளனர். அந்த நிலை டில்ஷான் விடயத்திலும் தொடருமா? அல்லது இலங்கையணி வெற்றிப்பாதையில் செல்லத் தொடங்குமா? என்பதை இங்கிலாந்துடனான தொடர் தெட்டத் தெளிவாகச் சொல்லிவிடும்.✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும் சீனாவும் காலை வாரி விடுமா?

**போ**ரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நாவின் நிபுணர் குழு விடுத்துள்ள அறிக்கையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணப் பல்வேறு வியூகங்களை இலங்கை வகுத்துச் செயற்படுத்திவருகின்றது.

பலகோடி ரூபா செலவிட்டுச் சர்வதேச நிறுவனங்களை வாடகைக்கு அமர்த்தி இலங்கைக்கு நற்பெயர் கிட்ட முயற்சிகளை இலங்கை எடுத்த போதும், அவை பயனற்றுப் போய்விட்டன.

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வந்த ஜி.எஸ்.பி+ சலுகை கைவிட்டுப் போனது. இப்போது போர்க்குற்றம் வந்து நிற்கிறது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க மறுத்து, அந்த மக்களுக்கு எதிராகக் கொடுமைகளை இழைத்ததன் காரணமாக, மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் எனப் பல நெருக்குதல்கள் இலங்கை மீது வந்து குவிந்துள்ளன.

இந்த நெருக்குதல்களில் இருந்து தப்பிப் பிழைத்து எழுந்து நிற்பது என்பது உடனடியாக சாத்தியமற்றது.

போர்க் குற்றச்சாட்டு வந்து வீழ்ந்ததும், இலங்கை பல்வேறு தரப்புகளுடனும் தொடர்பு கொண்டது. சில தரப்புக்கள் ஆதரவு கொடுக்க முன்வந்தன. சில தரப்புக்கள் எதிர்ப்புக் காட்டியுள்ளன.

குறிப்பாக இந்தப் போர்க் குற்றச்சாட்டு தொடர்பான ஐ.நாவின் அறிக்கையை இலங்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜனநாயக மக்கள் முன்னணியும் மட்டுமே வரவேற்றுள்ளன.

ஏனைய கட்சிகள் எல்லாம் அந்த அறிக்கைக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

அண்டை நாடான இந்தியாவும் இதுவரை நிபுணர் குழு அறிக்கை குறித்து உத்தியோகபூர்வமாகத் தனது கருத்து எதையும் விடவில்லை. ஆனால் தமிழகத்தில் எதிர்ப்பு அலை வலுப் பெற்றுள்ளது. சகல கட்சிகளும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துகிறது.

முதல்வர் கருணாநிதி, எதிர்க்கட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா போன்றவர்களும் ஐ.நா. அறிக்கையை வரவேற்றுள்ளனர்.

இந் நிலையில், பங்களாதேஷுக்கு விஜயம் மேற்கொள்ள முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராகச் செயற்படத் தமக்கு ஆதரவு வழக்க வேண்டும் என ஜனாதிபதி கேட்டுள்ளார். ஆனால் இந்தியா சிவப்புக் கொடி காட்டியுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

★ போர் முடிவடைந்தவுடன் ஓர் அரசியல் தீர்வு காணப்படும் என்று தமக்கு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

★ போரின் பின் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட பல்வேறு தடைகள்.

★ திருகோணமலை சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்துக்கு பல்வேறு இடையூறுகள்.

★ கொழும்பு - தூத்துக்குடி படகுச் சேவை, காங்கேசன்துறைமுக அபிவிருத்தி, ரயில்பாதை அமைத்தல், போன்ற திட்டங்களை ஆரம்பிக்க தடைகள்.

மேற்கண்ட விடயங்களில் இந்தியாவுக்கு எதிரான போக்கை இலங்கை கடைப்பிடித்ததால், ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை விடயத்தில் இந்தியா மாறுபாடான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தமது திட்டங்களுக்குத் தடை போடும் இலங்கைக்காக எவ்வாறு சர்வதேச மட்டத்தில் அந்த நாட்டைப் பாதுகாக்க குரல் கொடுக்க முடியும் என்று இந்தியா ராஜதந்திரி ஒருவர் கேள்வி எழுப்பினார்.

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராகச் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு ஆதரவு திரட்டவோ, இலங்கைக்கு ஆதரவாக நிற்கவோ இந்தியா முன்வரமாட்டாது என்று ராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

பெயருக்கு நிபுணர்குழு அறிக்கை தொடர்பாகக் கவனிக்க உயர்மட்டக் குழு ஒன்றை இந்தியா நியமித்துள்ளது. அவ்வளவுதான் என்று அந்த ராஜதந்திரி மேலும் கூறினார்.

இந்தியாவின் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஏதும் வராத நிலையில், இந்தியா நிபுணர்குழு அறிக்கையை எதிர்க்கிறது என்று தெரிவிக்கும் செய்தி ஒன்றை இலங்கை வெளியிட்டிருந்தது.

இந்தியாவின் நிலைப்பாட்டை அடுத்து, போர்க் காலத்தில் இரு நாடுகளும் அமைத்த மூவர் கொண்ட குழுவை இந்தியாவுக்கு அனுப்ப அரசு முயற்சி எடுத்தது.

ஜனாதிபதியின் சகோதரர்களான பஸில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, லலித் வீரதுங்க ஆகிய மூவர் கொண்ட அந்தக் குழுவைத் தமது மூவர் கொண்ட குழு மே மாத இறுதிவரை சந்திக்க நேரம் இல்லை என. இந்தியா இலங்கையிடம் தெரிவித்துவிட்டதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை குறித்து இதுவரை சீனா கருத்துக் கூறாத நிலையில், சீனா தமக்கு ஆதரவாக நிற்கிறது என்று இலங்கை அறிவித்துள்ளது.

அந்த விடயம் உண்மையா? பொய்யா? என்பது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூட்டிய ராஜதந்திரிகளின் சந்திப்பில் சீனத் தூதர் கலந்துகொள்ளாது தவர்த்ததன் மூலம் வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

இந்த முக்கிய சந்திப்புக் குறித்து கொழும்பில் உள்ள சீனத் தூதருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. தகவல் அவருக்குக் கிடைத்தது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் பீரிஸின் ராஜதந்திரிகளுக்கான சந்திப்பில் சீனத் தூதர் பங்கேற்கவில்லை.

இந்தச் சந்திப்பை சீனத் தூதர் புறக்கணித்தமை பல்வேறு ஊகங்களை எழுப்பியுள்ளது. நேரமின்மை காரணமாகச் சீனத் தூதர் பங்கேற்கவில்லையா?

இலங்கைக்கு எதிரான அறிக்கை குறித்துத் தனது கருத்தை வெளியிட சீனா விரும்பவில்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

மொத்தத்தில் இந்தியாவும், சீனாவும், ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை விவகாரத்தில் இலங்கை பக்கம் நிற்பதை விரும்பவில்லைப் போல் தெரிகிறது.

ஹெல உறுமய கூறுவது போன்று, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த நாடுகளுக்கு நேரில் சென்றுதான் ஆதர வைப் பெற முனைய வேண்டுமோ தெரியவில்லை.★

யாழவன்

# கூட்டமைப்பை அரசு ஏமாற்றும் பின்னணி

சர்வதேசத்தால் கண் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசு- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு ஏமாற்றத்தில் தான் முடியுமா என்ற கேள்வி எழுப்படுகிறது.

தமிழரின் இனப்பிரச்சினை மற்றும் அன்றாடப் பிரச்சினைக்குத் தனது தரப்பு நிலைப்பாட்டை இலங்கை அரசு முன்வைக்காத காரணத்தால் பேச்சின் எதிர்காலம் கேள்விக்குறி நிலைக்கு வந்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் யோசனையை கூட்டமைப்பு முன்வைத்தது. அது தொடர்பாக அரச தரப்பில் இருந்து எந்தவித பதிலும் இன்னமும் வெளிவரவில்லை.

பேச்சு ஆரம்பமான ஜனவரி 10 ஆம் திகதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை கூட்டமைப்பு முன்வைத்தது. அவை தொடர்பாகவும் ஆக்கபூர்வமான செயற்பாடு எதையும் அரச தரப்பில் காணப்படவில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் விடயம் அந்த அன்றாடப் பிரச்சினையில் முக்கியமானது.

முதலாவது பேச்சிலேயே அந்த விடயத்தை கூட்டமைப்பு அரசிடம் முன்வைத்தது. அடுத்த கட்டப் பேச்சில் அவற்றுக்கான தீர்வை முன்வைப்பதாக அரசு தெரிவித்தது.

அதன் பின்னர் 2ஆம் கட்டப் பேச்சின் போது அரசு தடுத்து வைத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை வவுனியாவில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவில் பார்வைக்கு வைப்பதாகத் தெரிவித்தது. அது நடக்கவில்லை.

மூன்றாம் கட்டப் பேச்சிலும் மீண்டும் இந்த விடயத்தைக் கூட்டமைப்பு முன்வைத்தது.

கூட்டமைப்பு - அரச பிரதிநிதிகள் தடுப்பில் உள்ளவர்களை நேரில் சென்று பார்வையிட ஏப்ரல் 16 ஆம் திகதி நிர்ண யிக்கப்பட்டது. அந்தத் திகதியில் வசதியில்லை என்று அதற்கு முதல் நாள் அரசு அறிவித்தது.

மீண்டும் கடந்த 24 ஆம் திகதி வவுனியாவுக்கு சென்று ஆராய்வோம் என்று அரசுத் தரப்பால் கூட்டமைப்புக்கு அறிவிக்கப்பட்டது. இதன்படி கூட்டமைப்பினர் அன்றைய தினம் வவுனியா சென்றனர். அங்கு அரசு தரப்பு பிரதிநிதிகள் வரவே இல்லை.

தமிழ்க் கைதிகளின் பட்டியலை வெளியிடும் விடயத்தில் இழுத்தடிப்புச் செய்யும் அரசு எப்படி இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கப் போகிறது என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

ஐ.நாவின் நிபுணர் குழுவின் அறிக்கையின் பிரகாரம் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழரின் பட்டியலை வெளியிட்டு சிக்கலில் மாட்ட அரசு விரும்பவில்லைப் போலும்.

தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை அரசு வெளியிட்டால், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளின் விவரங்கள் அதில் இல்லையானால், அதற்குப் பதில் கூற வேண்டிய இக்கட்டு நிலை தோற்றுவிக்கப்படலாம் என அஞ்சியே பட்டியலை வெளி யிடுவதை அரசு தாமதப்படுத்துகிறதா என்று கூட்டமைப்புக் கேள்வி எழுப்புகிறது.

அரசு பட்டியலை வெளியிட்டு, அதில் முக்கிய உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் இல்லையெனில், கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களுக்கு அரசு பதில் கூறவேண்டிய நிலை ஏற்படலாம்.

முக்கிய உறுப்பினர்களின் மனைவிமார், உடன் பிறப்புக்கள், தமது கணவனையோ, மகனையோ இறுதிக் கட்டப் போரில் இராணுவம் பிடித்துச் சென்றதாகவே, சரண் அடைந்ததாகவே சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர்.

அவர்கள் பெயர்கள் அரசின் தடுத்து வைத்திருப் போரின் பட்டியலில் இல்லை எனில், அவர்களுக்கு என்ன நடந்தது என்ற காரணத்தை அரசு வெளியிட வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதன் காரணமாகத் தடுத்து வைத்துள்ளவர்களின் பட்டியலை வெளியிட அரசு பின்னடிப்பதாகக் கருதப்படுகிறது.

இந்த விடயத்திலேயே, அதாவது தடுத்து வைத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடயத் திலேயே இழுத்தடிப்புப் போக்கைக் கடைப்பிடிக்கும் அரசு இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வை முன் வைக்கப் போகிறது என்று கேள்வி எழுப்புகிறது கூட் டமைப்பு.

தொடர்ந்தும் அரசு இழுத்தடிப்புப் போக்கை கடைப்பிடிக்குமானால் பேச்சில் இடம் பெறும் விடயங்களை எல்லாம் பகிரங்கப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறுகிறது கூட்டமைப்பு.

அரசு - கூட்டமைப்பு பேச்சு நல்லிணக்கத்தைக் காணும் திசையில் செல்கிறதா? அல்லது முறியும் நிலையை நோக்கிச் செல்கிறதா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்களுக்குக் காதல் மனிதர்களுக்குக் காய்ச்சல்



இளைய அப்துல்லாஹ்

இங்கு லண்டனில் எங்களது வீட்டில் இருந்து பிறைட்டன் கடற்கரைக்கு போக காரில் ஒன்றரை மணிநேரம் பிடிக்கும்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள். கடந்த வாரம் முழுக்க 26° செல்சியசுக்கு மேல் தான் வெயில் அடிக்கிறது. இலங்கையில், சென்னையில் இருப்பது போல இருக்கிறது காலநிலை இங்கே.

ஒரு பக்கம் சந்தோஷமாகவும் மறுபக்கம் கவலையாகவும் இருக்கிறது.

சந்தோஷம் வெயில். கவலை வேலை. வேலைப் பளுவுக்கு முன்னால் எங்கும் தூரப்பயணம் போக முடியாமல் இருக்கிறது.

பக்கிங்ஹம் அரண்மனைக்கு முன்னால் உள்ள துலிப் மலர்கள் எல்லாம் பூத்துக் குலுங்குவதைப் பத்தரை மைல்கள் தூரத்தில் இருந்தும் தொலைக் காட்சியில் தான் பார்க்கிறோம். போய்ப் பார்க்க வேண்டும். நேரம் கிடைக்குது இல்லை. வெயில் வந்தாலே இங்கு லண்டனில் உள்ள அரைவாசிப் பேருக்கு 'ஹேஃபீவர்' என்கின்ற மகரந்தக் காய்ச்சல் பிடித்து விடுகிறது.

அடுத்த 20 வருடத்துக்குள் 30 மில்லியன் பிரிட்டன் வாசிகளுக்கு மகரந்தக் காய்ச்சல் பிடித்து ஆட்டப் போகிறது என்று வைத்தியசாலைகள் சொல்கின்றன.

லண்டன் காரருக்கு பெரும் சாபம் தான் இது. குளிருக்காக ஆறுமாதம் வீட்டுக்குள் முடங்கிப் போய் இருக்கின்ற ஆள்கள் இனிமேல் வெயில் அடித்தாலும் வெளியில் போக முடியாது.

மூக்கு ஒழுகிக் கொண்டே இருக்கும் நோய் இது. எந்த விதமான சுகத்தையும் அனுபவிக்க முடியாதவர்களாக 30 மில்லியன் மக்கள் இருக்கப் போகிறார்கள். குறிப்பாகச் செக்ஸ்.

இந்த 'ஹேஃபீவர்' வந்தால் மூக்கு அரிப்பு, தும்மல், நாசியில் பிராண்டல் எல்லாம் இருக்கும். வெளியில் போக முடியாது. இளவேனில் கால பூக்களின் மகரந்தச் சேர்க்கை நடத்தும் காலத்தில் மனிதர்கள் அதனை சுவாசிக்கும் பொழுது வருகின்ற ஒவ்வாமை தான் இது.

இந்த ஒவ்வாமைக்கு மருந்து கிடையாது. ஆனால் மூலிகை மருந்து இருக்கிறது என்று அஞ்சலா ஜெகநாதன் போன்ற மூலிகை மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

உடனடி மருந்துகளை பெரிய பெரிய விளம் பரங்களைப் போட்டு விற்கிறார்கள். ஆனாலும் மூக்கு ஒழுகியபடி திரிகிற வெள்ளைக் காரரையும் எங்கடை சனங்களையும் பார்க்க பரிதாபமாய் இருக்கும்.

மூக்குப் பிடிக்கிற பேப்பருக்கே ரீ.வியில் விளம்பரம் போடுகிறார்கள். லண்டனிலும் பேர்மிங்ஹாமிலும் 45 வீதமானவர்களுக்கு 'ஹேஃபீவர்' பிரச்சினை இருக்கிறதாம். அது இல்லாத மனிதர்களுள் நானும் ஒருவன்.

கடற்கரையில் இந்த மகரந்தத் தொல்லை குறைவாக காணப்படுகிறது. ஏனெனில் கடற்காற்று அதனை அள்ளிக் கொண்டு போய் எங்காவது தள்ளிவிடுகிறது.

பூவின் மகரந்த மணிகளை 'மக்களின் கண்ணுக்கு தெரியாத எதிரி' என்று டெலிகிராஃப் பத்திரிகை எழுதுகிறது. மகரந்தம் தொடர்பான ஒரு படத்தைப் போட்டு இப்படி எழுதியிருக்கிறார்கள்.

தொடர்ச்சியான நோய் இது. கண்ணெரிதல், மூக்கு அரிப்பு, மூக்கிலிருந்து நீர் வடிதல் என்று இருப்பதனால் அதிகமான மக்களுக்கு மனஅழுத்தம் வருகிறது.

மற்றவர்களை நெருங்கி கதைக்க முடியாது. ஒரே தும்மல். இவ்வாறான பிரச்சினைகள் மூலமாக மனஅழுத்தத்தினால் அதிகமானவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அது மனநோய்வரை இழுத்து செல்வதாகச் சொல்கிறார்கள் வைத்திய நிபுணர்கள்.

இப்பொழுது 83 மில்லியன் பவுணுக்கு வருடா வருடம் குளிசை, மூக்கு ஸ்பிறே, கண் சொட்டு மருந்து என்று விற்பனையாகின்றன. இந்த ஹேஃபீவர் வந்தால் போகாது தொடர்ந்து வருடாவருடம் தொந்தரவு பண்ணிக் கொண்டே இருக்கும்.

இதனால் வெயில் காலத்தில் கடற்கரைக்குத் தான் மக்கள் அள்ளுப்படுகிறார்கள். பாடசாலை விடுமுறை நாட்களில் கார் காராக கடற்கரைப் பக்கம் தான் ஒதுங்குவார்கள் வெள்ளைக் காரரும் மற்றவர்களும். பிரிட்டனைச் சுற்றி வர எங்கும் கடற்கரைதான். லண்டனில் உள்ள எங்களைப் போன்றவர்கள் குறைந்தது ஒன்றரை மணி நேரம் கார் ஓடிப்போக வேண்டும். ✱

# நான் பிரபுதேவாவின் ரசிகை



மாப்பிள்ளைக்குப் பிறகு தமிழ்ச் சினிமாவில் பேசப்படும் நடிகை ஆகியுள்ளார் ஹன்சிகா. அம்மணியின் வாய்ப்புக் கேட்டு இப்போது பெரிய 'கியூவே' காத்திருக்கிறது. ''மாப்பிள்ளை படம் பார்த்தவர்கள் என் நடிப்பை பாராட்டுகிறார்கள். படம் வெளியாகும் வரை மனம் திக் திக் என்றே இருந்தது. பயந்துகொண்டே இருந்தேன். ஆனால் வெளியானதற்குப் பிறகு தமிழ் ரசிகர்கள் என்னைத் தங்கள் வீட்டுப் பெண் போல் ஏற்றுக்கொண்டதை நினைத்து பெருமையாக இருக்கிறது. தொடர்ந்து, நல்ல பாத்திரங்களில் நடித்துப் பெயர் வாங்க வேண்டும் என்பது என் லட்சியம்'' என்கிறார் ஹன்சிகா.

**எங்கேயும் காதல் படம் எப்படி?**

அழகான காதல் கதை. காதல் இல்லாமல் இந்த உலகத்தில் எதுவும் இல்லை. காதல்தான் எல்லாவற்றுக்கும் முக்கியமானதாக இருக்கிறது. இந்தப் படத்தில் இந்தியாவில் இருந்து பாரிஸ் வரும் ஜெயம் ரவி மீது, அங்கேயே இருக்கும் எனக்குக் காதல் வருகிறது. இந்தக் காதல் என்னாவாகின்றது? ஒன்று சேர்கிறார்களா, இல்லையா என்பதுதான் கதை. சந்தோஷமாகப் பரபரப்பாக இருக்கும். ஜெயம் ரவி எனக்கு நிறைய உதவி பண்ணினார். நல்ல நடிகர். அடிக்கடி ஜோக் சொல்லிக் கொண்டே இருப்பார். அவரோடு நடித்தது எனக்கு நல்ல அனுபவம்.



**பிரபுதேவா இயக்கத்தில் நடித்தது எப்படியிருக்கிறது?**

அவர் சிறந்த இயக்குநர் என்று எல்லாருக்கும் தெரியும். ஹிந்தியில் அவர் இயக்கிய 'வான்டட்' பெரிய வெற்றி. அதற்கு முன்னர் அவரின் நடனங்களைப் பார்த்து ரசித்திருக்கிறேன். நான் அவரின் ரசிகை. அவர் இயக்கத்தில் எனக்கு நடிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது அதிஷ்டம் தான்.

**படத்தின் மொத்த நடிப்பும் பாரிஸில்தான் நடந்ததா.?**

ஆமாம். இதுவரை படமாக்கப்படாத புது இடங்களில் பிரபுதேவா படமாக்கியிருக்கிறார். ஒவ்வொரு இடமும் அழகாக இருக்கும்.

**தொடர்ந்து 15 மணிநேரம் படப்பிடிப்பில் கலந்து கொண்டீர்களாமே?**

பாரிஸில் தொடர்ந்து சில நாட்களாக மழை பெய்துகொண்டே இருந்தது. படம் எடுக்க முடியவில்லை. ஏற்கனவே போட்ட திட்டத்தின் படி எங்களுக்குத் தாமதம் ஆனது. உடனே, மழை விட்டு லேசா மேகம் மறைஞ்சதும் தொடர்ந்து 15 மணி நேரம் படப்பிடிப்பு நடத்தி 3 நாள் இடைவெளியைச் சரிசெய்தோம். அது வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

**அடுத்து....?**

உதயநிதி ஸ்டாலின் ஜோடியா, 'ஒரு கல் ஒரு கண்ணாடி', விஜய் ஜோடியா வேலாயுதம் படங்களில் மதுரைக் கிராமத்துப் பெண்ணாக நடிக்கிறேன். இது தவிர இரண்டு தெலுங்குப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். ✱

- சந்திப்பு - மலரவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ரோஜா முள்

மு.சிவநேசன்
sivanesan@usa.com

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் – 11**

**கரோலை மடக்கிப் பிடித்த சுழியன்ஸ், தமக்குத் தெரிந்த பண்ணை வீடொன்றில் அதன் உரிமையாளர்களான தம்பதியரிடம் மயக்க நிலையிலிருந்த கரோலைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு ஒப்படைத்துவிட்டுச் செல்கின்றனர்.**





கரோல் தங்கவைக்கப்பட்டிருந்த அந்தப் பண்ணை வீட்டைச் சூழ நாற்புறமும் அடர்ந்த காடுகள் தென்பட்டன. அமைதியான சூழல். அங்கே யாரும் வர மாட்டார்கள். பண்ணையாருக்கு அறுபது வயது இருக்கும். அரைக்காற்சட்டையுடன் திரியும் அவர் மிகவும் திடகாத்திரமாக இருந்தார். முகம் கர்ண கடூரமாக இருந்தது. பாவம் இவள் எப்படி அவருக்கு வாழ்க்கைப்பட்டாளோ?

நினைவு வந்ததும் கரோலைக் கூண்டில் அடைக்கும்படி உத்தரவு. அங்கே ஒரு பெரிய இரும்புக்கூடு இருந்தது. உள்ளே ஒரு இரும்புப் படுக்கையும் இருந்தது. அதைப் பார்க்கவே கரோலுக்கு பயம் பிடித்துக்கொண்டது.

அவளை ஆதரவோடு அழைத்து வந்து அதற்குள் அடைத்தாள் பண்ணைக்காரி. என்னதான் வசதிகள் இருந்தாலும் - அன்புத் தேன் வழிய அவள் நடந்தாலும் - கூண்டுக் கிளியாக வாழ இவள் தயாரில்லை.

''நீ உள்ளே இரு. இது அவங்கள் வரும் நேரம். வந்து போனபின் நீ வெளியே உலாவ நான் அனுமதிப்பேன். என்னை நீ நம்பலாம்''

''தாங்க்யூ'' என்றாள் கரோல். அவள் சொல்லி முடிக்கவும் ஓசைப்படாமல் கார் வந்து நின்றது. சுழியன்ஸ் இறங்கி உள்ளே வந்தார்கள்.

''கரோல் எங்கே? எப்படி இருக்கிறாள்?''

''கூண்டில் வாடிப்போய் இருக்கிறாள். அவள் என்ன தப்புச் செய்தாளோ? பாவம் நல்ல பெண்ணாகத் தெரிகிறாள்'' என்றாள் பண்ணைக்காரி.

''எங்க விடயத்திலை தலையிடாமல சந்தோஷமா கதையுங்கள். இன்றைக்கு முழுக்க உங்களோடை தான் நாங்கள். நல்ல சாப்பாடு தயார் பண்ணுங்கள்''

இது மைக்.

பண்ணையார் பண்ணைக்கு வெளியே வேட்டைக்குப் புறப்பட்டார். ஏதாவது பிடிச்சுக் காய்ச்ச வேண்டுமே. சுழியன்ஸுக்கு விருந்து வைக்க வேண்டுமே.

சுழியன்ஸ் உள்ளே வந்து கரோலைப் பார்த்தார்கள். அவள் மயங்கியது போலக் கிடந்தாள். கூப்பிட்டுப் பார்த்தார்கள். அசையவில்லை.

அவள் இதயம் படபடவென அடித்தது. வியர்த்துக் கொட்டியது. டேவிட் கொலை செய்யப்பட்ட போது இருளில் அவர்களின் உருவத்தைக் கண்டதே தவிர இன்னும் காணவில்லையே.

மைக் ஒரு மூலையில் நெருப்பு மூட்டினான். இரும்புக்கம்பி ஒன்றை அதில் பழுக்கக் காய்ச்சினான். றொப் ஒரு பிளாஸ்டிக் கோலில் மிளகாய்த் தூளில் குழைத்த குழம்பை பூசி உலர்த்திக் கொண்டிருந்தான்.

இரும்புக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மைக் சூடான கம்பியை அவளின் உள்ளங்காலில் வைத்தான். துள்ளி அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள் கரோல்.

> மயங்கிக் கிடந்த கரோலைக் கண்டதும் பண்ணையாருக்கு நரம்புகள் முறுக்கேறின. அறுபதிலும் ஆசை பிய்த்துக் கொண்டு புறப்பட்டது. நேரம் வரட்டும் இவளை ஒருகை பார்க்கலாம் என நினைத்துக் கொண்டார்.

மிகவும் எச்சரிக்கையாகவே சுழியன்ஸ் உள்ளே வந்தார்கள். இலகுவில் பிடிபடாத வழுக்கு உடைகள், சப்பாத்து, ஹெல்மெட் தடித்த கையுறைகள் எல்லாமே மினுக்கமாக இருந்தன.

மைக் கம்பியைக் காட்டிப் பயமுறுத்தினான். 'நீ மிக அழகி. கண்ட கண்ட இடங்களில் சுட்டு உன் அழகைக் கெடுக்க நான் விரும்பவில்லை. அதற்கு இடம் தராமல் எங்களுடன் ஒத்துழை'.

''நோ! நோ!! என்னை விட்டு விடுங்கள்.'' அழுதாள்.

''டானியல் எங்கே?''

''தெரியாது''

காய்ச்சிய கம்பியை முகத்துக்குக் கிட்டக் கொண்டு போனான் மைக். வெக்கை முகத்திலடித்தது.

''நோ நோ உண்மையில் தெரியாது.''

''உனது வைரங்கள், நகைகள், காசு பணம் எல்லாம் எங்கே?. . . . வீ லவ் யூ. . . .''

''தெரியாது''.

மைக் நெருங்கி வந்தான். அவளை வீழ்த்தினான். ஒத்துழைக்கும்படி மிரட்டினான். கேள்விகளைக் கேட்டான். தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. பாவம் அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

மிளகாய் பொடியை அவள் மீது கொட்டினார்கள். இரத்தம் நெருப்பாக ஓடுவது போல மேனி முழுவதும் உணர்ந்தாள் அவள்.

அவளது அலறலில் அப்பிரதேசம் முழுவதுமே அதிர்ந்து போனது. ஓடிவந்த பண்ணைக்காரி கலங்கிப் போனாள். எந்தப் பெண்ணுக்குமே இந்த நிலை வரக்கூடாது என நினைத்தாள். வேறென்ன செய்ய இயலும்?

''கரோல், டானியல் எங்கே?. . . ''

''தெரியாது. அவனைத் தேடி வந்த இடத்தில்தான் உங்களிடம் மாட்டிக் கொண்டேன். அவனைக் காணவில்லை.''

''எங்கே போயிருப்பான்?''

''தெரியாது'' என்றதும் காரக்கோல் ஆழ இறங்கிக் கொண்டிருந்தது. புழுப் போலத் துடித்தாள் அவள். கத்தினாள். கதறினாள். மயங்கிப்போனாள். உடல் அசைவற்றுப் போனது.

இனி வேலை இல்லை என் நினைத்த சுழியன்ஸ் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டார்கள். மனம் இல்லாமலே அவர்களுக்குச் சாப்பாடு பரிமாறினாள் பண்ணைக்காரி. மறு நாள் வருவதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டனர் இருவரும்.

மயங்கிக் கிடந்த கரோலைக் கண்டதும் பண்ணையாருக்கு நரம்புகள் முறுக்கேறின. அறுபதிலும் ஆசை பிய்த்துக் கொண்டு புறப் பட்டது. நேரம் வரட்டும் இவளை ஒருகை பார்க்கலாம் என நினைத்துக் கொண்டார்.

அவரின் மனைவி கரோலை வெளியே தூக்கி வந்து கிடத்திக் குளிப்பாட்டினாள். காரம் பூசப்பட்ட இடங்களை ஷம்பு போட்டுக் கழுவினாள். உள்ளங்காலில் சூடு பட்ட இடத்துக்கு மருந்து போட்டுவிட்டாள். அவள் செய்கிற எல்லாவற்றையும் வாய் பிளந்து பார்த்து ரசித்தபடி தவித்தார் பண்ணையார்.

அவரின் தவிப்பை அவளும் உணர்ந்தே இருப்பாள். 'கிழத்துக்கு குமரி தேவைப்படுது' என நினைத்திருப்பாள். இவளை அவங்கள் படுத்தியபாடு பண்ணைக் காரியை என்னென்னவோ செய்தது. தான் செத்தாலும் பரவாயில்லை இவளை விடுவிக்க வேண்டும் என நினைத்தாள். அவளும் ஒரு பெண்தானே?

மாலையானதும் கரோல் தெளிந்தாள். உடம்பு வலி மிகக் கடு மையாக இருந்தது. பண்ணைக்காரியை கட்டிக் கொண்டு அழுதாள்.

தருணம் வரும்போது உதவி செய்து தப்ப வைப்பதாக அவள் உறுதி மொழியும் ஆறுதலும் கூறினாள். கரோல் அவளை நம்பினாள். கொஞ்சம் சாப்பிட்டாள். நிறையத் தண்ணீர் குடித்தாள்.

இரவு கொஞ்சம் கலகலப்பாக இருந்தாள். ஒரு காலை நொண்டி நொண்டி நடந்தாள். வெளியே உலாவ அனுமதி கொடுத்தனர் பண்ணைக்காரர். ஆனால் தப்பிப் போகக்கூடாது என நிபந்தனை போட்டாள் அவள். கரோலால் ஓடவும் முடியாது.அவளைப் பார்த்துப் பார்த்துப் பார்வையால் விழுங்கிய பண்ணையாரை மனைவி அவதானிக்கத் தவறவில்லை. கரோலைப்பற்றிய விவரங்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

இரவு பண்ணையார் உறக்கம் இன்றித் தவித்தார். மனைவி குறட்டை விட்டு உறங்கிக்கொண்டு இருந்தாள். எழுந்து வந்து இரும்புக் கூண்டைத் திறந்தார். வந்து கரோலுடன் இதமாகப் பேச்சுக் கொடுத்தார்.

அவள் விருப்பம் இல்லாமலே கதைத்தாள். மனைவியைப் பிடித்துக் கொண்டதால் பண்ணையாரைப் பகைக்க அவள் விரும்பவில்லை. அவரின் சேஷ்டைகளைப் பொறுத்துக் கொள்கையில் விரக்தியின் விளிம்புக்கே அவள் வந்துவிட்டாள். எரிவில் புண்பட்டுப் போயிருக்கும் அவளுடன் அவர் சரச மாடத் துடித்தார்.

அவள் மறுத்தாள். அவர் கட்டாயப் படுத்தவும் அவள் நழுவ முயன்று தன் முழுப்பலத்தையும் பிரயோகித்தாள். அவளால் இயலவில்லை.

பக்கத்தில் படுத்திருந்தவரைக் காணவில்லை என எழுந்த மனைவி நேரே கரோலிடம் வந்தபோது காட்சியைக் கண்டாள். ஒரு இரும்புச்சட்டத்தை எடுத்து கணவனின் மண்டையில் ஓர் போடுபோட்டாள். இரத்தம் பெருக அவன் மயங்கிச் சரிந்தான்.

பத்து டொலர் நோட்டுக்கள் இருபதை கரோலின் கையில் எடுத்து வந்து திணித்தாள். அவளை ஓடித் தப்பும்படி கூறினாள். கணவனைத் திரும்பப்பாராமலே மீண்டும் வந்து படுத்துக் கொண்டாள்.

விடியலோடு சுழியன்ஸ் வந்தனர். வீடு பூட்டிக் கிடந்தது. பண்ணைக்காரி உறங்குவது போல நடித்தாள். கூண்டுப் பக்கம் சுழியன்ஸ் வந்தனர்.

அங்கே கரோல் இல்லை. அவள்தான் பண்ணையாரை அடித்துவிட்டு ஓடுவதாக நினைத்தார்கள்.இவர் சேட்டைக்கு கூண்டுக்குள் போயிருப்பார் என்பது புரிந்தது. சத்தம் போட்டு அவளை எழுப்பினார்கள். ஏதும் விளங்காதவள் போல அவள் முழித்தாள். கணவனுக்காக கதறி அழுதாள். கரோலைத் திட்டினாள். அவளைக் கூட்டிவந்த சுழியன்ஸைத் தான் சபித்தாள். அவர்கள் சுற்று முற்றும் தேடிக் கொண்டு கால் நடையாக உலாவி... இருவரின் முகத்திலும் ஈயாடவில...

(இனியும் முள்ளுக் குத்தும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லெஸ்பியன்கள் போட்ட வழக்கு

**பி**ரிட்டனில் உள்ள முக்கியமான கடற்கரை நகரமான பிறைட்டன் தான் இப்பொழுது பத்தி ரிகைகளின் தலைப்பு செய்தியாக இருக்கிறது.

விசயம் இது தான். ஒரு லெஸ்பியன் ஜோடியை பிறைட்டனில் உள்ள கடற்கரைக் ஹோட்டல் நிர் வாகம் நிராகரித்திருக்கிறது. இது ஒரு பெரும் பிரச்சி னையாக உருவெடுத்துள்ளது.

இங்கு பிரிட்டனில் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்ளுக்கும் சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்று சட்டமே இருக்கிறது.

எப்படி ஆண் பெண் ஜோடிகளுக்கு உள்ள உரிமை எப்படியோ அப்படித்தான் பெண்- பெண், ஆண்-ஆண் ஜோடிகளுக்கும் உள்ள உரிமை. தனி மனித உரிமையில் தலையிடவோ, அல்லது குறுக்கிடவோ அல்லது நிராகரிக்கவோ இங்கு யாருக்கும் உரிமை இல்லை. கிடையாது.

அப்படி இருக்க பிறைட்டன் பேன்ஸ்விக் ஸ்கொயார் ஹோட்டல், றெபேக்கா, நாஸ் என்ற லெஸ்பி யன் ஜோடியை தங்கள் ஹோட்டலுக்கு வரவேண்டாம் என்று சொன்னமை அல்லது அறை கொடுக்காமல் விட்டது இப்பொழுது நீதிமன்றத்தின் படியேறி இருக்கிறது.

ஹோட்டல்கள் இப்படி சொல்வதோ செய்வதோ இங்கு பிரிட்டனில் சட்டப்படி குற்றம். ஹோட்டல், தங்கும் விடுதிகள் குடும் பத்தை மட்டும் அல்லது ஆண் பெண் ஜோடியை மட்டும் உள்ளே விடுவோம் என்று சட்டம் போடமுடியாது. அது தண்டனைக் குரிய குற்றமாகும்.

பிரிட்டனில் 20 நூற்றாண்டில் தன்னினச் சேர்க்கைளர்களுக்கான அங்கீகாரம் படிப்படியாக வளர்ந்து கொண்டே போனது. இப் பொழுது அவர்களுக்கான உரிமைகள் அதிகம். பிரிட்டனில் மட்டும் 36 லட்சம் ஓரினச்சேர்க்கையாளர்கள் இருக்கிறார்கள்.

கே, லெஸ்பியன் இரு பகுதியினரும் இதற்குள் அடக்கம். பிரிட்டனின் சனத்தொகையில் 6 வீதமானவர்கள் தன்னினப் புணர்ச்சியாளர் என்றாலே ஒரு வித முகச்சுளிப்பு இருந்தது இங்கே.

இங்கேயுள்ள கத்தோலிக்க தேவாலயங்களும் தன்னின புணர்ச்சியாளர்களை ஆரம்பத்தில் கண்டித்தன. இது கிறிஸ்தவ மதத்திற்கு புறம்பானது என்று பேசின. ஆனால் அவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க தேவாலயங்களின் வாய்களும் மௌனமாகி விட்டன.

தன்னினப் புணர்ச்சியாளர்கள் இங்கு ஜோடி சேர்ந்து குடும்பமாக வாழ்கிறார்கள். தனி வீடெடுத்து ஜோடியாக இருவரும் வேலைக்கு போய் வந்து, வாழுவதற்கான சகல சட்ட அங்கீகாரமும் அவர்களுக்கு இருக்கிறது.

அவர்கள் பிள்ளைகளை தத்து எடுத்து வளர்க் கிறார்கள். ஆண்கள் இரண்டு பேர் சேர்ந்து வாழும் வாழ்க்கையில் தத்து எடுத்து வளர்க்கின்ற பிள்ளைகள் இரண்டு பேரையும் அப்பா என்றுதான் கூப்பிடுகிறார்கள். அதே போல பெண்கள் இரண்டு பேர் சேர்ந்து வாழும் பொழுது தத்து எடுத்து வளர்க்கின்ற பிள்ளைகள் இருவரையும் அம்மா என்று தான் அழைக்கிறார்கள்.

இங்கு தான் பெரும் பிரச்சினையை கே, லெஸ்பியன் மாரின் பிள்ளைகள் எதிர்நோக்கு கின்றனர்.பாடசாலைகளில் அந்தப் பிள்ளைகளுக்கு அம்மா அல்லது அப்பா இல்லாத குறையினால் அவர்கள் மற்ற பிள்ளைகளால் கேலி பண்ணப்படுகிறார்கள்.

கே, லெஸ்பியனின் வளர்ப்பு பிள்ளைகள் வள ரும் பொழுது மன உளைச்சலுக்கு உள்ளாகி சமூகத்தால் ஒதுக்கப்படும் பொழுது அவர்கள் கிரிமினல்களாக வளருவதாக மனம் தொடர்பான ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

இங்கு பாடசாலைகளிலும் செக்ஸ் கல்வியின் போது கே,லெஸ்பியன் தொடர்பான செக்ஸூம் படிப்பிக்கிறார்கள். 8 ஆம் வகுப்பில் இருந்தே செக்ஸ் கல்வி கற்பிக்கப்படுகிறது.

ஓரினப் புணர்ச்சியாளர்கள் பிரிட்டனில் கல்யாணம் முடித்து வாழ்ந்தால் அவர்களுக்கு வரி, பென்சன் போன்ற வசதிகள் எங்களைப் போன்ற குடும்பஸ் தர்களுக்கு கொடுப்பது போல வழங்கப்படுகின்றன.

ஆனால் என்ன பிரச்சினை என்றால் பொது இடங்களில் பாதைக ளில், பஸ், ரயில்களில், பூங்காக்களில் ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் காதல் செய்யும் பொழுது அல்லது முத்தமிடும் பொழுது பகிரங்க இடங்களில் இருக்கின்ற ஏனையவர்களுக்கு அந்தரமாக இருக்கிறது. இப்பொழுது லண்டனில் இதனை பார்த்து பார்த்து பழகிவிட்டது.

**இளைய அப்துல்லாஹ்**

செக்ஸ் தொடர்பான எல்லா உரிமைகளையும் அவர்கள் கோருகிறார்கள். ஆணும் பெண்ணும் எப்படி செக்ஸ் வைத்துக் கொள்வதற்கு உரிமையோ அதேபோல பெண்ணும் பெண்ணும், ஆணும் ஆணும் செக்ஸ் வைத்துக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது என்பது அவர்களின் வாதம்.

பிரிட்டனிலும் அதற்கான முழு உரிமையும் இருக்கிறது. அவர்கள் செக்ஸ் வைத்துக்கொள்வதற்கான சாதனங்களும் இங்கு கடையில் விற்பனைக்கு கிடைக்கின்றன. வாங்கி உபயோகப்படுத்தலாம்.

இங்கு ஜி.ரி மகஸின் போன்ற பல சஞ்சிகைள் "கே" களுக்கான தனி மாதாந்த சஞ்சிகைகள் வருகின்றன. அவர்களுக்கான தொலைக்காட்சிகளும் இருக்கின்றன.

ஒவ்வொரு வசந்தகாலத்திலும் பெரும் எடுப் பிலான ஊர்வலங்களும் களியாட்ட நிகழ் வுகளும் இங்கு நடைபெறும். கே, லெஸ்பியனினருக்கான உரிமைகளை வேண்டிய ஊர்வலங்களும் நடைபெறும். பல்லாயிரக்கணக்கான தன் இனபுணர்ச்சியாளர்கள் ஒன்று சேர்ந்து இந்த ஊர்வலங்களில் கலந்து கொள்வார்கள்.

குடும்ப வாழ்வில் ஆண்/பெண் கூட்டுசேர்ந்து வாழ்வதில் திருப்தி இல்லை என்றுதான் தன் இன புணர்சியாளர்கள் சொல்கிறார்கள்.

முன்னாள் லண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன், நடிகர் ஸ்டீபன் ஃபிறை, மிக பிரபல்யமான ஒளிபரப்பாளர் கிரஹம் நோட்டன், டேல் வின்டன், போல் ஒ கிரேடி, என்று மிகவும் பிரபலமான 12 ''கே'' ஒளி பரப்பாளர்கள் பிரிட்டனின் ரீவிக்களில் பணியாற்றுகின்றனர். இவர்கள் ஓரின சேர்க்கையாளர்கள். குடும்பமாக வாழ்கின்றனர்.

கடந்த வரும் ஜுன் மாதம் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இங்கு பிரிட்டனில் உள்ள கே/லெஸ்பியன் பிரபலங்களை கூப்பிட்டு மதுபான பார்ட்டியொன்று வைத்தார். அதில் பி.பி.ஸி செய்தி வாசிப்பாளர் ஜேன்ஹில், பாடகர் மத்தியூ ஜேம்ஸ், நடிகை அமன்தா பாரி ஆகியோருடன் தன் இனசேர்க்கையாளர்களான 200 பிரபல்யங்கள் கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் "Mg own Ciuil Partner" என்று பக்கத்தில் உள்ள உதவி பிரதமர் நீக் இளெக்கை பார்த்து அரசியல் ஜோக் ஒன்றையும் அடித்தார் கம ரூன். ஓரின சேர்க்கையாளர்களிடையேயும் திருமணம் பிறகு விவாகரத்து என்ற விடயங்களும் இருக்கின்றன.

இங்கு இளவயது பிள்ளைகளிடத்தும் இந்த ஓரினச்சேர்கை தொடர்பான சிந்தனை வளர்ந்து வருகிறது. அதனால் இங்குள்ள தமிழ் பெற்றோர்கள் பெரிதும் கவலை கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

தனது பிள்ளைக்கு பெண் பிள்ளை என்றால் ஒரு போய் பிரன்டோ அல்லது ஆண் பிள்ளை என்றால் ஒர கேள் பிரன்டோ இருக்கவேண்டு மென்று ஆசைப் படுகின்றனர்.

இல்லாவிடில் பிள்ளை லெஸ்பி யனாகவோ அல்லது கே ஆகவோ ஆகிவிடும் என்ற பெரும் பயம் தான் காரணம் ஏனெனில் அதற்கான வாய்ப்புகள் இங்கு பாடசாலைகளில் அதிகமாக காணப்படுகிறது.

டேவிட் கமரூன், ஒபாமா போன்றவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கான தங்களது ஆதரவை பகிரங்கமாக சொல்லி விட்டனர். இல்லாமல் முடியாது ஏனெனில் அவர்கள் பெரும் வாக்கு வங்கியாக வருடா வருடம் வளருகிறார்கள்.

உலக மாற்றத்தில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தும் ஒரு விடயம் என்றால் அது இப்போது ஓரின புணர்ச்சிதான். * * *




# செல்போன் செல்லங்களே...!

இன்றைய நவீன உலகில் செல்போன் பயன்படுத்தாதவர்களே இல்லை என்று சொல்லும் அளவில் அதன் பயன்பாடு உள்ளது. பாடசாலை மாணவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதே தற்போது கவலைக்குரிய விஷயம்.

பாடசாலைப் பருவத்திலேயே மொபைல் போன்களை அதிகளவில் மாணவர்கள் பயன்படுத்துவதன் மூலம் கவனச் சிதறல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர். செல்போன்களில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சினால் மாணவர்கள் பாதிக்கப்படலாம்.




உடல் ஆரோக்கியமின்மை பிரச்சினை தவிர்த்து மனதளவிலும் அவர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதையும் கல்வியாளர்கள் சுட்டி காட்டுகின்றனர். பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு செல்போன்கள் வாங்கி கொடுப்பதை பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும்.

பாடசாலைக்கு போன்களை எடுத்து செல்ல கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது. இதனை ஆசிரியர்களும் வலியுறுத்த வேண்டும். பாதுகாப்புகருதி பாடசாலைகளில் தொலைபேசி வசதி ஏற்படுத்தி கொடுக்கலாம். பெற்றோர்களின் தொடர்பு எண்களை மாணவர்கள் மனதில் நிறுத்திகொள்ளலாம் என்பது போன்ற ஆலோசனைகளை கல்வியாளர்கள் எடுத்து உரைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## தூக்குமேடையில் என் இதயம்



வலிகள் கொண்ட இதயத்திற்கு
விழிகள் சிந்தும் துளிகள்
ஆறுதல் என்றால் – அந்த
துளிகள்கூட எனக்கிங்கு எதிரி.
பலவிடயங்களை மறக்க வேண்டும்
என்ற நினைவுகளிலேயே
தினம் தினம் இங்கே
தூக்கு மேடையில் என் இதயம்.
நண்பர்களின் இருப்பு இதயங்களில்
என் நட்பின் சுவடுகள்
துருப்பிடித்த நினைவுகளாக.
தினமும் துன்பங்களை
சேகரித்து வைக்கும் இயந்திரமாக
என் இதயம் – இங்கே,
மரணிக்கவும் முடியாமல்
வாழவும் முடியாமல்.

## நெஞ்சத்தின் தேடல்



பிரிவில் துயர் உண்டு என்பதை உன்
உறவில் கண்டு கொண்டேன்
உன் உறவின் பிணைப்பில்
என்னைப் புரிந்து கொண்டேன்
என் எண்ணங்கள் ஒவ்வொன்றும்
நீ போகும் புள்ளிகள் என உணர்கிறேன்
என் நெஞ்சத்தின் தேடலை
உன் விழிகளில் காண்கிறேன்
இனியும் வேண்டாம் பிரிவு
என்றும் உன்னுடன் பிரியாதிருப்பேன்.

- கோபி, வட்டூர்.




## கிழிந்த சட்டை






கண்ணாடித் தொட்டியில் இருந்த
மீன்குஞ்சுகள்
ஒருநாள் துள்ளி விழுந்தன

மாடுகள் தின்னும்
வைக்கோல் கற்றைக்குள்
ஒளிந்து விளையாடின

வேப்பங் குச்சிகளைப்
பொறுக்கியெடுத்து
கரும்பெனச் சப்பித் துப்பின

வயலில் சூடடித்து நீக்கிய
பதர் எல்லாம்
பாற்கஞ்சிக்கென
தலையிற் சுமந்து
நிலத்தில் நீந்தி வந்தன

வீதியிற் போனவர்க்கு
கொல்லைப்புறச் சாமானெல்லாம்
விற்றுப் பிழைத்தன

திருவிழா மேடையில் ஏறி
ஆழ்கடல் பற்றியும்
அதன் அற்புதங்கள் பற்றியும்
நட்சத்திரமீன்களின் அழகு பற்றியும்
அளந்து கொட்டின

இப்படித்தான்
வைக்கோலைச் சப்பித் தின்னும்
மனிதமாடுகள்போல் கதையடிக்கின்றன
தொட்டியில் இருந்து துள்ளிவிழுந்த மீன்குஞ்சுகள்.

- துவாரகன்.



## வளமீயும் தொழிலாளர்



மே தினத்தின் மேன்மையினை
மேலுயர்த்தி மெருகூட்டி
மாதவத்தின் மகிமைதனை
மாநிலத்துக் கீபவர்யார்?

வையகத்தின் வனப்பொளிர
வளமீயும் தொழிலாளர்
மெய்வருத்தி உரமீய
மேதினியே உயர்வுபெறும்.


செய்தொழிலின் சிறப்பதனால்
செகத்தினையே யாளுகின்ற
கைநலத்தின் கருணையினால்
காசினியே களிக்குமம்மா!

உலகத்துத் தொழிலாளர்
உரிமைகளை வென்றெடுக்க
பலமாகக் குரல்கொடுக்கும்
பாங்கான மேநாளாம்!

உயிர்காக்கும் உண்டியினால்
உலகாளும் உத்தமத்தை
பயிராக்கிப் பாரினிலே
படைத்திடுதல் பலமலவோ?

– கூத்தாடி வி.சி.கிருஷ்ணபாலை.

## மே நாள்




## வருவாயா

தேடிப் பார்த்தும் கிடைக்காத
தேசத்து உறவு – நீ
சாதனைகள் படைத்து
சாய்ந்து போனாயா மண்ணில்
துன்பத்தைச் சுமந்து
தடுப்புக் காவல்களிலா இல்லை
உன்
சொந்த உறவுகளுடனா?
தெரியவில்லை
போகும் தெருக்களெல்லாம்
தேடிக் கொண்டிருக்கிறேன்
என்னருகில் வருவாயா,

## கடந்தாலும் காண்கிறேன்

கடந்தாலும் காண்கிறேன்
காலையில் உன்முகம்
காணல் தொலைந்தாலும்
சோலையில் உன் முகச்
சோதியைக் காண்கிறேன்
கனிந்தவுன் பாதமெல்
ஓசை கடந்தாலும்
இனிக்குமுன் பாதமென்
இசைதனைக் கேட்கிறேன்.

- பா.கபிலன், வவுனியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேணாம்... அழுதிடுவன்






தேர்தல் பிரசாரத்தில் விஜயகாந்த் பற்றி பேசிய நடிகர் வடிவேலு, ஒரு சாக்கடை என்று இயக்குநர் அமீர் கூறியுள்ளார். தொடர்ந்து அவரது பேட்டியில், சாமி ஊர்வலத்துக்கும் கூட்டம் வரும். சாவு வீட்டுக்கும் கூட்டம் வரும். வேடிக்கை பார்ப்பது தமிழ் மக்களின் தவிர்க்க முடியாத கலாசாரம். யாரையும் திட்டிப் பேசினால் கூட்டம் கூடத்தான் செய்யும். அந்த மாதிரிதான் வடிவேலுவுக்கும் சிங்கமுத்துவுக்கும் கூட்டம் கூடியது.

விஜயகாந்துக்கு 'கப்டன்' என்ற பட்டம் ஏன் என்று கேட்கிற வடிவேலுவுக்கு வைகைப் புயல் என்ற பட்டம் மட்டும் பொருத்தமா? இந்தப் புயல் எந்த மரத்தைப் பெயர்த்தது? எந்த வீட்டை இடித்தது? வட்டச் செயலாளர் தொடங்கி ரவுடிகள் வரைக்கும் அத்தனை பேருக்கும் பட்டம் கொடுத்தே இந்த சனம் பழகிவிட்டது என்றார் அமீர்.

## பாபா ஆகு...

சாய்பாபா வாழ்க்கை பற்றி ...
நடிக்கிறார். தெலுங்கில் நாகா...
அன்னமாயா, ஸ்ரீராமதாசு ஆ...
ஹிட்டானது. இதையடுத்து ம...
முடிவு செய்துள்ளார் நாகார்ஜு...
சாய்பாபாவாக அவர் நடிக்கிற...
இயக்குனர் கே.ராகவேந்தர் ர...
தற்போது ராஜண்ணா என்ற ...
நாகார்ஜுனா. இந்தப் படத்...
சாய்பாபா படத்தில் நடிக்கிறா...

## திரை விமர்சனம்

# அப்பாவி



அப்பாவி மாணவன் ஒருவன் அடப்பாவி ரக ஆசாமிகளை தீர்த்துக் கட்டி திகில் கிளப்புவதுதான் அப்பாவி படத்தின் மொத்தக் கதையும்! கலெக்டர் அம்மாவுக்கும், எண்ணற்ற ஏழை மாணவர்களை கலெக்டர் ஆக்கிய ஆசிரியர் அப்பாவுக்கும் பிறந்த அப்பாவி மாணவன் பாரதி. அப்பாவின் கொள்கைகளுக்கும், அம்மாவின் அதிகார வரம்பிற்கும் கட்டுப்படாமல் ஆயுதத்தைத் தூக்குகிறான்! அது ஏன்? எதற்கு? என்பதை வித்தியாசமாக விளக்குகிறது அப்பாவி படத்தின் மீதிக் கதை!

சமூக அவலங்களைக் கண்டு வெகுண்டெழும் அப்பாவி மாணவன் பாரதி வேடத்தில் கச்சிதமாய்ப் பொருந்துகிறார் புதுமுகம் கௌவுதம். ஆனால் இவர் புதுமுகம் என்பதையும், ஒரு அப்பாவி மாணவனால் அத்தனை அடப்பாவிகளை கொலை செய்ய முடியும் என்பதையும் நம்ப முடியவில்லை என்பதுதான் பாரதி பாத்திரத்திற்கு மட்டுமல்ல... படத்திற்கும் பலவீனம். பாரதி - கௌவுதமின் காதலியாக, கல்லூரி மாணவியாக, கவர்ச்சிப் பதுமையாக, கதாநாயகியாக வந்து போகிறார் சுஹானி. மற்றபடி சொல்வதற்கு ஒன்றுமில்லை சுஹானி பற்றி!

எண்ணற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உருவாக்கும் ராமசாமி ஆசிரியராக பிளாஷ்பாக்கில் சில காட்சிகளிலேயே வரும் கே.பாக்யராஜ், மகன் பாரதியின் மாற்றத்திற்குக் காரணமாகி மறைவது உருக்கம். கலெக்டர் மணிமேகலையாக ஸ்ரீரஞ்சனி தாம், தூம் என்று தூள் பறத்துவதும், மகன் பாரதியிடம் திடீர் பாசம் காட்டுவதும் நடிப்பென்று தெரியும் வகையில் நடித்திருப்பது மைனஸ்! மகாதேவன், சம்பத், கிருஷ்ணப்பா உள்ளிட்டவர்களும் படத்தில் இருக்கிறோம் என்னும் அளவில் நடித்திருக்கின்றனர்.

நான் நீ என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது ; நாம் என்று சொன்னால்தான் உதடுகள் கூட ஒட்டும் என்னும் முதல்வர் கருணாநிதியின் நல்வாசகத்தை, பீர், ஜின், ரம், நமீதா, தமன்னா உள்ளிட்ட மது - மாதுக்களுடன் ஒப்பிட்டு கொச்சைப்படுத்தியிருப்பது கருணாநிதியைப் பிடிக்காதவர்களுக்கு கூட பிடிக்காது. இயக்குனர் ஆர். ரகுராஜுக்கு முதல்வர் மீது அப்படியென்ன கோபமோ? கிருஷ்ணசாமியின் அழகிய ஒளிப்பதிவு, ஜோஸ்வா ஸ்ரீதரின் அதிரடி இசை உள்ளிட்ட நல்ல அம்சங்களுடன் ஆர்.ரகுராஜின் எழுத்து, இயக்கத்தில் அப்பாவி - அடப்பாவி எனும் அளவில் இல்லாதது ஆறுதல்.★

# திருமகனுக்குத் தடா?



விக்ரம் நடிப்பில் உருவாகியிருக்கும் தெய்வத் திருமகன் படத்திற்கு தமிழ்நாடு தேவர்குல கூட்டமைப்பினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாகக் கூட்டமைப்பின் தலைவர் சண்முகையா பாண்டியன் அளித்துள்ள பேட்டியில், "நடிகர் விக்ரம் நடித்து வெளிவர உள்ள தெய்வத் திருமகன் திரைப்படத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். தெய்வத் திருமகன் என்று மறைந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரை மட்டுமே நாங்கள் அழைத்து வருகிறோம். இந்த நிலையில் அந்தப் பெயரில் திரைப்படம் வருவதை எங்கள் சமுதாய மக்களால் ஏற்க முடியாது. எனவே அந்தப் படத்தின் பெயரை மாற்றி வெளியிட வேண்டும். அவ்வாறு படத்தின் பெயரை மாற்றி வெளியிடாவிட்டால் தமிழகம் முழுவதும் அந்தப் படம் திரையிடப்படும் திரையரங்கங்களை முற்றுகையிடுவோம். திரைப்படப் பிரதிகளையும் கைப்பற்றுவோம்" என்று கூறியுள்ளார்.

ஏ.ஜி.எஸ்...
கணேஷ், ...
இசை. ஆ...
இயக்குகிறா...
இதன் ப...
வெளியி...
ஆர்....

## அவ...
## பாட...



## மனை...
## கமல்...

பெற்ற 'ட்ராபிக்' ...
மிகவும் கவர்ந்து...
தமிழ் ரீ-மேக்கில் ...
தகவல் வெளியா...
பிள்ளை இயக்கத்...
நம்பீசன், ஆசிப் ...
உள்ளிட்ட பலர் ...
படம் ட்ராபிக்.
மேலும் விசா பி...
இயக்கத்தில் உரு...
தள்ளிபோகும் எ...





# விலை மாதுவாக ஆசை!


ஹீரோக்களுடன் டூயட் பாடி, கட்டிப் புரளும் காட்சிகளில் நடித்து அலுத்து விட்டதால் வித்தியாசமாக லெஸ்பியன் மற்றும் விலைமாது பாத்திரங்களில் நடிக்க ஆசையாக இருக்கிறது என்று கூறுகிறார் நடிகை சமீரா ரெட்டி.

வாரணம் ஆயிரம், அசல், நடுநிசி நாய்கள் போன்ற படங்களில் நடித்தவர் நடிகை சமீரா ரெட்டி. தற்போது தயாரிப்பாளர் பிரபுதேவாவின் இயக்கத்தில் விஷாலுடன் ஒரு படத்தில் நடித்து வருகிறார். இதுதவிர தெலுங்கிலும் நடித்து வருகிறார்.

இதுகுறித்து பேட்டியளித்துள்ள நடிகை சமீரா, ஒரே மாதிரியான பாத்திரங்களில் நடிப்பதால் நாயகிகளுக்கு முக்கியவத்துவம் தரப்படுவதில்லை. அவர்களை டூயட் பாடுவதற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும். ஆகவே வித்தியாசமான வேடங்களில் நடிக்க விரும்புகிறேன். குறிப்பாக லெஸ்பியன் மற்றும் விலைமாது பாத்திரத்தில் நடிக்க ஆசையாக இருக்கிறது. இது என்னுடைய நீண்டநாள் கனவு. இந்த மாதிரியான வேடங்களில் நடிக்க என்னை அணுகினால் என்னுடைய சம்பளத்தையும் குறைக்க நான் தயாராக இருக்கிறேன். இதுபோன்ற வேடங்களில் நடித்தால் வித்தியாசமாகவும் இருக்கும், அதேசமயம் என்னுடைய திறமையை வெளிபடுத்தவும் முடியும். ஆகவே அதற்கேற்ற கதைத்தளத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குும் நாகார்ஜுனா



ற்றி தயாராகும் படத்தில் நாகார்ஜுனா
ல் நாகார்ஜுனா நடித்து வெளியான
ாசு ஆகிய ஆன்மீகப் படங்கள்
த்து மீண்டும் ஆன்மீகப் படத்தில் நடிக்க
ாகார்ஜுனா. சாய்பாபா பற்றிய கதையில்
டிக்கிறார். தெலுங்குப் பட உலகின் மூத்த
ந்தர் ராவ் இந்தப் படத்தை இயக்குகிறார்.
என்ற படத்தில் நடிக்கிறார்
படத்தை முடித்துவிட்டு
டிக்கிறார்.

.ஜி.எஸ் என்டர்டெயின்மென்ட் சார்பில் கல்பாத்தி எஸ்.அகோரம், எஸ்.
ணஷ், எஸ்.சுரேஷ் தயாரிக்கும் படம், அவன்-இவன். யுவன் சங்கர்ராஜா
இசை. ஆர்தர் ஏ.வில்சன் ஒளிப்பதிவு. நா.முத்துக்குமார் பாடல்கள். பாலா
க்குகிறார். ஆர்யா, விஷால், மதுஷாலினி, ஜனனி அய்யர் நடித்துள்ளனர்.
இதன் பாடல் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. பாலுமகேந்திரா
வெளியிட, கல்பாத்தி எஸ்.அகோரம் பெற்றார். விழாவில், ஜி.எம்.குமார்,
ஆர்.கே., அம்பிகா, பிரபா ரமேஷ், எஸ்.ராமகிருஷ்ணன், டி.முத்துராஜ்
உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# வன் - இவன் டல் வெளியீடு



# லையாள ரீமேக்கில் மல்



சமீபத்தில் மலையாளத்தில்
வெளியாகி மாபெரும் வெற்றி
'ட்ராபிக்' படம் நடிகர் கமல்ஹாசனை
கவர்ந்துவிட்டதாம். ஆகையால் அதன்
-மேக்கில் கமல் நடிக்கப் போவதாகத்
வெளியாகியுள்ளது. இயக்குநர் ராஜேஸ்
இயக்கத்தில், சீனிவாசன், ரகுமான், ரம்யா
, ஆசிப் அலி, அனுப் மேனன், சந்தியா
ட பலர் நடிப்பில் வெளியாகியிருக்கும்
ராபிக்.
ம் விசா பிரச்சினையால் செல்வராகவன்
த்தில் உருவாக இருக்கும் விஸ்வரூபம் படம்
பாகும் எனத் தெரிகிறது. அதற்குள்
'ட்ராபிக்' படத்தை
முடித்துவிடலாம்
என்ற எண்ணத்தில்
இருக்கிறார்
கமல்.



# குதித்தார் ரம்மியா

'குத்து ரம்யா' என்று ரசிகர்களால் அழைக்கப்படும் பிரபல நடிகை திவ்யா ஸ்பந்தனாஸ் அரசியல் களத்தில் குதித்துள்ளார். இதற்கு அச்சாரமாக கர்நாடக மாநிலம் இளைஞர் காங்கிரசில் தன்னை இணைத்துக் கொண்டார். தமிழில் குத்து படத்தின் மூலம் அறிமுகமானவர் நடிகை திவ்யா ஸ்பந்தனாஸ். திவ்யா ஸ்பந்தனாஸ் என்பதை காட்டிலும் குத்து ரம்யா என்று சொன்னால் இவரை அனைவரும் நன்கு அறிவர். குத்து படத்தை தொடர்ந்து கிரி, பொல்லாதவன், வாரணம் ஆயிரம், சிங்கம் புலி உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். தமிழ் மட்டுமல்லாது கன்னடத்திலும் முன்னணி நடிகையாக இருக்கிறார்.

# 3 பூக்கள்



எகிப்து அரண்மனையில் தாதிப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறக்கின்றன. அந்த அம்மா வசதியான யூதக் குடும்பத்தை சேர்ந்தவர். எகிப்து மன்னர் அந்தக் குழந்தைகளைப் பார்க்க ஆவலாக வருகிறார். ரோஸ், புளோரா, ஜஸ்மீன் எனப் பூக்களின் பெயரைக் குழந்தைகளுக்குச் சூட்டுகிறார். மூன்று பூக்களையும் ஆசை ஆசையாக வளர்த்த அந்த அம்மா சீக்கிரமே இறந்து போகிறார். அதன்பின் அவர்கள் அப்பாவின் குழந்தைகள் ஆகிறார்கள்.

69 ஆண்டுகளுக்குப் பின் கதை தொடர்கிறது. மூன்று சகோதரிகளும் இஸ்ரேலில் உள்ள மக்கள் குடியிருப்பில் ஆண்களும் குழந்தைகளும் இல்லாமல் தனியே வாழ்கிறார்கள்.

இளமைக் காலத்தில் பிரபல பாடகியாக இருந்த ரோஸ், கணவனின் மரணத்துக்குப் பின் பாடுவதை நிறுத்திவிட்டாள். புளோரா தன் அம்மாவைப் போலவே தாதியாக இருந்துவிட்டு ஓய்வுபெற்று விட்டாள். ஜஸ்மினோ சிறுநீரகம் பாதிக்கப்பட்டு ஒரே மாதத்துக்குள் மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படவேண்டிய நிலையில் இருக்கிறாள்.

இந்த மூவரின் வாழ்க்கையும் பல ரகசியங்களாலும் சில பொய்களாலும் போர்த்தப்பட்டுள்ளது. ரோஸின் ஒரே மகள் ருச்சா, அதே ஊரிலேயே கணவனுடன் வாழ்கிறாள். ஆவணப்படத் தயாரிப்பாளரான அவளது அலுவலகத்துக்கு வரும் ஒவ்வொரு தாய்மாரும் தனித்தனியாகக் கூறும் ரகசியங்கள் ருச்சாவை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன.

ரோஸின் இசைப் பயணத்தில் ஏற்படும் ஆண் தொடர்புகள் கணவனுக்குப் பிடித்தவையாக இல்லை. அதனால் குழந்தையோடு வெளிநாட்டுக்குச் சென்று குடியேறிவிடலாம் என்று வற்புறுத்துக்கிறான். அவளுக்கோ சகோதரிகளை விட்டுப் பிரிய மனம் இல்லை. ஆயினும் போவதென்று முடிவெடுக்கிறாள். மறுநாள் பயணம் செய்யத் தயாராகிறாள். அப்போது ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்காகத் துடிக்கிறான் ரோஸின் கணவர். வீடு முழுவதும் பொருள்கள் குவிந்து குழப்பமாகிக் கிடப்பதால் உயிரைக் காக்க உதவும் மருந்தைக் கூடத் தேடி எடுக்க முடியவில்லை. உண்மையில் புளோரா கையில் மருந்து இருக்கிறது. ஆனால் சகோதரி தங்களை விட்டுப் பிரிந்துவிடக்கூடாது என்ற காரணத்துக்காக அதைக் கொடுக்காமலேயே விட்டு விடுகிறாள். அம்புலன்ஸ் வருவதற்குள் கணவன் இறந்து போகிறான். மருந்தின் ரகசியம் மற்றையவர்களுக்குத் தெரிந்தும் அது பற்றி யாரும் பேசவில்லை.

அடுத்த மர்ம முடிச்சு புளோராவின் குழந்தையைப் பற்றியது. உண்மையில் அந்த மகன் புளோராவின் சொந்த மகன் இல்லை. ஜஸ்மினின் கணவன் நடத்துகின்ற நிறுவனம் ஒன்றில் புளோராவின் கணவன் வேலை செய்கிறான். அங்கு நடந்த விபத்தொன்றினால் அவன் ஊனமாகிறான். இந்தக் கட்டத்தில் ஜஸ்மினுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. அதில் ஒரு குழந்தையை ரகசியமாக புளோராவுக்குக் கொடுக்கிறாள். துருக்கி நாட்டுச் சட்டப்படி அனுமதி பெறாமல் தத்தெடுத்ததற்காக அந்தச் சிறுவனை அரசாங்கமே எடுத்துச் சென்றுவிடுகிறது. குழந்தையை மீட்க முடியவில்லை. ஜஸ்மினின் சிகிச்சைக்காக சொந்த நாடான அலெஸ்சாண்டியாவுக்குச் சகோதரிகள் செல்வதோடு படம் முடிகிறது. இஸ்ரேலிய பெண் இயக்குநர் டினா ஜுவி ரிக்லிஸ் இப் படத்தை எடுத்திருக்கிறார் தன் மூன்று அம்மாக்களின் கதையையே பட மாக்கியிருப்பதாகக் கூறும் டினா தன் பாத்திரத்தையே ருச்சாவாக மாற்றியிருக்கிறார். இப் படம் இஸ்ரேலிய பட விழாக்களில் பல விருதுகளைப் பெற்றிருக்கிறது. ★

# சேலையிலும் கவர்ச்சி



சேலை கட்டுவதில்கூட கவர்ச்சி இருக்கிறது; நீச்சல் உடையில் நடிப்பதில் தவறேதும் இல்லை என்று மாஜி நடிகை ராதாவின் மகள் கார்த்திகா கூறியுள்ளார்.

நடிகை ராதாவின் மகள் கார்த்திகா 'கோ' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நாயகியாக அறிமுகமாகிறார்.

இப்படம் திரைக்கு வந்திருக்கும் நிலையில், தன் மகளைப் பத்திரிகையாளர்களிடம் அறிமுகப் படுத்தி வைத்தார் ராதா. அதன் பின்னர் கார்த்திகா அளித்த பேட்டியில்,

'என் அம்மாவும், பெரியம்மா அம்பிகா வும் தமிழ் பட உலகில் மிகப்பெரிய கதாநாயகிகளாக இருந்தவர்கள். இரண்டு பேரும் சிவாஜிகணேசன், கமல்ஹாசன் போன்ற இமயங்களுடன் நடித்தவர்கள். அவர்களுடன் என்னை ஒப்பிட முடியாது. 'கோ' படத்தை தியேட்டரில் பார்க்கும்போது என்னை ஒரு சாதாரண புதுமுகமாக நினைத்துக் கொள்ளுங்கள். ராதா-அம்பிகாவின் மகள் என்ற நினைப்போடு படம் பார்க்க வேண்டாம். நான், கவர்ச்சிக்கு எதிரானவள் அல்ல. ஒரு நடிகைக்கு கவர்ச்சி அவசியம். கவர்ச்சி இல்லையென்றால் சினிமாவில் நீடிக்க முடியாது. புடவை கட்டுவதில் கூட கவர்ச்சி இருக்கிறது. படத்தின் கதைக்கும், கதாபாத்திரத்துக்கும் தேவை என்றால் நீச்சல் உடையில் நடிப்பது கூடத் தப்பு அல்ல. அதேநேரத்தில், நடிப்புத் திறமையை வெளிப் படுத்தும் கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்க வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருக்கிறேன்' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அப்பா வருவார்

மாலைமங்கி இருள் சூழ்ந்த ஒருபொழுது. அவள் மனம் கூட இருண்டே கிடந்தது. ஆனால் வாய்மட்டும் மந்திர உச்சாடனம் போல ''கண்ணே ராஜா கவலை வேண்டாம். அப்பா வருவார் தூங்கு'' என்று பாடிக்கொண்டிருக்க கைகள் தன்னிச்சையாகத் தூளியை (ஏணைய) ஆட்டிக்கொண்டிருந்தது. ஏணையில் ஏதுமறியாப் பாலகன் தூங்கமுயற்சித்துக் கொண்டிருந்தான். ஒன் றரை வயதுகூட ஆகாத அந்தக் குழந்தையும் அம்மா பாடுகின்ற மெட் டுக்கேற்ப தன் மழலை ஒலி பரவ வாயசைத்து எதையோ பாடிக்கொண்டே தூங்கிப் போயிற்று. அந்த மழலையின் கனி மொழியை ரசிக்கும் மனநிலையில் கூட அவள் இல்லை. தான் வடிக்கும் கவிகளாலேயே தன்மூத்த இரண்டு பிள்ளைச் செல்வங்களையும் தாலாட்டியவளுக்கு அந்தச் சின்னக் கண்ணனின் திருவிளையாடல்களை ரசிக்க முடியவில்லை. கண்ணசைத்தால் ஒரு கவிதை, கால் உதைத்தால் ஒரு கவிதையென்று குழந்தைகளின் செயல்களை ரசித்தவளுக்கு இப்போ...!

பின்னோக்கிய அவளது நினைவுத் தடங்களால் அவள் கண்கள் குளமாகின. வளம் நிறைந்த வன்னி மண்ணின் பிரதான நகரங்களில் ஒன்றான புதுக்குடியிருப்பின் ஒரு கிராமத்தில் தான் அவளது வீடு. ''காணி நிலம் வேண்டும் பராசக்தி'' என்ற பாரதிபாடலின் தீவிர ரசிகை அவள். சின்னவயதிலே அவள் ஆசைப்பட்டது போலவே தென்னங்கீற்றுக்களின் தென்றல் தவழும் மையத்தில் ஒர் அழகிய கல்வீடு. காதல் கணவன்... அதுவும் இலட்சியங்களால் ஒன்றுபட்ட இலட்சியத் தம்பதிகள்... ஆசைக்கொன்று, ஆஸ்திக்கொன்று எனப் பெண்ணும் ஆணுமாக 02 குழந்தைகள். 07 வயதுப் பெண்குழந்தையும், ஒருவயது ஆண் குழந்தையுமாக சந்தோசமாக வாழ்வு ஓடிக்கொண்டிருந்த போது தான், வன்னியுத்தம் ஆரம்பமானது.

மன்னாரிலிருந்து ஜெயபுரம் - முழங்காவில், வன்னேரி... கிளிநொச்சி ... தர்மபுரம்... விசுவமடு... உடையார்கட்டு... வள்ளிபுனம்...தேவிபுரம்... இரணைப்பாலை... வலைஞர்மடம்... புதுமாத்தளன்... முள்ளிவாய்க்கால் என பிரதேசங்கள் குறுகி அடைபட்ட மந்தைகளாய் அல்லற்பட்ட போது ... அவள் வயிற்றுக்கருவும் வளர்ந்து வலைஞர்மடத்தில் வெளியுலகம் வரத்துடித்தது.

சீறிவரும் எறிகணைகள், துளைக்கும் ரவைகள், தீயிட்டெரிக்கும் பொஸ்பரஸ் குண்டுகள், கிபிர் விமானங்களின் அட்டகாசப்

> **சீறிவரும் எறிகணைகள், துளைக்கும் ரவைகள், தீயிட்டெரிக்கும் பொஸ்பரஸ் குண்டுகள், கிபிர் விமானங்களின் அட்டகாசப் பேரொலிகள், குண்டுகள் இத்தனை அவலங்களுக்கு மத்தியில் கொட்டும் மழை...**

பேரொலிகள், குண்டுகள் இத்தனை அவலங்களுக்கு மத்தியில் கொட்டும் மழை... எல்லாவற்றிற்கும் ஈடு கொடுத்து, அவள் வயிற்றில் சுமந்த கருவும் கையில் தவழ்ந்த குழந்தையும், மறுகையில் பிடித்த 07 வயதுப் பெண் குழந்தையுமாக... மாற்றுடை கூட இன்றி கட்டிய கணவன் கரைநின்று கையசைத்து அந்தக் கப்பலில் ஏற்றி விட்டபோது அவள் கனவிலும் நினைக்கவில்லை, கணவன் காணாமல் போவான் என்று...

எப்படியும் ஒரு முடிவு கிடைக்கும். உலகநாடுகள் விழித்துக் கொண்டுதானே இருக்கிறது. நாம் மீண்டும் ஒன்று சேர்வோம் என்ற நம்பிக்கையில் கப்பலேறினாலும்... கண்ணீரை யாராலும் தடைபோட முடியவில்லை அவளுக்கு... நிரந்தரமாய் நீ பிரிந்துவிடுவாய் என்று கட்டியம் கூறுவது போல் கண்ணீர் சொரிய தன் இரு குழந்தைகளையும் அணைத்தவாறு பயணம் செய்தாள்.

வன்னி மண் இழந்து... வளமான வாழ்விழந்து புல்மோட்டைக் கடற்கரையில் இறங்கியபோது கண்ணைக்கட்டி காட்டில் விட்டதாய் உணர்ந்தாள். ''இன்பத் திலும் துன்பத்திலும் பங்கெடுப் போம், இறுதிவரை பிரியமாட்டோ மென உறுதிமொழி எடுத்து திருமண பந்தத்தில் இணைந்த அவள் - அவனை மட்டும் துன்பச் சுழிக்குள் தவிக்கவிட்டுக் கரைசேர்ந்திருக்கிறாள். இனிஎல்லாம் போதும், நீங்களும் வாங்கோ என்று அவள் அவனை ஒரு நாளும் கேட்கவில்லை. கேட்டாலும் வரமாட்டான் என்பதும் அவளுக்குத் தெரியும். துன்பத்தில்... மக்களுக்காக உதவும் பணியில் தன்னை மறந்தவன், வீட்டில் உணவிருந்தாலும் மற்றவருக்கு உணவில்லையென்றால் உண்ண மறுப்பவன்- இருந்தாலும் ''நான் ஒரு தடவையெண்டாலும் பொது வேலைகளை விட்டிட்டு எங்களோட வாங்கோ'' என்று கேட்காம விட்டனேயென்று இப்பொழுதும் அழுவாள்.

புல்மோட்டையிலிருந்து பலத்த பாதுகாப்புடன், பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியில் வவுனியா வைத்தியசாலை வந்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அதுவும் கஸ்ரப் பிரசவம் தான். எவ்வளவோ வேதனைகளுக்கு மத்தியிலும், ஒரு மகிழ்ச்சி. ஏனென்றால் பிறந்த குழந்தை அப்படியே அவனை 'உரிச்சு வைச்சுப் பிறந்திருக்குது' என்பார்களே... அப்படித்தான். ஆனால் பிரசவித்த பெண்ணுக்கு அருகிருந்து அரவணைத்து... ஆறுதலாய் ஒரு கோப்பி கொடுக்க அருகில் யாருமில்லை. எல்லாம் புதுமுகங்கள். இவள் போலவே... எல்லாவற்றையும் இழந்து கண்ணீருடன் உயிரை மட்டுமே சுமக்கும் உடலங்கள்... ''என்ட என்ட'', ''இஸ்ஸராட்டயண்ட'' என்ற சகோதர மொழிக்கூச்சல், சீருடைகளுடன் கூடிய மனிதர்கள், காயங்களுடன் ஸ்ரெச்சரில் கொண்டுவந்து குவிக்கப்படும் வன்னிச் சொந்தங்கள், என வந்தவர்கள் எல்லோருக்குமே அவளைத் தெரிந்திருந்தாலும் எங்கே அவளால் தமக்குப் பிரச்சினை வந்துவிடுமோ என முகம் திருப்பும் பூச்சி மனிதர்கள். இவை எல்லாவற்றையும் பார்த்து பேயறைந்தது போல் இருக்கும் தன் இரு குழந்தைகளுக்கும் தன்னைவிட ஆறுதலும் அரவணைப்பும் கொடுக்க வேண்டியிருந்தது.

**இ.சுஜாதா**

யாரிடமும் கையேந்தக்கூடாது, எதற்காகவும் தனது நிலையில் நின்று வளைந்து கொடுக்கக்கூடாது என்று நினைக்கும் அவளே சாப்பாட்டிற்காய் கையேந்தி வரிசையில் நின்றபோது அவமானமாய் உணர்ந்தாள். ஆனால்... பாலகர் இருவர்... பாலுட்டும் அவளுக்கும் பசிக்கத்தானே செய்யும்... முட்கம்பி வேலிகளுக் குள் சிறைப்பட்டிருந்த காலம் கடந்து இப்பொழுது தன் பிறந்த இடமான யாழ்ப்பாணம் வந்துவிட்டாள்.

யாழிலும் எத்தனை கேள்விகள்? எத்தனை விமர்சனங்கள்? எல்லாவற்றையும் அவன் இறுதியாய் சொன்ன வார்த்தைகளுக்காய் தாங்கி... ''நான் இல்லாவிட்டாலும் என்ரை பெயர் சொல்ல பிள்ளையளை வடிவா வளர்த்துப் படிப்பிச்சுப் போடுங்கோ'' என்று சொன்னதாய் அவள் நெடுகவும் சொல்லுவாள்.

அவள் திரியாத கோயில் இல்லை-கேட்காத சாத்திரம் இல்லை. எல்லா இடங்களிலும் அவன் உயிரோட இருக்கிறான். அவன்ரை உயிருக்கு ஒன்றுமில்லை என்றுதான் சொன்னாங்கள். அவன் திரும்பவே இல்லை. திரும்பவே மாட்டான் என்பதாய்ச் செய்திகள் பரவியபோது ஆடிப்போய் விட்டாள். அழுதுபுலம்பி அரற்றினாலும் அவளுக்கு அவன் கொடுத்த கடமை இருந்தது. மூன்று முத்துக்கள்... மூன்றும் அவனோடு வாழ்ந்த வாழ் வின் அடையாளங்கள்... ஆவணங் கள்... அவனது உயிர் விம்பங்கள்... ஒன்பது ஆண்டுகள் அவனுக்குள் ளேயே ஐக்கியமாகி வாழ்ந்ததன் பலாபலன்கள்... அவனை நினைவூட்டும் சடப்பொருட்கள் என்று அவளிடம் எதுவுமில்லை. ஒரு புகைப்படம் இல்லை. ஏன் கட்டிய தாலிகூட இல்லை. ''அந்தத்தாலி கூட ஆபத்து... கழட்டிவைத்து விட்டுச் செல்லுங்கள்...'' என்ற போது அதனையும் அவனிடமே விட்டு வந்தாள். ஆபத்து ஏற்படா திருக்க எல்லாம் பார்த்துப்பார்த்து பத்திரமாய் அவளைக் கரைசேர்த்தி ருக்கிறான்.

நேற்று அவள் பார்த்த சாத்திரக்காரன் அவன் உயிரோடு இல்லை என்றிருக்கிறான். அவள் எதையும் தாங்குவாள். ஏனென்றால், அது அவன் கொடுத்த பலம். அவனது துணை அவளுக்கு அருவமாயும் உருவமாயும் எப்பவும் இருக்குமென்பாள். ஆனால், அங்கிருந்து கேட்ட மூன்று வயதுப் பாலகன் ''அப்பா இனி வரமாட்டாரோ, எங்க போயிட்டார்?'' என்று கேட்டது தான் அவளைக் கலங்க வைத்து விட்டது. பிள்ளையள் அப்பா அப்பா என்று கேட்கும் பொழுதெல்லாம் என்ன சொல்லுவாள்?... மற்றவர்களைப் போல வெளிநாடு என்று சொல்லி யெல்லாம் ஏமாற்றுவதில்லை.

அந்தப் பிஞ்சுகளுக்கு விளங்குதோ இல்லையோ... இனத்தின் தலைவிதி நொந்து கதை சொல்லுவாள்... அப்பா வருவார் என்று நம்பிக்கையூட்டுவாள்.

குழந்தை தூங்கியதுகூடத் தெரியாமல் ''கண்ணே ராஜா, கவலை வேண்டாம் அப்பா வருவார் தூங்கு'' என்று கண்ணீருடன் பாடிக் கொண்டிருக்கும் அவளுக்கு... அவளது அவனை எங்கே எவ்வாறு காணப்போகிறாளோ? * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் முயல்; வடக்கில் ஆமை!



திப்பிலி

அபிவிருத்தி என்பது சூழல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படுவது. இது இடத்துக்கு இடம் வேறுபட்ட அடிப்படைகளையும் அணுகுமுறைகளையும் கொண்டு துறைசார் கட்டமைப்புக்கள் ஊடாக வழிநடத்தப்படவேண்டியஒன்றாகும்.

அரசோடும், அரச நிர்வாகத்தோடும் இணைந்திருக்கும் இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் காலத்துக்குக் காலம் மாறும் நிர்வாகத்தரப்பின் பிடியில் சிக்குண்டு நிலை பெற்றும், நிலைகுலைந்தும் போகின்றன.

நாட்டின் அபிவிருத்தியில் அதிக செல்வாக்கைச் செலுத்தும் போக்குவரத்தானது இலங்கையில் தொடர் குறைபாடாகவே காணப்பட்டு வருகின்றது. இதன்காரணமாக ஏற்படக்கூடிய அபிவிருத்தி இழப்புக்களை தவிர்க்கும் வகையில் இப்போது திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் அவை குறுகிய அரசியல் நோக்கங்களுடன் முன்னெடுக்கப்படுவதால் அபிவிருத்தியில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பிராந்திய, பிரதேசப் புறக்கணிப்புக்களுடன் கூடிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களால் சமச்சீரற்ற பொதுத் தேவையைப் பூர்த்தி செய்யாத காரியங்களே மிஞ்சுகின்றன.

இப்போது துரிதமாகச் செயற்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் தென்பகுதியை விரைவாகக் கட்டியெழுப்பி அதன் மூலம் அந்தப்பகுதி மக்களின் பொருளாதார நிலையில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தி, சமச்சீரான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதையே நோக்கமாகக் கொண்டு அமைகின்றன. அதற்கு இப்போதிருக்கும் ஆட்சியாளர்களதும், அரசியல் தலைவர்களதும் முயற்சியும், விருப்பமும் காத்திரமான பங்கை வழங்கிநிற்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் இதுவரைக்கும் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவை முழுமையானவையாகவோ அல்லது மக்கள் தேவையை பூர்த்தி செய்வனவாகவோ இல்லை. வடபகுதியின் வீதிப் போக்குவரத்தின் மிகமோசமான நிலை வேறு எந்தப் பகுதிகளிலும் (தெற்கில்) இல்லை என்று கூறலாம்.வடக்கில் போர் நடைபெற்ற இடங்களில் இரண்டுதரப்பினராலும்பாலங்கள், மதகுகள் சேதமாக்கப்பட்டன.

அபிவிருத்தி வேலைகளுக்கு வீதிகள் எந்தளவுக்கு முக்கியமோ அதேபோல எதிராளிகளின் படை நகர்வுகளைக் கட்டுப்படுத்த அவற்றைச் சிதைப்பது அப்போது முக்கியமானதாக இரு தரப்பினருக்கும் இருந்தது.

வடக்கில் யுத்தகாலத்தில் வளங்களை அழிப்பதற்கு காட்டப்பட்ட வேகம் இப்போதுள்ள அபிவிருத்திப் பிரகடன காலத்தில் இல்லை. திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் நிறைந்த சொத்துக்கள், அடையாளங்கள் போக இனி மக்களுக்குத் தேவையானவை என்று கருதப்படும் இருப்பிடம், போக்குவரத்து, மின்சாரம், குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எவையும் வன்னி மக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்காத நிலையில் வடக்கில் அபிவிருத்தி பற்றி எவ்வாறு பேசமுடியும்?

தெற்கின் நவீனமயமாக்கம் தொடர்ச்சியாக அரசியல் செல்வாக்குடன் நிறைவேற்றப்படுகின்றது.

வடக்கிலோ கிடைப்பவையும் ஆசாரிகளதும் பூசாரிகளதும் கைகளில் அகப்பட்டு அவர்கள் இடுங்கிப்போடும் ஓரிரு பூக்காம்புகளாகவே மக்களிடம் சேர்கின்றன.

> தெற்கின் நவீனமயமாக்கம் தொடர்ச்சியாக அரசியல் செல்வாக்குடன் நிறைவேற்றப்படுகின்றது. வடக்கிலோ கிடைப்பவையும் ஆசாரிகளதும் பூசாரிகளதும் கைகளில் அகப்பட்டு அவரவர்கள் இடுங்கிப்போடும் ஓரிரு பூக்காம்புகளாக மக்களிடம் சேர்கின்றன.

அதிவேக அபிவிருத்தியில் பயன் பெறும் தென்பகுதிக்கு இப்போது புதிய வரவாக நவீன நெடுஞ்சாலை அமைகிறது. கொழும்பு கொட்டவ தொடக்கம் மாத்தறை, கொடகம வரையான 130 கிலோமீற்றர் அதிவேக நெடுஞ்சாலை ஒன்று 2007ஆம் ஆண்டிலிருந்து அமைக்கப்பட்டு இப்போது பணிகள் யாவும் முடிவை எட்டியுள்ளன.

கட்டமைப்பு வேலைகள் முடிவுற்றதும் இந்த நெடுஞ்சாலை எதிர்வரும் ஒகஸ்ட் மாதமளவில் மக்கள் பாவனைக்கு விடப்படப்படும் என துறைமுகங்கள் பெருந்தெருக்கள் அமைச்சு அண்மையில் தெரிவித்துள்ளது.

இந்த வீதியைப் பயன்படுத்தும்போது ஏற்படும் சவால்களைத் தவிர்க்கும் முகமாக மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல முடியாத ட்ராக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள்போன்ற வாகனங்கள் இந்த வீதியூடாக அனுமதிக்கப்படமாட்டா எனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு நகருக்குள் இருக்கும் வாகன நெரிசல், நேரவிரயம், அதிகரித்த எரிபொருள் பாவனை போன்றவற்றைக் குறைத்து வினைத்திறன் மிக்க போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 800 கோடி ரூபா நிதியுதவியுடன் இந்த நெடுஞ்சாலை துரிதமாக அமைக் கப்பட்டு வருகின்றது.

உள்ளூர் போக்குவரத்தினை எந்த வகையிலும் பாதிக்காத விதத்திலும் சூழலில் ஏற்படக்கூடிய நீண்டகால, குறுங்கால பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டும் இந்த நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது.

கனரக வாகனங்களை மாநகருக்குள் கொண்டு செல்வது, வெளியேற்றுவதில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் குறைக்கும் வகையிலும், கட்டுநாயக்கவிமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், மன்னார் வீதி,திருகோணமலை போன்ற முக்கியமான மையங்களைக் கருத்தில் கொண்டும் எதிர்காலத்தில் பயனுறுதிமிக்க போக்குவரத்துக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் இந்த நெடுஞ்சாலை அமைகின்றது.

இந்த நெடுஞ் சாலையானது நவீனமயப்படுத்தப்பட்ட போக்குவரத்து ஒழுங்கு விதிகளைக் கையாண்டு அமைக்கப்படுவதுடன் வாகனங்களின் உள்நுழைதல், வெளியேறுதல் செயல்பாடுகளுக்கு இலகுவான நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு ஒரு வாகனம் உள் நுழைவ தென்றாலும்சரி வெளியேறுவதென்றாலும் சரி அதற்கான மார்க்கங்களையே பின்பற்றவேண்டும். அத்துடன் விதிகளை மீறி வாகனம் செலுத்துபவர்கள் மீது குற்றப் பணம் முதலான சட்ட நடவடிக்கைகளும் கைக்கொள்ளப்படும். அத்துடன் இவ்வீதியைப் பயன்படுத்தும்போது அதற்கான கட்டணமும் வாகன உரிமையாளரிடம் இருந்து இலத்திரனியல் தொழில் நுட்பம் மூலம் அறவிடப்படும்.

வீதி முழுமையாகச் செயற்பட அதற்கென விசேட பொலிஸ் பிரிவு,துணை மருத்துவ சேவை, தீயணைக்கும் படை ஆகிய வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

நெடுஞ்சாலையுடன் இணையும் வீதிகள் உள்ளூர் போக்கு வரத்துடனும், வேறு மாவட்டங்களுட னும் தொடர்புபட்டதாகக் காணப் படுவனவாகும். மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி தவிர்ந்த வாகனங்கள் இவற்றின் வழியாக நெடுஞ்சாலையை அடைந்து பயணத்தைத் தொடர முடியும்.

இந்தச் சாலை அமைக்கப்படும் பெரும் பகுதி தனியார் நிலங்களாகும். அதற்காகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மாற்றிடம், இழப்பீடு என்பனவும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இருப்பினும் உள்ளூர் போக்கு வரத்துக்களை இவ்வீதியூடாக மேற் கொள்வது கடினமானதாகும். காரணம் குறிப்பிட்ட தூரத்துக்குள் நுழைதல், வெளியேறுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்ய முடியாது. வசதிகளுடன் கூடிய வீதிக்கு நெருக்கடிகளைச் சந்திக்க மாற்றுத்திட்டங்களையும் அவர்கள் கொண்டுள்ளனர்.

### வன்னியில் சிதைந்துபோயுள்ள வீதிக்கட்டமைப்பு

ஆனால் செம்மஞ்சள் நிறத்தில் காணப்படும் வன்னிப் பிரதேசத்தின் முழு வீதிகளும் மாரிகாலத்தில் சேறும் சகதியுமாகவும், கோடைகாலத்தில் போக்குவரத்துக்கு ஒவ்வாத புகைகிளப்பும் சாம்பல் மேடுகளாகவும் காணப்படுகின்றன. மழைக்காலங்களில் பாலங்கள், மதகுகள் வழியாக மழைநீர் பெருக்கெடுத்தால் ஒரு இடத்தில் இருந்து மற்றைய இடத்துக்கு செல்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே வீதிகள் காணப்படுகின்றன.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் தமது அன்றாடக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு இவ்வாறுள்ள வீதிகள் பெரும் தடங்கலாகவும் இடையூறாகவும் இருப்பதால் அவர்கள் சொந்த இடங்களைவிட்டு வேறு வசதிபடைத்த இடங்களுக்கு நகரவேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனால் வன்னியில் பெருமளவான காணிகள் ஆள்கள் அற்றவையாக, காடுமண்டு பவையாக, பாவனைக்கு ஒவ்வாதவையாக, அயலவர்களுக்கு இடையூறாக மாறுவதையும் காணமுடிகின்றது.

வடக்கின் அபிவிருத்தி பற்றிப் பேச்சளவில் வைத்துக்கொண்டு தெற்குக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசியல் பேதங்களின் அடிப்படையில் அபிவிருத்தியை அணுகுவது குறுகிய கால நன்மையைக் கருதியதாகும். நீண்டகால, நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் அரசு நாட்டின் எல்லாப் பாகங்களையும் அவற்றின் வளங்களின் கிடைப்பனவுகளுக்கேற்ப மதிப்பீடு செய்து அவற்றின்மீதான அபிவிருத்தி திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டு பாகுபாடு அற்ற நிலையில் அந்த அபிவிருத்தியை நடைமுறைப்படுத்தப்படுமாயின் அதுவே முழுநாட்டுக்கும், அங்கு வாழும் மக்களுக்கும்,சர்வதேச மட்டத்திலும் பயனுடையதாக அமையும்.

ஆனால் இது சாத்தியமா?✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 14

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 27 | 8 | 14 | 15 |
| 28 | 17 | 10 | 16 | 22 |
| 5 | 11 | 9 | 23 | 29 |
| 12 | 26 | 24 | 25 | 6 |
| 19 | 20 | 18 | 7 | 13 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 85 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்தா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.


### கணிதப் புதிர் - 13 இன் சரியான விடை

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 6 | 25 | 19 | 18 |
| 5 | 24 | 23 | 17 | 11 |
| 28 | 22 | 16 | 10 | 4 |
| 21 | 15 | 9 | 8 | 27 |
| 14 | 13 | 7 | 26 | 20 |

## தெரிந்து கொள்ளுங்கள்

மழை காலத்தில் தவளைகள் கத்துவதை நாம் கேட்கிறோம். இது ஆண் தவளை எழுப்பும் ஓர் அழைப்பு ஒலியாகும். பெண் தவளையுடன் கூடி இனப்பெருக்கம் செய்ய ஆண் தவளை எழுப்பும் இந்த ஒலியானது அதன் இரு தாடைகள் சந்திக்கும் இடத்திற்கு சற்றுக் கீழே உள்ள இலேசான கறுப்பு நிற குரல் பையில் இருந்து எழுப்பப்படுகிறது. நீர் நிரம்பி இருக்கும் குளம் குட்டைகளில் இருந்து ஆண் தவளை குரல் எழுப்பி பெண் தவளைகளை முட்டையிடக் கூப்பிடும். தவளைகள்ஆண்டுக்கு ஒரு முறையே இனப்பெருக்கம் செய்கின்றன.

## செய்து பாருங்கள்




ஒரு சதுரக் காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். படங்களில் காட்டியபடி புள்ளிக் கோடிட்ட இடங்கள் மடிப்புற ஓரங்களை இணையுங்கள். அம்புக்குறிகளை அவதானித்து மடிப்புக்களை மேற்கொள்ளுங்கள். படம் 6 இல் காட்டப்பட்டுள்ள தாரா வடிவம் வரும்வரை முயற்சியுங்கள்.




# கொய்யா மரத்தடி வீடு



அமுதனின் வீட்டுத் தோட்டத்திலே இரண்டு கொய்யா மரங்கள் நின்றன. இரண்டு மரத்துக்கும் வயது ஒன்றுதான். பலகிளைகளைப் பரப்பி, வளர்ந்திருந்தன அந்தக் கொய்யா மரங்கள். பழம் பழுக்கும் காலங்களில் கொய்யா மரங்களின் அயலில் கிளிகளுக்கும் அணில்களுக்கும், ஏன் சில வேளைகளில் குரங்குகளுக்குமே பஞ்சமிருப்பதில்லை. வயது ஒன்றான போதிலும் அந்த மரங்களில் ஒன்று சிறிது குட்டையாகவும், மற்றையது உயரமானதாகவும் இருந்தது. அதைக் கருத்தில் கொண்டு குட்டை மரம், நெட்டை மரம் என அவற்றுக்குப் பெயரிட்டிருந்தான் அமுதன். அமுதனுக்கு அந்த மரங்களில் குட்டை மரத்தையே மிகவும் பிடிக்கும். தாவி ஏறிப் பழங்களைப் பிடுங்க குட்டைக் கொய்யாமரம் வசதியாக இருந்தது . அதைவிட, ஏறி அமர வசதியான விதத்தில் அந்த மரத்தின் கிளைகள் அமைந்திருந்தன.

அன்று சனிக்கிழமை. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பொங்கல் பண்டிகையாதலால் திங்கட்கிழமையும் விடுமுறையாயிருந்தது. நான்கு நாட்கள் விடுமுறையென்றால் பள்ளிச் சிறுவர்களின் கொண்டாட்டத்தைச் சொல்லவும் வேண்டுமா? அமுதனின் அயல் வீட்டுச் சிறுவர், சிறுமியர்களில் பலர் அவனுக்கு அருமையான நண்பர்களாக விளங்கினார்கள். எழிலும், செல்வியும் அவர்களில் முதன்மையானவர்கள். அமுதனின் வயதை ஒத்த சிறுவன் எழில். அவனது அருமைத் தங்கை செல்வி. எழிலையும் செல்வியையும் அன்று தனது வீட்டுக்கு விளையாடக் கூப்பிட்டிருந்தான் அமுதன். அதற்கான அனுமதியையும் முன்கூட்டியே அம்மாவிடம் கேட்டுப் பெற்றிருந்தான். இன்றைக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்? முக்கியமான அந்தக் கேள்வி. நண்பர்கள் மூவரது மனதிலும் மேலோங்கியது. கள்ளன்- பொலிஸ், கிளித்தட்டு, ஓடிப்பிடித்து... என்று பலவிதமான விளையாட்டுக்களைப் பற்றியெல்லாம் சிந்தித்து விட்டு, இறுதியாக கொய்யாமரத்தடியிலே சிறியதொரு வீடுகட்டுவதென்று நண்பர்கள் மூவரும் முடிவு செய்தார்கள். செல்வி ஆனந்தத்துடன் துள்ளிக் குதித்தாள். நல்லூர் கோவில் திருவிழாவிலே சட்டிபானைகளையும், குட்டிப் பொம்மைப் பாப்பாவையும் வைத்து விளையாட ஒரு வீடு கிடைக்கப் போகிறதே! அது தான் அவள் தனது மண்சட்டி, பானைகளையும், பொம்மைகளையும் எடுத்துவர வீட்டுக்கு விரைந்தோடினாள் செல்வி.

அமுதனும், எழிலனும் கொய்யா மரத்தில் சாய்ந்து அதன் குளிர்ந்த நிழலில் வசதியாக அமர்ந்து கொண்டார்கள். வீடு கட்டுவது பற்றி யோசிக்கத் தொடங்கினார்கள். தூண்களையும், சுவர்களையும், அமுதனின் வீட்டுப் பின்புறத்தில் குவிந்திருந்த கட்டைகள் பலகைகளில் சிலவற்றைப் பயன்படுத்தி அமைத்திடவும், வீட்டுக் கூரையை எழில் தன் வீட்டிலிருந்து எடுத்து வரப்போகும் தடித்த பிளாஸ்ரிக் தாளினால் அமைப்பதெனவும் முடிவானது. அதுசரி, யன்னல்களை எவ்வாறு அமைப்பது? அமுதனின் மனதிலே நல்லதொரு யோசனை பிறந்தது. [தொடரும்]

-யோ.சத்தியன்-

## பொது அறிவு (ஒலிம்பிக்)

* உலகிற்கு ஒலிம்பிக் போட்டியை அறிமுகப்படுத்திய நாடு கிரேக்கம் ஆகும்.
* 1908 ஆம் ஆண்டு பெண்கள் ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற அனுமதிக்கப்பட்டனர்.
* 1920 இல் ஒலிம்பிக் கொடி ஏற்றும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
* ஒலிம்பிக் கொடியில் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய ஐந்து நிற வளையங்கள் காணப்படுகின்றன.
* ஐந்து வளையங்களும் உலகின் ஐந்து கண்டங்களையும் குறித்து நிற்கின்றன.
* 2004 இல் ஒலிம்பிக் போட்டி ஏதென்சில் நடைபெற்றது.
* அதிக தடவைகள் (நான்கு) ஒலிம்பிக் போட்டிகளை நடாத்திய நாடு அமெரிக்கா ஆகும்.
* 30 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் 2012 இல் லண்டனில் நடைபெறவுள்ளது.

-பா.கபிலன்-

## உரமாகும் விலங்கின் கழிவுகள்



விலங்கினங்களின் கழிவுகள் அனைத்துமே உரமாக மாறும் தன்மை உடையன. கழிவு என்பது உடல் எடுத்துக் கொண்ட பின்னர், அதாவது சமிபாடடைந்த பின்னர் வெளியேற்றப்படும் பொருட்களே!

இவை அனைத்திலும் காபன், ஹைட்ரஜன், ஒக்ஸிஜன், நைட்ரஜன் ஆகிய மூலகங்களும் தாது உப்புக்களும் உள்ளன. இவை மண்ணுடன் சேரும் போது பக்டீரியாக்களால் சிதைக்கப்பட்டு உரமா கின்றன. இவ் உரமானது இரசாயன உரங்கள் போன்றது. சுற்றாடலில் பாதிப்பை ஏற்படுத்ததாது.

-ம.சாம்பவி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவணைக்கும் திமிங்கலம்





**பொது**வாக திமிங்கிலங்கள் ஆபத் தானவை. ஆனால் பசுபிக் கடல் பிராந்தியத்தில் காணப்படும் இந்த சாம்பல்நிற திமிங்கிலங்கள் மனிதர்களோடு மிகவும் நட்பாகப் பழகுகின்றன. கடலில் உல்லாசப் பயணிகளை இவை முத்தமிடவும் செய்கின்றன.

இந்த இராட்சத வகை திமிங்கிலங்கள் உல்லாசப் பயணிகளின் படகுகளைக் கண்டால் அவற்றை நெருங்கி வந்து மனிதர்களோடு அன்புடன் பழகுகின்றன.

மனிதர்களைத் தேடிவந்து நெருங்கிப் பழகும் இந்த இராட்சத திமிங்கிலம் சுமார் 40 தொன் எடை கொண்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. நீளம் சுமார் 40 அடிகள். இதன் உடல் முகம் என எல்லாப் பகுதிகளையும் எந்த அச்சமும் இன்றி மனிதர்கள் தொட்டுப் பார்க்கலாம். தடவியும் கொடுக்கலாம். மெக்ஸிகோவின் மேற்குக் கரையை அண்டிய பகுதியில் தான் இந்த அதிசயம் நடக்கின்றது.

இந்த சாம்பல் நிறத் திமிங்கிலங்களோடு விளையாட தற்போது உலகம் முழுவதும் இருந்து உல்லாசப் பயணிகள் குடும்பத்தோடு இந்தப் பகுதிக்கு விஜயம் செய்கின்றனர்.

மெக்ஸிகோவின் சென் இக்னாஸியோ குடாப் பகுதியிலேயே இவை காணப்படுகின்றன. இவை குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்தப் பகுதிக்கு இனப் பெருக்கத்துக்காக புலம் பெயரும் உயிரினம் என்று கூறப்படுகின்றது.

உலகில் மனிதனோடு மிகவும் நெருங்கி நட்புறவு கொள்ளும் ஒரே வகை திமிங்கிலம் இதுதான். ★

# பரிதாபநிலை



பீரங்கிக்குள் இருந்து குண்டுதான் வெளியே வரும்.ஆனால் பீரங்கி வெடித்த போது குண்டுக்குப் பதிலாக மனிதன் வந்து விழுந்தால் எப்படியிருக்கும்.

மெய் சிலிர்க்க வைக்கும் இந்தக் காட்சியை இம்முறை ஈஸ்டர் வங்கி விடுமுறைத் தினத்தன்று காணும் துரதிஷ்டம் பலருக்கு ஏற்பட்டது.

கெண்ட் கவுண்டியில் உள்ள ஒரு திறந்த வெளி மைதானத்தில் தான் இந்த விபத்து இடம்பெற்றது. விடுமுறையை முன்னிட்டு ஒரு திகில் காட்சி இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த திகில் காட்சியில் பங்கேற்கும் ஸ்டன்ட் கலைஞர் பீரங்கிக்குள் இருந்து ஏவப்படுவது தான் விளையாட்டு. இவர் பீரங்கியிலிருந்து ஐம்பது அடி உயரத்துக்கு ஆகாயத்தை நோக்கி ஏவப்படுவார். எல்லாம் தயார் நிலையில் இருந்தது.

நூற்றுக்கணக்கான மக்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தனர். மேலே சென்று தன்னை பீரங்கியோடு இணைத்துக் கொண்டு எல்லாம் சரி சுட்டுத் தள்ளுங்கள் என்ற தோரணையில் அவரும் சைகை கொடுத்தார். ஆனால் அவரின் பிரதான பாதுகாப்பு இணைப்புக் கேபிள் அறுந்திருந்ததைத் துரதிஷ்டவசமாக எவரும் கவனிக்கவில்லை. பிறகு என்ன கேபிளை நம்பி ஏவப்பட்டவர் மேலே போன வேகத்தில் தலைகுப்புற வந்து கீழே விழுந்தார். எல்லாம் கண்மூடி திறப்பதற்குள் முடிந்து விட்டது. உயிரும் பிரிந்து விட்டது.

ஜப்பானில் கடந்த மாதம் ஏற்பட்ட நில நடுக்கமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி பேரலையிலும் சிக்கி உயிரிழந்தோரை கடலில் தேடும் பணியில் 2 ரோபோக்கள் ஈடுபடுத் தப்பட்டுள்ளன. கடந்த 5 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட பணியில் இதுவரை எவரது சடலமும் கிடைக்கவில்லை என ஜப்பான் அரசு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

கடலுக்கடியில் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இந்த ரோபோக்களில் கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன் சோனார் கருவியும் உள்ளது. இரண்டு ரோபோக்களில் ஒன்று ஜப்பானிலும், மற்றொன்று அமெரிக்காவிலும் தயாரிக்கப் பட்டதாகும். இப்பகுதியில் கடலில் சீற்றம் அதிகமாக இருப்பதால் தேடும் பணியில் ஈடுபடுவது சிரமம் என நீச்சல் வீரர்கள் தெரி வித்ததால் ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டன.

கடலில் மூழ்கிய காரைக் கண்டுபிடித்த ரோபோக்கள் அதில் உயிரிழந்தோர் எவரேனும் உள்ளனரா என்றும் தேடியது. ரோபோக்கள் எடுத்த படப்பதிவுகள் செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டன. கடலில் கலந்துள்ள கதிர் வீச்சின் அளவை அறிய மற்றொரு ரோபோ பயன்படுத்தப்பட உள்ளது.

# மீட்கும் ரோபோ



# தவளையே நீயுமா?



தண்ணீருக்கு அடியில் இருப்பது ஒரு தனி உலகம். அதில் என்னவெல்லாமோ நடக்கின்றது.

இங்கே ஒரு அபூர்வமான காட்சியைப் படமாக்கியுள்ளார் 75 வயதான டொனி பிட்லர்.

டெவோனில் உள்ள தனது குளத் துக்குள் தான் இவர் இந்தக் காட் சியைப் படம் பிடித்துள்ளார். இது கோல்ட் பிஷ் ரகத்தைச் சேர்ந்த மீன்.

தன்னிடமுள்ள மிகப்பெரிய மீன் இதுதான் என்கிறார் பிட்லர். ஆனால் குளத்துக்குள் வந்த தவளை இந்த மீனோடு உறவு கொள்ளப் பார்த்ததாம்.

அது தான் இந்தக் காட்சியின் விஷேசம். பாவம் தவளையின் முயற்சி பலிக்கவில்லை.

காரணம் படத்தை எடுத்தவுடன் தவளையையும், மீனையும் பிரித்துவிட்டார் பிட்லர்.

# அச்சத்தில் மாயி



பாகிஸ்தானில் ஒரு கிராமத் தலைவரின் உத் தரவின் பேரில் கூட்டமாகச் சேர்ந்து ஒரு பெண் ணைக் கற்பழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட 14 பேரில் 13 பேர் அந்த நாட்டின் உச்ச நீதிமன் றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண்ணின் உயிர் இப்போது ஆபத்தை எதிர் நோக்கியுள்ளதாக அஞ்சப்படுகின்றது.

ஒன்பது வருடங்களுக்கு முன் உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்தக் கொடுமை பாகிஸ்தானில் அரங்கேறியது. பஞ்சாப் மாநிலத்தின் ஒரு குக்கிராமத்தில் தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பாதிக்கப்பட்டவர் முக்தரான் மாயி என்ற பெண்.

இந்தப் பெண்ணின் சகோதரன்மீது முன்வைக்கப்பட்ட பாலியல் குற்றச்சாட்டால் அவன் கிராமத்தை விட்டே ஓடிவிட்டான். இதனால் ஆத்திரமடைந்த கிராமத் தலைவர் அவனின் சகோதரியான மாயியை கூட்டமாகக் கற்பழித்து ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டார். அதன்படி 14 பேர் அவளைப் பாலியல் பலாத்காரம் செய்தனர்.


எனினும் உலகம் முழுவதும் மகளிர் அமைப்புக்களும் மனித உரிமை அமைப்புக்களும் அவருக்கு ஆதரவாக திரண்டன.

பாதிக் [illegible] எதையும் செய்யலாம் என்றது அரச நிர்வாகம்.உலகின் ஆதரவோடு மாயி துணிச்சலாக நீதிமன்றம் சென்றார். ஆரம்ப விசாரணைகளின் பின் இவர் களுள் ஆறு பேருக்கு நீதிமன்றம் மரண தண் டனை விதித்தது. ஏனையவர்களை போதிய ஆதா ரம் இல்லை எனக் கூறி விடுதலை செய்தது. இப் போது மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஐவரை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் விடுவித் துள்ளது. விடுதலையானவர்கள் கிராமத்துக்கு வந்தால் தனக்கும் தனது குடும்பத்துக்கும் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று அச்ச மடைந்துள்ளார் மாயி. என்ன நடக்கப்போகிறது என்பதைக் காலம் தான் சொல்லும்.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வதற்கே துணிவு வேணும்



மாரிமுத்துத்தான் கதைக்கிறன் இருந்தாப் போல இந்தச் சோமற்ற பெட்டையெல்லோ தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப் போனாள். என்னெண்டு தெரிய இல்லை. இந்தச் சேதியைக் கேட்ட நேரத்திலயிருந்து எனக்கு நெஞ்சுக்குள்ள என்னவோ செய்யிற மாதிரிக் கிடக்குது. ஏனிந்தப் பெடிச்சி இப்படிச் செய்தாளெண்டும் தெரியயில்லை. தூக்குப் போட்டுக் கொண்டு சாகிறதெண்டாப் போல சின்ன வேலையே! எப்படி இதுக்குத் துணிவு வருகுதோ! நினைக்கப் பயமாயெல்லோ இருக்குது. கஷ்டங்கள், கவலையள் வாறது வழக்கம் தான் பாருங்கோ. அதுக்குப் போய் தற்கொலை பண்ணிறதோ? எனக்கும்தான் இத்தனை வயசாப் போச்சு. இதுவரை எனக்கு வந்த கஷ்டம், துன்பம் கவலையளை யெல்லாம் சொன்னால், ஏனப்பு இன்னமும் தற்கொலை பண்ணாம இருக்கிறியள்? எண்டு கேட்டாலும் கேட்பியள் போல. ஆனாப் பாருங்கோ, நான் தற்கொலை பண்ண நினைச்சிருந்தா, இப்ப என்னிட எத்தனையோ ஆண்டுத்,திவசத்தை நீங்க கண்டிருப்பியள்.

அவளொருத்திக்குப் பின்னால அவளின்ரை வடிவிலும் கதையிலும் மயங்கி, அவளோட திரிஞ்சு, காதலில தோத்துப் போனனெண்டு நித்திரையுமில்லாமல் சாப்பாடும் தின்னாம இருந்தனான். அதை யோசிச்சுத் தாடி வளப்பமெண்டு, அப்பதான் முளைச்ச நாலு மயிரையும் வெட்டாம இருந்தன். அது கூட மடை வேலையெண்டு பிறகுதான் தெரிஞ்சிது. அண்டைக்கே தற்கொலை பண்ணி இருந்தா, இதுமாதிரி அழகான, அவளைவிட அன்பான மனுசியைக் காணாமலே போயிருப்பன். நான் செத்து வருசமும் பல போயிருக்கும். என்னை ஆரெண்டும் இண்டைக்கு ஒருத்தருக்குமே தெரிஞ்சிருக்காது. பிறகு ஏதோ நம்பிக்கையில அவனொருத்தனிட்ட லெட்சக் கணக்காக் கடன்பட்டு வெளிநாடு போகவெண்டு வெளிக்கிட்டு ஏசண்டொருத் தனிட்ட ஏமாந்த தால அலைஞ் சுலைஞ்சு கடன்தந்தவன்ரை நெருக்குதல் தாங்க ஏலாமல் நஞ்சைக் குடிச்சுச் செத்திடலாமெண்டும் நினைச்சன். அண்டைக்குச் செத்திருந்தா இண்டைக்கு இத்தனை லெட்சத்துக்கு அதிபதியா இருந்திருக்கலாமோ? இப்ப நான் மனிசி பிள்ளையளோட சந்தோசமா இருக்கிறன். இந்த மடத்தடி ஒரு ஆறுதல் மடம். நான் இப்ப எவ்வளவு செல்வத்தோட இருக்கிறன். சோதினையில அவங்க கேட்ட கேள்வியளுக்கெல்லாம் சரியாப் பதிலெழுதயில்லையெண்டாப் போல எனக்கொண்டும் தெரியாதெண்டு சொல்லிப் பெயிலாக்கிறதே. அவங்க கேட்காத ஆயிரம் கேள்வியளுக்கு என்னிட்டச் சரியான பதிலிருக்குக் கண்டியளோ.

நான் எதுக்கும் பயந்து சாகப் போறதில்லை. உவன் பத்தனைத் தெரியுமே உங்களுக்கு. சோதினை பெயில் எண்டாப்போல பள்ளிப் படிப்பை விட்டிட்டுப் போய்ப் பெட்டிக்கடையினை ஆரம்பித்து இப்ப பெரும் வருமானந் தாற கடையொண்டின்ரை முதலாளியாய் நல்லா இருக்கிறான் கண்டியளோ. அதுக்காக நான் படிக்க வேண்டாமென்று சொல்ல வர இல்லை. சாக நினைக்க வேண்டாமெண்டுதான் சொல்லுறன். எல்லாத்தையும் விட இந்தக் கொடுமையக் கேட்டியளே,

**மடத்தடி மாரிமுத்தர்**

வன்னியுக்க சனத்தையெல்லாங் கொல்லுறாங்கள் எண்டு தெரிஞ்சு, தமிழ்நாட்டில தீக்குளிச்செல்லோ செத்தாங்கள். அதால என்ன பிரயோசனம். 'பண்டிக்கு முன்னால முத்தைப் போட்ட கதையா முடிஞ்சு போச்சு'. மத்தவங்களக் கொல்லுற தால தாங்கள் நினைச்சமாதிரி வாழலாம் - ஆளலாம் எண்டு நினைக்கிற ஆக்களுக்கு எங்க தெரியப் போகுது மனிச உயிரின்ரை மதிப்பும் மகிமையும்? அதாலதான் சொல்லுறன் சும்மா நாங்க செத்துப் போறதால ஒண்டும் நடக்கப் போறதில்லை. நானெண்டாச் சாகமாட்டன். தற்கொலை செய்திருந்தா நான் எத்தினை முறை செத்திருப்பன். இண்டைக்கு நான் உசிரோட இருக்கிறன் எண்டால் தற்கொலை எண்ணத்தை அறவே துலைச்சுப் போட்டு, வாழ வேணுமெண்ட உறுதிதான், அதுக்குக் காரணம் பாருங்கோ! ஏன் பொறந்தன்? ஏன் வாழுறன்? எண்ட தெளிவில்லாம அங்கலாய்க் கப்படாது. பாருங்கோ. எங்கட உசிருக்கும் உடம்புக்கும் பெறுமதி இருக்குதெல்லோ. வாழுற ஒவ்வொரு செக்கனும் பெறுமதியானதெல்லோ. நாங்க வாழுற வாழ்க்கை சுயநலமா இருக்கிறதாலதான் எல்லாம் வருகுது. ஒண்ணும் சரிவருகுதில்லயே எண்ட தோல்வியில நாங்க துன்பப்படுறம்.

இந்த உசிரைக் காப்பாத்த எங்கட அப்புவும் ஆச்சியும் பட்ட பாட்ட மறக்க ஏலுமே? எங்கட சொந்தங்க பந்தங்களிட உறவப் பிரிய ஏலுமே? அதுகள் எங்களுக்காக எத்தின பாடுபடுகுதுகள் எண்டதை ஒரு நொடியில மறந்து போகலாமே? பூமியில பொறந்தவன் தனிச்சு வாழஏலாது, சேந்துதான் வாழவேணும். சேரயுக்கதான் எங்கட துன்பம் துயரமெல்லாத்தையும் பங்கிட்டு வாழப் பழகிக் கொள்ளலாம் பாருங்கோ! ஆனா நீங்க தனிச்சுப்போனதா நெனச்சுக்கொண்டு கவலப்பட்டு உதவியள் இல்லையெண்டு கற்பன பண்ணித் தற்கொல பண்ணிறதால ஆருக்கு நட்டம்? வாழவேண்டிய வயசில சாகப்போறனெண்டு நிக்கிறியள். சொல்லாமக் கொள்ளாம ஒத்தக் காலில நிண்டு சாக நினைச்சிற உங்களுக்குத்தான் சொல்லுறன், வாழுறதுக்குத் துணிவு வேணும். வாழ்க்கையெண்டா அதுதான் பாருங்கோ! காதலில தோத்துப் போனன். மனிசி கவனிச்சிறாளில்ல. மோன் வீட்டால கலைச்சுப் போட்டான். சாப்பிட வழியில்ல. கடன்காரன் தொல்லை தாங்க முடியுதில்ல. என்ரை சொந்தமெல்லாம் என்னைப் பாக்குதில்ல. தனியாக் கிடந்து தவிக்கிறன் எண்டெல்லாம் பல யோசினையள் வரும். எல்லாத்தையும் தூக்கி எறிஞ்சு போட்டுப் போராடி வாழுறவன்தான் மனிசன் பாருங்கோ. மனோ பலத்தோட சாமர்த்தியமா எது வந்தாலும் துணிஞ்சு நிக்கிற மனம் வேணும். அதுதான் பாருங்கோ வாழ்க்கை. நானெண்டால் இன்னும் நூறு வருசம் உசிரோட இருப்பன் பாருங்கோ. ஏனெண்டால் தற்கொலை மட்டும் செய்ய மாட்டன். செய்யமாட்டன் எண்டா, செய்ய மாட்டன்தான் அப்பதான் பாருங்கோ வாழலாம்.***




## குழந்தைகள் அதிகநேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் ஆபத்து

அதிக நேரம் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளுக்கு மாரடைப்பு மற்றும் இரத்த அழுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஆஸ்திரேலியாவின் சிட்னி நகர பல்கலைக்கழக பேராசிரியர் பாமினி கோபிநாத். இவர் தலைமையிலான ஆராய்ச்சிக் குழுவினர், 34 ஆரம்பப் பள்ளிகளைச் சேர்ந்த 1,492 குழந்தைகளிடம் சோதனை நடத்தினர். ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகள் தினமும் இரண்டு மணி நேரம் தொலைக் காட்சி பார்த்தால் அவர்களுடைய கண்ணுகளுக்குப் பின் புறம் உள்ள இரத்தக் குழாய்களின் குறுக்களவு குறைவதாகக் கண்டறிந்தனர்.

இதே நிலை நீடிக்கும் பட்சத்தில், எதிர்காலத்தில் ரத்தக் குழாய்களின் குறுக்களவு குறைந்து மாரடைப்பு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற ஆபத்துகள் விரைவில் ஏற்பட வழிவகுப்பதை இவர்கள் தங்கள் ஆய்வில் கண்டறிந்தனர்.

தினமும் இரண்டு மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகள் 35 நிமிடமாவது ஓடி விளையாடும் வழக்கத்தை கொண்டிருந்தால் இரத்தக் குழாய் குறுக்களவு குறைவதை தவிர்க்கலாம். எனவே தான், தினமும் குழந்தைகள் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தை குறைத்து ஒரு மணி நேரம் விளையாட வேண்டும், எனப் பரிந்துரை செய்கிறோம். பள்ளிகளில் ஒரு வாரத்தில் இரண்டு மணிநேரம் விளையாட்டுக்கு ஒதுக்க வேண்டும், என்ற நடைமுறை பின்பற் றப்பட்டு வருகிறது என, தெரிவித்துள் ளார். பேராசிரியர் பாமினி கோபிநாத்.★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ஸ்பெக்ட்ரம்’ அலைக்குள் மூழ்குமா தி.மு.க’



கனிமொழி



தயாளு அம்மாள்



கருணாநிதி

நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலின் முடிவுகள் மே மாதம் 13 ஆம் திகதி வெளியாகவுள் ளன. இந்தத் தேர்தலில் பலம் வாய்ந்த இரண்டு அணிகளான அ.தி.மு.க மற்றும் தி.மு.க அணிகள் விளங்குகின்றன.

பலம் வாய்ந்த இரு அணிகளுள் தமிழக முதல்வர் அரியணையை அலங்கரிக்கப் போகும் அடுத்த முதல்வர் யார் என்பதுதான் அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால் மறு புறம் இந்தியாவில் தற்போது சூடுபிடித்துள்ள பிரச்சினையாக 2-ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் அனைவராலும் பேசப்படுகின்ற விடயமாக அமைந்துள்ளது.

இந்த விவகாரத்துக்கும் தி.மு.க தலைவர் கருணாநிதிக்கும் தொடர்பு இருப்பதாகக் தகவல்கள் கசிந்துள்ளன. அதாவது ஸ்பெக்ஸ்ட்ரம் ஊழல் வழக்கின் முதலாவது குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ டில்லி சிறப்பு நீதி மன்றத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி தாக்கல் செய்தது. அதனை விசாரணைக்கு எடுத்த நீதி மன்றம் முக்கிய குற்றவாளியாக முன்னாள் மத் திய தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசாவை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. இப்போது ராசா கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

இவ்வளவு நடந்த பின்னரும் இந்த விவ காரத்தை சி.பி.ஐ விட்டபாடில்லை. இது தொடர்பாக கலைஞர் தொலைக்காட்சிக்கும் பங்கு உள்ளதாகக் கூறி கலைஞர் தொலைக்காட்சி வளாகத்தில் சோதனை நடத்தியுள்ளது.

இங்கு நடத்திய சோதனைகளின் மூலம் கலைஞர் தொலைக்காட்சியில் முதல்வர் கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளுக்கு 60 சதவீத பங்குகளும், கனிமொழிக்கு 20 சதவீத பங்குகளும் உள்ளன. சரத்குமாருக்கு குறைந்தளவான பங்குகளும் உள்ளன. சன் ரீ.வியின் பங்குகளை தயாளு அம்மாள் திருப்பித் தந்தபோது தனக்குக் கிடைத்த பங்குப் பணத்தில் 2 கோடி ரூபாவை முதலீடு செய்து கனிமொழி கலைஞர் ரி.வி.பங்குகளை வாங்கி யுள்ளார்.

ஆனால் பங்குதாரர் என்ற அளவோடு தயாளு அம்மாள் நின்று கொண்டார். அதேபோல் பெயரள வுக்கு கனிமொழியும் கலைஞர் ரி.வி.யின் இயக்குநராக இருந்துள்ளார். ஏனைய நிர்வாகத்திலோ அதன் பணப் பரிவர்த்தனைகளிலோ இருவரும் தலையிடுவதில்லை என்று கலைஞர் தொலைக்காட்சி கூறியுள்ளது. இதேவேளை முக்கிய முடிவுகளை சரத்குமார் தலைமையிலான அதிகாரிகளே எடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டால் பலனடைந்த ஸ்வான் தொலைத் தொடர்பு நிறுவனமான டி.பி.ரியாலிட்டி தனது இன்னொரு துணை நிறுவனமான சினியுக் மூலம் கலைஞர் தொலைக்காட்சிக்கு 214 கோடி ரூபாவைத் தந்தது ஏன் என்ற கேள்வி எழுந்தது.

இந்தப் பணத்தை கலைஞர் ரி.வி கொடுத்து விட்டாலும் கூட எதற்காக இந்த நிறுவனம் பணத்தை ரி.வியில் முதலீடு செய்ய முன் வந்தது என்று சி.பி.ஐ கேள்வி எழுப்பியது. இதனால் கலைஞர் ரி.வியின் தலைமை நிர்வாக அதிகாரியான சரத்குமாரிடம் விசாரணை நடத்தியது பங்குதாரர்களான தயாளு அம்மாளு, கனிமொழி ஆகியோரிடமும் விசாரணை மேற்கொண் டது.

> ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தயாளு அம்மாளுக்கும் பங்கு இருந்ததாகத் தகவல்கள் வெளிப் படுத்தியுள்ளன. எனவே சாட்சியாளராகும் நிலை மைக்கு தயாளு அம்மாள் தள்ளப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி டில்லி சிறப்பு நீ தி ம ன் ற த் தி ல் சி.பி.ஐ தாக்கல் செய்யவுள்ள 2ஆவது குற்றப்பத் திரிகையில் தயாளு அம்மாள், கனிமொழி, சரத்குமார்ரெட்டி ஆகி யோரின் பெயர்கள் சேர்க்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் தயாளு அம்மாளின் பெயர் அதில் இடம்பெறவில்லை. கனிமொழி, சரத்குமாரின் பெயர்களேஇடம்பெற்றுள்ளன.

கலைஞர் ரி.வியின் நிர்வாக இயக்குநர்களின் ஒருவரான கனிமொழி ஸ்பெக்ட்ரம் நிதி ஒதுக்கீடு முறைகேடு தொடர்பாக, குற்றச்சதிக்கு உடந்தையாகச் செயற்பட்டதாகக் குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. இதன்படி தடுப்புச்சட் டப்பிரிவு 7 மற்றும் 11 இன் கீழ் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனவே தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகள் எதிர்வரும் மே 13 ஆம் திகதி வெளியாகவுள்ள நிலையில் குற்றப்பத்திரிகையில் கனிமொழியின் பெயர் இடம்பெற்றுள்ளது. தேர்தல் முடிவுகளின் பின்னர் தி.மு.க கூட்டணி ஆட்சி அமைப்பதுதான் ஒரே தீர்வு எனக் கூறிவந்தது இதேநிலையில் தி.மு.க- காங்கிரஸ் கூட்டணி உறவில் பாதிப்பு ஏற்படும் என தகவல்கள் வெளியானது. ஆனால் இது தொடர்பாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் கருத்துத் தெரிவிக்கை யில்:

குற்றப்பத்திரிகையில் கனிமொழியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் தி.மு.கவுடன் உள்ள உறவில் பாதிப்பு இல்லை என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக தி.மு.க உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் அண்மையில் கூடியது. இந்தக் கூட்டத்தின் முடிவில் கருணா நிதி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குற்றம் நிரூபிக்கப்படாதவரையாரும் குற்றவாளி இல்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் விரிசலை உண்டாக்க அதை உடைக்க எதிர்க்கட்சியினர் முயற்சித்து வரு கின்றனர் என்று கூறியுள்ளார். எனவே ஸ்பெக்ட்ரம் வழக்கை தி.மு.க சட்டரீதியாகச் சந்திக்கும் எனக் கூறியுள்ளார்.

இதே வேளை இந்த விவகாரத்தில் கருணா நிதியின் மனைவியான தயாளு அம்மாளின் பெயரும் சேர்க்கப்படும் என்பது பலரதும் எதிர் பார்ப்பாக அமைந்தி ருந்தது. ஆனால் அவரது பெயர்சேர்க்கப்படவில்லை. இதனால் மகள் கனி மொழி குற்றவாளியாகக் கூறப்பட்டிருக்கும் சமயத்தில் தயார் சாட்சியாளராக மாறவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. அதாவது ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தயாளு அம்மாளுக்கும் பங்கு இருந்ததாகத் தகவல்கள் வெளிப்படுத்தியுள்ளன. எனவே சாட்சியாளராகும் நிலைமைக்கு தயாளு அம்மாள்தள்ளப்பட்டுள்ளார்.

இத்தனை விடயங்களுக்கும் மத்தியில் தான் கருணாநிதி சட்டரீதியாகஇந்த வழக்கை சந்திப்பதாக அறிக்கை விட்டுள்ளார்.✱

**ஜனா**

## கலியாணமாம் கலியாணம்

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸுக்கும் அவரது நீண்டநாள் காதலி கேற் மிடில்ரனுக்கும் ஏப்ரல் 29 ஆம் திகதி திருமணம் நடைபெற்றது. இவர்களின் காதல் பயணத்தில் சில தடங்கள் -

2001 செப்.: இளவரசர் வில்லியம் - கேற் மிடில்டன் ஆகிய இருவரும் ஸ்கொட்லாந்தில் உள்ள புனித ஆன்ட்ரஸ் பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக சந்தித்துக் கொண்டனர். இருவரும் கலைப் பிரிவில் பட்டம் பயின்றனர். பாடப்பிரிவு கடினம் காரணமாக வில்லியம்ஸ் வகுப்பு மாற நினைத்தார். ஆனால் கேற் மிடில்டன், வில்லியம்சை தனது வகுப்பிலேயே தொடரச் செய்தார். சில நாட்களுக்கு பின் இவர் புவியியல் படிப்புக்கு மாறினார்.

2003 ஜூன்: வில்லியம்ஸ், அவரது பெண் நண்பர் ஜெகா கிரைக் ஆகியோர் இடைய காதல் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

✱ வில்லியம்சின் 21வது பிறந்தநாள் விழாவில் மிடில்டன் கலந்து கொண்டார். இந்த விழாவின் போது பேட்டியளித்த வில்லியம்ஸ், தனக்கு எந்த கேர்ள் பிரண்டும் இல்லை என தெரிவித்தார்.

நவ. : கேட் தனது புனித ஆன்ட்ரஸ் பல்கலைகழக ஆண் நண்பரை விட்டு பிரிந்தார். இதையடுத்து வில்லியம்ஸ் - மிடில்டன் இடையிலான நட்பு நெருக்கமானது.

2004 மார்ச்: பனிச்சாரல் விழாவில் , வில்லியம்ஸ் - மிடில்டன் ஆகியோர் ஒன்றாக நடப்பது போன்ற படங்கள் வெளியாயின. இருவருக்கும் இடையே காதல் உள்ளது என்ற செய்தி கசிந்தது. அதே நாளில் வில்லியம்ஸ் பேசிய போது, 28 அல்லது 30 வயதுக்கு முன் திருமணம் செய்ய விரும்பவில்லை என்றார்.

2005 ஏப். 9: இளவரசர் சார்லஸ் - கேமிலா பர்க்கர் பவல்ஸ் திருமணத்திற்கு, மிடில்டனுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

அக். 17 : வில்லியம்சுடன் என்னை இணைத்து செய்திகளை வெளியிட வேண்டாம் என்று மிடில்டன், மீடியாக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இளவரசர் குடும்பம் சார்பிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

2006 ஜன.: வில்லியம்ஸ் - மிடில்டன் இருவரும் பொது இடத்தில் முத்தமிடும் படங்கள்.

டிச. : சான்ட்ரட்சி ராணுவ அக்கடமியில், வில்லியம்ஸ் ராணுவ அதிகாரியாக பட்டம் பெறும் நிகழ்ச்சியில் மிடில்டனும் பங்கேற்றார்.

2007 ஏப். 14: வில்லியம்ஸ் - மிடில்டன் இருவரும் பிரிந்ததாகச் செய்திகள் வெளியாகின.

ஜூன்: மீண்டும் காதலிப்பதாகச் செய்தி வெளியாகியது.

2010 நவ. 16: நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

நவ. 23: அதிகாரப்பூர்வமாக திருமணத் திகதி அறிவிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான மாத்திரை

உலகம் முழுவதும் சுமார் 10 கோடி பெண்கள் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இதற்கென 1980 ஆம் ஆண்டில் புதிய கருத்தடை மாத்திரைகள் தயாரிக்கப்பட்டன. எனினும் கால மாறுதல்களுக்கேற்ப புதிய ஆராய்ச்சிகள்மூலம் அவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அந்த வகையில் இப்போது புதிய வகையான கருத்தடை மாத்திரை விற்பனைக்கு வந்துள்ளது. இது 'மூன்றாம் தலைமுறை கருத்தடை மாத்திரை' என அழைக்கப்படுகின்றது. இதற்கு முன்பு பெண்களால் பயன்படுத்தப்பட்ட மாத்திரைகளை விட இந்த மாத்திரைகள் ஆபத்தானவை.



இவை இரத்தத்தை உறையச் செய்யக் கூடியவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. பிரிட்டன் மற்றும் அமெரிக்க நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் இத்தகவல் தெரிய வந்துள்ளது. இரத்தம் உறைவதால் சில நேரங்களில் இது உயிருக்கே ஆபத்தாக முடியும். எனவே வைத்தியர்களின் பரிந்துரையின்படியே பெண்கள் இந்தக் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் நிபுணர்கள் கூறியுள்ளனர். ✱

# கர்ப்பத்தடை ஊசியால் பால் குடிக்கும் குழந்தைக்குப் பாதிப்பா?



கேள்வி:வயது 35. எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்த பின்னர். கர்ப்பத்தடை ஊசி மருந்து (Depo provera) போட்டு வருகின்றேன். இந்த மருந்தினால் எனக்கோ அல்லது தாய்ப்பால் குடிக்கும் எனது பிள்ளைக்கோ பாதிப்பு ஏதாவது ஏற்படுமா?

பதில்: Depo provera என்பது Medroxyproges எனப்படும் (Injection) ஊசி மருந்து ஆகும். இது மாதவிடாய் சக்கரத்தின் போது நிகழும் இரு முக்கிய நிகழ்வுகளை நடக்கவிடாமல் தடுக்கிறது. முக்கியமாக சூலிடல் அல்லது முட்டை உருவாவதைத் தடுக்கிறது. இரண்டாவதாக கருப்பையின் உட்புறச்சுவரை கருக்கட்டலுக்கு ஏற்ற விதத்தில் விருத்தியடையாமல் தடுத்து விடுகிறது.

இந்த மருந்து பால் குடிக்கும் குழந்தைகளுக்கு எந்தவித தீமையையும் விளைவிக்க மாட்டாது. ஆனால் இதனைப் பாவிக்கும் பெண்களுக்கு இது சில பிரச்சினைகளை தரக்கூடியது.

முக்கியமாக பெண்களின் எலும்புகளில் உள்ள கல்சியத்தின் அளவைக் குறைக்க கூடியது. எனவே நீண்டகாலமாக கல்சியம் பதிலீடு இன்றி (Calciam Supplement) பாவித்தால் Osteoporos நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே வைத்திய ஆலோசனையோடு கல்சியம் குளிசைகளை பாவிப்பது நன்று. மேலும் மார்பகங்களில் கட்டி அல்லது வேறு நோய்கள் இருப்பினும் கட்டாய மாக வைத்தியரிடம் தெரியப் படுத்துங்கள்.

மாதவிலக்கு காலத்தில் இரத்தப் போக்கு ஏற்படுவதில் மாற்றங்கள் தென்பட்டாலும் வைத்திய ஆலோசனை மிகவும் அவசியம்.

தலைவலி, உயர்குருதி அமுக்கம், நீரிழிவு (சலரோகம்) Depo பாவனையின் பின் மனஅழுத்தம் நித்திரையின்மை போன்றன ஏற்படுமானால் மிகக் கட்டாயமாக வைத்திய ஆலோசனை பெறப்பட வேண்டும்.

இதனை விட உங்கள் நிறை அதிகரிப்பதற்கும் சாத்தியக் கூறுகள் அதிகம். எனவே ஒழுங்காக உடல் எடையை பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.
>
> **இலவச மருத்துவ ஆலோசனை**
>
> I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம், 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
>
> II.) சுடர்ஒளி, 85,ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.

மேலே சொல்லப்பட்டவற்றை விடவும் சில அவதானங்கள் தேவை. ஆனால் அவற்றை எல்லாம் கூறி உங்களை கலவரப்படுத்த நான் விரும்பவில்லை. Depo provera மருந்தை ஒரு வைத்தியரின் சிபார்சிலேயே போட முடியும். வைத்தியர் மேற்படி ஊசியை உங்களுக்கு தருவதற்கு முன்னர். முழுக்கவனமெடுத்து உங்களை பரிசோதித்த பின்பே மருந்தை உங்களுக்குத் தருவார். எனவே நீங்கள் கவலை கொள்ளத்தேவையில்லை. ஆனால் மேலே குறிப்பிட்ட விடயங்கள் உங்களுக்கு உள்ளதாக நீங்கள் கருதினால் தயவு செய்து அதுபற்றி வைத்தியரோடு விரிவாகக் கலந்துரையாடுங்கள். அதற்காகவே உங்களுக்கு அவைபற்றி குறிப்பிட்டேன். கர்ப்பத்தடைக்கு இது ஒரு முறை மட்டுமே.

இதைவிட பலமுறைகள் உண்டு. தேவையாயின் அவை பற்றியும் உங்கள் வைத்தியரோடு கலந்து ஆலோசியுங்கள். ✱

# ஆபாசப் படம் பார்ப்பவர்களே! இதையும் கொஞ்சம் பாருங்கள்

ஆண்கள் அதிக அளவில் ஆபாசப் படங்களைப் பார்ப்பதால், அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு, பணியிடங்கள், கணவன்-மனைவி உறவு உள்ளிட்டவற்றில் பிரச்சினைகள் ஏற்படுவதாக ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இணையத் தளங்களில் மட்டுமல்லாமல், ஐ பொட், மொபைல் போன், பத்திரிகைகள், தொலைக்காட்சி, டிவிடி உள்ளிட்ட வடிவங்களில் ஆபாசப்படங்களை மிக எளிதாகப் பார்க்கும் சூழல் தற்போது நிலவுகிறது. இதனால் பல்வேறு நாடுகளில் ஆபாசப்படம் பார்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.


அண்மையில், பிரிட்டனில் ஆபாசப்படம் பார்ப்பவர்கள் குறித்து, ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. அதில், 18 முதல் 24 வயதுக்குட்பட்ட பிரிட்டன் இளைஞர்களில் நான்கில் ஒரு பங்கு இளைஞர்கள் ஆபாசப்படம் பார்க்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

அதிக நேரம் தொடர்ந்து ஆபாசப்படம் பார்ப்பதால், மன அழுத்தம் ஏற்பட்டு வேலையில் கவனமின்மை, உறவுகள், தாம்பத்ய வாழ்க்கை போன்றவற்றில் பிரச்சினை எழுவது தெரியவந்துள்ளது.

மேலும், இந்த ஆய்வில் தெரியவந்துள்ளதாவது:

ஆபாசப்படம் பார்க்கும் இளைஞர்களில் மூன்றில் ஒரு பங்கினர், வாரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கும் குறைவாக படங்களைப் பார்க்கின்றனர். நான்கு சதவீதம் பேர் வாரத்திற்கு 10 மணி நேரத்திற்கும் அதிகமாக ஆபாசப்படங்களைப் பார்க்கின்றனர்.

இளைஞர்கள் தான் அதிக அளவில் மன அழுத்தத்தால் பாதிப்புக்குள்ளாகின்றனர். அவர்கள் உடனடியாக மருத்துவர்களை சந்திப்பது நல்லது. ஆண்கள் சராசரியாக வாரத்திற்கு 2 மணி நேரமும், பெண்கள் 15 நிமிடங்களும் ஆபாசப்படங்கள் பார்க்கின்றனர். ஆயிரத்து 57 பேரிடம் இதுகுறித்து கேட்டபோது 80 சதவீதம் பேர் தரச் சான்றிதழ் வழங்கப் பட்ட ஆபாசப் படங்களை விரும்பிப் பார்ப்பதாகத் தெரிவித்துள்ளனர். ✱



# மாதுளையின் மகத்துவம்

மற்றப் பழங்களைவிட மாதுளம்பழம் எளிதில் சமிபாடடையும். மாதுளையின் இலை, வேர், பூ என அத்தனையும் பல்வேறு வகைகளில் மருத்துவத்தில் பயன்படுகின்றன. இதயத்துக்கு ஒரு நல்ல சத்துணவு மாதுளம்பழ ஜூஸ். வயிறு சம்பந்தப்பட்ட அத்தனை பிரச்சினைகளையும் இது தீர்த்து வைக்கும். இரத்த ஓட்டத்தைச் சீராக்கும். மூளைக்குப் போகும் இரத்தத்தின் அளவை அதிகரித்து மூளையைச் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். ஆண்களின் உயிரணு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும்.

தொண்டைக் கரகரப்பு, நெஞ்சு எரிச்சல் போன்றவற்றைத் தீர்க்கும். மாதுளம்பழச் சாற்றில் சிறிதளவு குங்குமப்பூ கலந்து குடித்தால், காய்ச்சலின் போது ஏற்படும் தொண்டை வறட்சி நீங்கும்.

சிறுநீரகம், இதயம் குடல் ஆகியவை நன்கு செயற்பட இது ஒரு நல்ல மருந்து. உணவில் இருக்கும் விற்றமின் ஏ- யைக் குடல் தக்கவைத்துக்கொள்ள இது உதவுகிறது. உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. குறிப்பாக காசநோய் உண்டுபண்ணும் கிருமிகளைத் தடுக்கிறது.

மூக்கில் இரத்தம் வடிந்தால் சிறிதளவு மாதுளைச் சாற்றை விட்டால், உடனே குணமாகிவிடும். ✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புக்கு ஏங்குபவள்

ஒரு வெற்றியாளனை, ஆண்மைக்குரியவனை தனக்குத் துணையாகத் தேர்வு செய்ய பெண் விரும்புவாள். எனினும் நாளடைவில் ஆணின் அடிப்படை இயல்புகள் தன்னுடன் அவனை ஒன்றவிடாமல் தடுத்துவிடும் என்பதை அவள் அறியாமல் இருந்துவிடுகிறாள். இதனால் தன் துணையின் அரவணைப்பும், நெருக்கமும் தனக்குக் கிடைப்பதில்லை என நினைத்து ஏமாறும் நிலையேற்படும்.

பெண்ணின் மென்மையான உணர்வுகளை உணராமல் அதைக் கேலி செய்வதோ, இந்த குணங்கள் தனக்கு வந்தால் தன்னை ஆண்மைத் தனத்திலிருந்து அப்புறப்படுத்திவிடும் என்ற அச்சத்தில், பாலியல் தவிர வேறு விதத்தில் தனது உணர்வை வெளிப்படுத்தவோ ஆண் தயங்குகிறான். ஆனால் பாலுறவைவிட காதலை - அன்பை - தன்னிடம் ஆண் நிறைய பகிர்ந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்த்து ஏமாறும் பெண் தடுமாற்றத்திற்கு ஆளாகிறாள். பல ஆண்கள் வெளியில் செல்வாக்குடன் உள்ளனரே தவிர, வீட்டில் மனைவியுடன் மனம்விட்டுப் பேசவேண்டும், பழகவேண்டும், காதலைச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் நினைத்துப் பார்ப்பதில்லை. 98 சதவீதமான பெண்கள், தங்கள் மீதுள்ள காதலைக் கணவன் அடிக்கடி வார்த்தைகளால் வெளிப்படுத்த வேண்டும் என விரும்புகிறார்கள். தங்களைப் பற்றி, தங்கள் உணர்வுகளைப் பற்றி தங்களுடைய திட்டங்களைப் பற்றி அதிகமாக பேசவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இவ்வாறெல்லாம் நடக்காத போது 40 சதவீதமான பெண்கள் விவாகரத்து பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் தமது குழந்தையின் மீது கவனம் செலுத்தியோ அல்லது வேலையின் மீது கவனத்தைத் திருப்பியோ தமது உணர்வுகளை இன்னொரு தளத்துக்கு மாற்றிக்கொள்கின்றனர். வெளியுலகத்தைச் சாராமல் வீட்டுச் சூழலில் அதிகம் இருக்கும் பெண் தனது உணர்வுகளைக் கணவன் தூண்ட வேண்டும் என எதிர்பார்க்கிறாள். அதற்குப் போதிய அவகாசம் அளிக்கிறாள். இதைப் புரிந்துகொண்டு மனைவியுடன் மனம்விட்டுப் பேசுவதை கணவன் வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இருவருக்கும் இடையே நெருக்கமிராது, மனைவியின் மனம் அன்பிற்காக ஏங்கத் தொடங்கும். அந்த ஏக்கம் தேவையற்ற விளைவுகளையே தரக்கூடும். ✱

# கண் மை தயாரிப்பு

பெண்கள் கண்மை தீட்டி தங்களை அழகுபடுத்திக் கொள்கின்றனர். அதே போல் பிறந்த சிறு குழந்தைகளுக்கும் கண்மை தீட்டி அழகு படுத்துகிறார்கள். கண் மை அழகை மட்டும் ஏற்படுத்தித் தருவதோடு நின்று விடுவதில்லை.

அருகில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு, வீட்டில் கண்மை தயாரிக்கும் தொழிலில் ஈடுபடலாம்.


**தயாரிப்பு முறை**

முதலில் ஒரு சந்தனக் கட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். அதை நன்றாக ஒரு சுத்தமான கல்லில் உரசி சிறிதளவு சந்தனத்தை எடுத்துக் கொள்ளவும். பின்னர் ஒரு செப்புப் பாத்திரத்தை எடுத்து அதன் வெளிப்புறத்தின் அடிப்பாகத்தில் ஏற்கனவே அரைத்து வைத்திருக்கும் சந்தனத்தை தாராளமாக தடவவும். பின்னர் அதற்கு ஏற்ப பாத்திரத்தின் உட்பாகத்தில் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

அதன் பிறகு ஒரு வெள்ளைத் துணியை எடுத்து சிறுசிறு பகுதியாகக் கிழித்துக் கொள்ளுங்கள். அதை ஒரு அகல் விளக்கில் விளக்கெண்ணையை விட்டு, அந்த விளக்கிலேயே கிழித்து வைத்திருந்த துணி துண்டுகளைப் போட்டு நனைக்க வேண்டும். பின்னர் அதில் எத்தனை திரியை எரிய விட முடியுமோ அந்தளவிற்கு ஏற்றி எரிய விடுங்கள்.

இப்படி திரியால் எரியக்கூடிய புகையை செப்புப் பாத்திரத்தின் அடியில் பூசப்பட்டிருக்கும் சந்தனத்தின் மீது படுமாறு செய்துகொள்ளுங்கள். பின்னர் திரி முழுவதுமாக எரிந்தவுடன் பாத்திரத்திற்கு அடியியில் பூசப்பட்ட சந்தனத்துடன் படிந்திருக்கும் புகையை உதிர்த்து விட்டுக்கொள்ளவும் அதன் பிறகு ஒரு பீங்கான் பாத்திரத்தில் சேகரித்துக் கொண்டு அதனுடன் தேவையான அளவு வெண்ணையை ஊற்றி நன்றாகப் பிசைந்து கொள்ளுங்கள். அவ்வளவுதான் இப்போது கண் மை தயாரகிவிட்டது. அடுத்தது என்ன என்று யோசிக்கிறீர்களா? அவற்றை சின்னச் சின்ன டப்பாக்களில் அடைத்து விற்பனைக்கு அனுப்ப வேண்டியதுதான். ✱

# நிறையப் பேசுங்கள்



கோபம், சண்டை என்று வரும்போது ஆவேசமாகக் கத்திக் கூப்பாடு போடும் தம்பதியர், பின்னர் ஒன்று சேர்ந்து கொஞ்சுவதும், பிடிக்காத காரணத்தால் பேசாமல் இருக்கும் தம்பதியர் மீண்டும் ஒன்று சேர நாட்களாவதும் கண் கூடாக நாம் பார்க்கும் உண்மை. ஏனென்றால், மௌனம் என்பது ஒரு கூர்மையான ஆயுதம். அதனை முறையான - சரியான - விடயத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கணவன்-மனைவிக்குள் சண்டை வரும் சமயத்தில் இருவரும் மௌனமாவது பெரும் ஆபத்தாகும்.

ஏனென்றால் மௌனமாக இருக்கும்போது, மூளையில் சாத்தான் வந்து அமர்ந்து கொள்ளும் காதலிக்கும் போது நடந்த விஷயங்கள் எல்லாம் நாடகமாகவும், இப்போது இருப்பதுதான் நிஜம் என்றும் எடுத்துக்காட்டும். மேலும் இதுவரை என்னென்ன குறைகள் அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கிறது என்று கெட்ட விஷயங்கள் மட்டுமே மனதில் திரைப்படமாக ஓடிக்கொண்டிருக்கும்.

மேலும் இருவரும் மௌனமாக இருப்பதால் யார் முதலில் பேச்சைத் தொடங்குவது என்பதில் ஈகோ வளர்ந்து வெட்ட முடியாத பெரிய மரமாக மாறிவிடும்.

முதலில் அவர்தான் பேசவேண்டுமென இவரும், இவர்தான் பேசவேண்டுமென அவரும் கொஞ்ச நாள் காத்திருப்பார்கள். இருவரும் பேசாமல் இருக்கும் பொழுது, இனிமேல் அவராக வந்து பேசினாலும், பேசக்கூடாது என்ற நிலைமைக்குப் போய்விடுவார்கள். அதற்குப்பின் சமாதானம் என்பது மிகவும் கஷ்டப்பட்டு அடைய வேண்டிய விடயமாகிவிடும்.

அதனால் ஏதாவது பிரச்சினை என்றால் திட்டுங்கள், சண்டை போடுங்கள், ஆனால் பேசாமல் மட்டுமே இருக்கவே இருக்காதீர்கள். பேசுங்கள், நிறையப் பேசிக்கொண்டே இருங்கள்.

# கெட்ட காதலரைக் கைகழுவுங்கள்



காதலிக்கும் பெண்கள் கீழ்க்கண்ட குறைகளை ஆண்களிடம் காணும்பொழுது, இதையெல்லாம் திருமணத்துக்குப் பிறகு நிச்சயமாகத் திருத்திவிடலாம் என்று முட்டாள்தனமாக எண்ணிக் கொண்டிருக்காமல் காதலில் இருந்து விலகிவிடலாம்.

✱ பணத்திற்காக அல்லது சொத்திற்காகத்தான் காதலிக்கிறான் என்பது உறுதியாக தெரியவந்தால்...

✱ பெண் வேலை பார்த்து வரும் பணம் குடும்பத்திற்குப் போதும், வேலை பார்க்காமல் உல்லாசமாக இருக்கலாம் என்ற மனநிலையில் ஆண் இருப்பதை அறிந்துகொண்டால்...

✱ தங்கை அல்லது தோழிகள் எவரிடமாவது காதல் வசனங்களைப் பேசிக் கவிழ்க்க முயற்சி செய்வது தெரிந்தால்...

✱ காதலிக்கத் தொடங்கிய பின்னரும் வேறு பெண்களிடம் உடலியல் ரீதியான உறவு இருப்பதாகத் தெரியவந்தால்...

✱ மிக அதிகமான ஆசை உள்ளவனாக, தேவையில்லாத தொந்தரவு கொடுப்பவனாக, நிலைமையைப் புரிந்து கொள்ளாதவனாக இருந்தால்...

✱ முறிந்துபோய்விட்டது என சொன்ன முன்னாள் காதலியுடன் இன்னமும் சந்திப்பு, தொடர்பு இருப்பதாகத் தெரிந்தால்...

✱ வேறு யாராவது பெண் காதலைச் சொன்னபோது, தற்போதைய காதல் பற்றி எதுவும் சொல்லாமல் மறைப்பதாகத் தெரிந்தால்...

✱ அவ்வப்போது மனநிலை பாதிக்கப்படுபவர் என்பது தெரிந்தால்...

✱ நடக்காத விஷயத்தை வாழ்வின் குறிக்கோளாக கொண்டிருப்பவர் என்றால், அதாவது ஒரு நாளாவது ஐஸ்வர்யா ராயுடன் வாழ்ந்துவிட வேண்டும் என விரும்பினால்...

✱ அளவுக்கு அதிகமாக சந்தேகப்படும் குணம் கொண்டவன் எனத் தெரிந்தால்...

✱ பெண்கள் அடிமையாக வீட்டோடு அடைந்து கிடக்க வேண்டும், முக்கியமான முடிவுகள் எல்லாம் ஆண்தான் எடுக்க வேண்டும் எனும் பெண் அடிமை வியாதியாக இருக்கும் பட்சத்தில்...

✱ பிறரது துன்பத்தில் இன்பம் காணும் மனப்பான்மையில் இருந்தால்... ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி-பலன்

**01. 05. 2011 - 07. 05. 2011**




அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

மனித நேயத்தின் மறுஉருவமாய் விளங்கும் நீங்கள், மனசாட்சிக்கு கட்டுப்பட்டவர்கள். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர் கள். வெளியூர் பயணங்கள் திட்டமிட்டபடி அமையும். உறவினர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். நீண்ட நாள் ஆசை கள் நிறைவேறும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வியாபா ரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். வேலையாட் களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். விமர்சனங்கள் வரக்கூடும். திடீர் முடிவுகளால் வெற்றி பெறும் வாரமிது.





கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

மூட நம்பிக்கைகளை உடைத்தெறியும் நீங்கள், எதிலும் புதுமையை விரும்புவீர்கள். எதிர்த்தவர்கள் நண்பர் களாவார்கள். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மனைவி வழி உறவினர்களால் ஆதாயமுண்டு. உடன் பிறந்தோர் பாசமாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். பூர்வீக சொத்தை மாற்றி புது வீடு, மனை வாங்குவீர்கள். கல்யாணம், கோவில் நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். புது வேலையாட்கள் அமைவார்கள். விட்டுக் கொடுத்து விட்டதைப் பிடிக்கும் வாரமிது.




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

எதையும் இலவசமாக பெற்றுக் கொள்ள விரும்பாத நீங்கள், உழைப்பை நம்பி வாழ்வீர்கள். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பேச்சில் கம்பீரம் பிறக் கும். பிள்ளைகளுடன் வெளியூர் பயணம் சென்று வரு வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உடன் பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்துப் போகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தொட்டது துலங்கும் வாரமிது.




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

தான் உண்டு தன் வேலை உண்டு என்றிருக்கும் நீங்கள் அடுத்தவர் விஷயத்தில் அநாவசியமாக தலையிட மாட்டீர்கள். வேலை கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். சொத்து சிக்கல் கள் சுமுகமாக முடியும். வேற்றுமொழி பேசுபவர்கள் உதவுவார்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர் களால் ஆதாயமும் உண்டு. அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. எதிர் காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். யாரி டமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். செல்வம், செல்வாக்கு கூடும் வாரமிது.




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

மனதுக்குத் தோன்றுவதை மறைக்காமல் பேசும் நீங்கள், உண்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். பழைய சிக்கலுக்கு வழி பிறக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். உடன்பிறந்தவர்களை அனுசரித்துப் போங் கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். யாருக் காகவும் உதவி செய்யவேண்டாம். தந்தையின் உடல் நலம் பாதிக்கும். அவசரப்பட வேண்டாம். உத்தியோ கத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும். அனு சரித்துப் போவதன் மூலம் அதிகாரம் பெறும் வாரமிது.




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

ஆரவாரம் இல்லாமல் அமைதியாக சாதிக்கும் நீங்கள், நகைச்சுவை உணர்வு அதிகம் உள்ளவர்கள். கைமாற் றாக வாங்கியிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுத்து முடிப்பீர்கள். பெரியோரின் ஆசி கிட் டும். குடும்ப வருமானத்தை உயர்த்த புது வழி யோசிப்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. அவர் களின் உயர்கல்வி, திருமண முயற்சிகள் திருப்திகரமாக முடியும். சமையலறை சாதனங்கள் வாங்குவீர்கள். புது வீடு, மனை, வாகனம் வாங்குவீர்கள். உறவினர்கள் உங் கள் உதவியை நாடுவார்கள். இளைய சகோதர வகை யில் பயனடைவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் வாரமிது.




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

பழைய கலைப் பொருட்களை பத்திரப் படுத்தி வைக்கும் பழக்கமுள்ள நீங்கள் நேர்மையை நேசிப்பவர்கள். அரை குறையாக நின்ற வேலைகள் முடியும். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களை திணிக்க வேண்டாம். எவ்வளவு பணம் வந்தாலும் செலவுகள் துரத்தும். முன் கோபத்தைக் குறையுங்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசுங்கள். சகிப்புத் தன்மையால் சங்கடங்கள் தீரும் வாரமிது.





விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மறப்போம் மன்னிப்போம் என்ற கொள்கை உடைய நீங்கள் மற்றவர்கள் செய்யும் தவறை இங்கிதமாக எடுத்துரைப்பீர்கள். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். பணவரவு திருப்தி தரும். பழைய நண்பர்கள், உறவினர்களிடமிருந்து உதவிகள் கிடைக்கும். தாயாரின் உடல் நலம் சீராகும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். பழைய கடன் பிரச்சினைகள் தீரும். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். வாக்குச் சாதுர்யத்தால் வெற்றி பெறும் வாரமிது.




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

கறாராகப் பேசும் நீங்கள், ஆடம்பரத்தையும், விளம்பரத்தையும் விரும்ப மாட்டீர்கள். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். உறவினர் கள், நண்பர்களால் அனுகூலம் உண்டு. உல்லாசப் பயணம் சென்று வருவீர்கள். வீடு வாங்க, கட்ட வங்கிக் கடன் உதவி கிட்டும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும். உத்தியோகத்தில் ஒரே நேரத்தில் பல வேலைகளை பார்க்க வேண்டிவரும். எதிர்ப்புகளை கடந்து சாதிக்கும் வாரமிது.




உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

எதையும் தாங்கும் இதயம் கொண்ட நீங்கள் உயர்வான எண் ணம் உடையவர்கள். புதிய திட் டங்கள் தீட்டுவீர்கள். நீண்ட நாளாக வராமல் இருந்த பணம் கைக்கு வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உறவினர்கள், நண்பர்கள் மத்தி யில் மதிப்பு மரியாதை கூடும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை செலுத்துவார்கள். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். ஆன்மிகவாதிகளை சந்திப்பீர்கள். உற்சாகத்துடன் காணப் படுவார்கள். திறம்பட செயல்பட்டு தகுதி பெறும் வாரமிது.




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

பணம், காசு வநதாலும் பண்பாடு, கலாச்சாரம் மாறாத நீங்கள் தன்னை நாடிவந்தவர்களை ஆதரிப்பவர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். சொத்து வாங்குவீர்கள். தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும். உறவினர்களால் நன்மை உண்டு. கோவில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். சக ஊழியர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். வேலைச்சுமை அதிகரித்தாலும் புது அனுபவம் உண்டாகும். தொலை நோக்குச் சிந்தனை யால் சாதிக்கும் வாரமிது.




பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

நழுவுவதைப் போல சில விஷயங்களில் நீங்கள் பேசினால் அதற்கொரு காரணம் இருக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் ஏற்பாடாகும். உங்கள் ரசனைக்கேற்ற வீட்டிற்கு மாறுவீர்கள். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய் வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். குடும்ப விஷயங்களில் மற்றவர்களை நுழையவிடாதீர்கள். பங்குதாரர்களுடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுக்க வேண்டாம். வெறுத்துப் போகா மல் பொறுத்து நின்றால் வெற்றி பெற வாய்ப்புள்ள வாரமிது.

## ஒரே நேரத்தில் பிறக்கும் குழந்தைகளின் ஜாதக அமைப்பு



உலகில் ஒரே நேரத்தில் பல குழந்தைகள் பிறந்தாலும் அவற்றுக்கு ஒரே மாதிரியான ஜாதக அமைப்புகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் நவாம்சம், தசாம்சத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இருக்கும். இதேபோல் அந்தக் குழந்தைகளின் கைரேகையைக் கொண்டும் மிகத் துல்லியமான மாற்றங்களைக் கண்டறியலாம்.

சில நொடி இடைவெளியில் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளுக்குக் கூட ஜாதகத்திலும், கைரேகையிலும் வித்தியாசம் இருக்கும். ஜோதிட ரீதியாகப் பலன் சொல்வதற்கு முன்பாக ஒரு குழந்தை பிறக்கும் நேரத்தை மட்டுமல்ல, இடத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என பண்டைய ஜோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் பல குழந்தைகள் பிறந்தாலும் அவர்களின் ஜாதக அமைப்பில் மாற்றம் இருக்கும் என்பது ஜோதிட விதி. அட்ச ரேகை, தீர்க்க ரேகை போன்றவை ஜாதகம் கணிப்பதற்கு மிக முக்கியமாகும்.

உதாரணமாக வெவ்வேறு தம்பதிகளுக்கு ஒரே நேரத்தில் பிறக்கும் குழந்தைகளில் ஒன்று மருத்துவமனையிலும், மற்றொன்று வீட்டிலும், 3வது குழந்தை வேறு பகுதியிலும் பிறக்கின்றன என வைத்துக் கொண்டால், அந்தக் குழந்தைகள் வெவ்வேறு கிரகங்களின் ஆளுமைக்கு உட்படுகின்றன.

இதில் மருத்துவமனை செவ்வாய் கிரகத்தின் ஆதிக்கத்தில் வருவதால் அங்கு பிறந்த குழந்தைக்கு செவ்வாயின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும். அடுத்ததாக சுக்கிரனின் ஆதிக்கத்திற்குள் குடியிருப்புகள் வருவதால் அங்கு பிறக்கும் குழந்தைக்கு சுக்கிரன் ஆதிக்கம் மிகுதியாக இருக்கும்.


மூன்றாவதாக வீடு தவிர்ந்த கரடு முரடான பகுதிகள் சனியின் கட்டுப்பாட்டில் வருவதால், அங்கு பிறக்கும் குழந்தைக்கு சனியின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கும். இதே போல் பிரயாணத்தின் போது பறக்கும் குழந்தைகளுக்கு ராகு , கேதுவின் ஆதிக்கம் அதிகம் இருக்கும்.

ஒரே நேரத்தில் பிறந்தாலும், கிரகத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு அவர்களின் வாழ்க்கையில் மாறுதல்கள் காணப்படும்.

இங்கே மற்றொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். எந்த ராசிகள் (பெற்றோர்) சேர்ந்து இந்த (குழந்தை) ராசி உருவானது என்பதையும் கணிக்க வேண்டும். உதாரணமாக மேஷம், ரிஷபம் சேர்ந்த கடகம் பிறந்திருக்கிறதா அல்லது மிதுனம், சிம்மம் சேர்ந்து கடகம் வந்ததா என்பதையும் கருத்தில் கொண்டால் ஒரே நேரத்தில் பிறந்த ஜாதகர்களிடம் உள்ள மாற்றத்தை கணிக்க முடியும். ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 467



அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

**மேலிருந்து கீழ்**

01. பணம்.
02. புடைவையின் தலைப்பு.
03. தடி.
04. அழகன்/ காமன்.
05. செல்வம் (கடைசி எழுத்தை இழந்துள்ளது)
06. கைகூப்புதல்.
08. ஒரு சரக்குவகை/ உபதானியம்.
10. செம்பு.
11. பாண்டவரின் தாய் இந்தத் தேவி.
13. அம்பு, வில், வாள் போன்ற ஓர் ஆயுதம்.
14. துக்கம்.
15. உபதேசம் செய்பவன்/ போதிப்பவன்.
17.இரத்தல்/ பிச்சை.
20.பெருக்கற்குறி.
21.புத்தகத்திற்குப் போடுவார்கள்.

**இடமிருந்து வலம்**

01. தூர்த்தன்/ மோக ஆசை மிக்கவன்.
04.ஏரி நீர் வெளியேறும் வழி.
07. நலம்.
08. திருமணத்தின் போது பெண் வீட்டார் தரப்பு மாப்பிள்ளைக்கு வழங்குவது.
09. மனைவியை இழந்தவன்.
11. காய்களின் கொத்து.
12. அதிகம்.
13. தாண்டு.
14. கெட்டுப் போதல்.
16. ஈகம்.
18.தமது
19. நாடு
20.இணங்க.
22.செய்த செயல்.
23.எல்லைப்படுத்தும் விதிகள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 467

*சொற்சிலம்பம் 467 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு மே 15 ஆம்திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன மே 22 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## போட்டி இல. 461 இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு — **ஜி.சத்தியபாரதி,** 'இல.86/15, பன்விளை வீதி, வத்துகாமம்.

2 ஆம் பரிசு — **தே.விமலதாசன்,** 'இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — **ர.பிரியதர்சன் (சர்மா),** ஆதி கோணேஸ்வரர் ஆலயம் தம்பலகமம், திருகோணமலை.

## சொற்சிலம்பம் போட்டி இல.464 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.விநாசம். 02.வாகரை. 03.திரி. 04.அம்மா. 05.சாசனம். 06.மையம். 08.கசகசா. 12.தாரம். 13.சற்று. 15.உயர்வு. 16.கவலை. 17.விரும்பு. 19.தனம். 20.பாகு. 21.வதி

**இடமிருந்து வலம்**

01.விவாதி. 04.அஞ்சாமை. 07.நாகரிகம். 09.சய. 10.சரை. 11.சமாதானம். 13.சக. 14.ரம். 15.உற்சாகம். 18.பயறு. 19.தரு. 20.பாலைவனம். 22.சவுக்கு. 23.திம்பு.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) ச.சொர்ணமலர்,**
இல,17/B, மன்னார் வீதி, வவுனியா.

**(2)வே.கார்த்திகேசு,**
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.

**(3) செபமணி அல்பிறெட்,**
நவாலி தெற்கு, மானிப்பாய்.

**(4) எஸ்.சின்னராசா,**
பிரதான வீதி ,பெரிய போரதீவு.

**(5) திருமதி. வீ.ஹமீட்,**
46/59,றோபர்ட் குணவர்த்தன மாவத்தை, கிருலப்பனா-06

**(6) க.கமால்தீன்,**
புன்னக்குடா வீதி, ஏறாவூர்-03.

**(7) ம.தில்லைநாதர்,**
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

**(8) பா.சிவதரன்,**
பிரதான வீதி, தம்பிலுவில்-01.

**(9) ஆர். கார்த்திகேசு,**
3,1/3;42வது ஒழுங்கை, கொழும்பு-06.

**(10) வீ.நாராயணன்,**
இல.15, இராஜகீயமாவத்தை, கொழும்பு-07




**ஜோ.நிலுஜா,**
**திருகோணமலை.**

கேள்வி: வீட்டிற்கு நல்ல வளை வை' என்பார்களே. எதற்கு?

பதில்: கூரைக்கு நல்ல வளையை வைத்தால் கூரையைத் தாங்கிப் பிடிக்கும். அது போல வீட்டுக்காரியை நல்லவளாக வைத்தால் குடும்பத்தைத் தாங்கிப் பிடிப்பாள்.

**ர.விஜிதா,**
**பரந்தன்.**

கேள்வி: நீண்ட கூந்தல் உள்ளவளா, கட்டையான கூந்தல் உள்ளவளா குடும்பத்துக்கு உகந்தவள்?

பதில்:கூந்தல் நீளமோ, கட்டையோ முக்கியமல்ல. வாய் நீளமாக இல்லாவிட்டால் மெத்தச் சரி.

**க.ரூபன்,**
**கல்வியங்காடு.**

கேள்வி: ஒரு பெண் என்னிடம் படம் கேட்கிறாள். காரணம் கேட்டால் படம் தந்ததும் கூறுவதாகச் சொல்கிறாள் ஏன்....?

பதில்:படம் பார்; பாடம் படி என்று அரிச்சுவடிப் பாடம் படிக்கும் பையனாக இருக்கின்றீரே நீர்!

**தி.தீபன்,**
**வவுனியா.**

கேள்வி:அக் காலத்துப் பெண்கள் கணவனைக் கடவுளாக மதித்தார்கள். இப்போது மதிக்கிறார்கள் இல்லையே..?

பதில்:மதிக்க வேண்டாம். மிதிக்காமல் இருந்தால் போதாதா?

**எஸ்.டியூலா,**
**மன்னார்.**

கேள்வி: குடும்பம் என்றால் நாலும் இருக்கும் என்கிறார்களே?

பதில்: சிலருக்கு நாலு குடும்பமே இருக்கின்றதே.

**எஸ்.ஜீவன்,**
**கல்வியங்காடு.**

கேள்வி: மாமியாருக்கு மருமகள் தான் பயப்படுவாளா? மருமகன் பயப்பட மாட்டானா?

பதில்: மாமியாருக்குப் பயந்து சாமியானவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் என்ன பயம் என்று மட்டும் என்னிடம் விவரம் கேட்காதீர்கள்.

**ப.கோபி,**
**மல்லாகம்.**

கேள்வி: சந்தியில் நின்று சேஷ்டை விடும் நாய்களை என்ன செய்யலாம்?

பதில்: நான்கு கால் நாய் என்றால் கல்லைக் கையில் எடும். இரண்டு கால் நாய் என்றால் காலில் இருக்கும் செருப்பைக் கையில் எடும்.

**சு.ஜோதி,**
**யாழ்ப்பாணம்.**

கேள்வி:பிரச்சினை இல்லாத வாழ்க்கை உண்டா?

பதில்: பிரச்சினை இல்லாத வாழ்க்கை இல்லை. ஆனால் வாழ்க்கையே பிரச்சினை ஆகிவிடக்கூடாது.

**த.வேதாரணி,**
**கொழும்பு.**

கேள்வி:சகோதர பாச எதுவரை?

பதில்: பெரும்பாலும் சம்சாரம் அமையும் வரை!

**க.அருள்,**
**காரைநகர்.**

கேள்வி:விவாகம்- விவாதம் தொடர்பு என்ன?

பதில்: விவாதத்தில் ஆரம்பித்து விவாகத்தில் முடிவதும் உண்டு. விவாகத்தில் ஆரம்பித்து விவாதத்தில் வீணாவதும் உண்டு.

**ம.அஸ்வினி,**
**மட்டக்களப்பு.**

கேள்வி: மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்பதற்கு ஆதாரங்கள் உண்டா?

பதில்: சேஷ்டைகளைப் பார்த்தும் உமக்கு உறுதியாகவில்லையா?

**த.தினேஸ்,**
**மானிப்பாய்.**

கேள்வி: திருக்குறள் குறித்து ஒரு சில வரி விமர்சனம் கூறுங்களேன்?

பதில்: கடுகு சிறுத்தாலும் காரம் பெரிது.

**ந.சாக்ஷி,**
**யாழ்ப்பாணம்.**

கேள்வி:மருந்து இல்லாத நோய் எது?

பதில்: எத்தனையோ நோய்கள் இருக்கின்றனவே. அந்தவகை கொடிய நோய்களில் ஒன்று தான் 'ராகிங்'.

**க.சோபா**
**வவுனியா.**

கேள்வி: உளவியல் படித்த விற்பன்னர்களின் குடும்பங்களிலும் சண்டை வருகின்றதே?

பதில்: ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது என்பது உமக்குத் தெரியாதா?



## இந்த வார ஜோக்.

வேலை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்த கணவரைக் கண்டதும் மனைவி முகத்தைச் சுழித்தாள். களைப்பும் பசியும் சேர கணவருக்கு அவளின் செய்கை மனத்தை உறுத்தியது.

'என்னப்பா நான் வந்ததும் வராததுமாக முகத்தைச் சுழிக்கிறாய் என்றார் அவர். ''ஏங்க நீங்க யாரோ ரெண்டு பொம்பிளையளோட கடற்கரையில சுத்தினிங்களாமே?

''யாராடி உன்கிட்ட ஒண்ணுக்கு இரண்டெண்று சொன்னது'' என்று அவதிப்பட்டான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் சுடர்

தொகுப்பு -
எஸ்.ஜெயா



## கெட்டிக்காரத் தவளை



குளக்கரையோரத்தில் தவளையார் ஒரு சில்லை உருட்டி விளையாடினார்.



ஒன்று தவளையார் தரையில் விளையாடுவதைக் குளத்தில் நின்ற கொக்கு கண்டது.



தவளையைப் பிடித்துண்ண விரும்பிய கொக்கு தனது அலகால் அதனைக் கௌவியது.



உருட்டி விளையாடிய சில்லுடன் கொக்கின் அலகுக்குள் சிக்கிய தவளையார் சில்லை கொக்கின் அலகில் சிக்க விட்டு தப்பிக்கொண்டார்.

## வீடு

வீடு நல்ல வீடு - கிடுகு
வேய்ந்த நல்ல வீடு
சூடு குளிர் தாங்கும் - கூரை
சுகம் நிறைந்த வீடு
ஓடு வேய்ந்த வீடு - மிகவும்
உயர்ந்த நல்ல வீடு
வீடு மாமா வீடு - அழகு
விளங்கும் பெரிய வீடு.

- உமா பாரதி.



து.சுபாசுரி,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.



தர்சிகா, தரம் - 2,
கிங்ஸ்ரான் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.



வ.மிதுலன்,
யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.



இ.ஜயனீசன்,
யா/இந்து கல்லூரி.

## பசுக்கன்றும் நரியும்




அது நல்ல பசுக்கன்று. துள்ளித் துள்ளி விளையாடும். ஓடும். திரும்பி வரும். வட்டமாக ஓடும், 'அம்மா' என்று தாய்ப் பசுவைக் கூப்பிடும். நன்றாகப் பால் குடிக்கும்.

ஒரு நாள் அது ஓடியது. நீண்ட தூரம் ஓடிவிட்டது. நின்று பார்த்தது. அதற்குப் பயம் வந்துவிட்டது. உடல் நடுங்கியது. அப்பொழுது ஒரு சத்தம் கேட்டது. 'யார் அங்கே' என்று சொல்லிக்கொண்டு ஒரு நரி வந்தது. அந்த நரியைப் பசுக்கன்று பார்த்தது. பசுக் கன்றுக்குப் பயம் வந்தது. பசுக்கன்றைக் கடிக்க நரி மெல்ல மெல்ல வந்தது. அதனைக் கண்ட பசுக் கன்று 'என்னைக்கடிக்க வேண்டாம், கடிக்க வேண்டாம்' என்று சொன்னது. 'நரியாரே வாருங்கள். எங்கள் ஊரிலே கலியாண வீடு ஒன்று நடக்கிறது. அங்கே வயிறு நிறையச் சாப்பிடலாம். வாருங்கள் போவோம்' என்று பசுக் கன்று நரியை அழைத்தது. நரிக்கு நல்ல சந்தோஷம். பசுக்கன்றுடன் சேர்ந்து கலியாண வீடு நோக்கி வந்தது. வீட்டுக்கு அருகே வந்ததும் பசுக் கன்று கலியாண வீட்டைக் காட்டியது. பின் கதவால் நரி அந்த வீட்டுக்குள் போனது. அப்பாடா!சோறு குவிந்து கிடந்தது. பெரிய பெரிய சட்டிகளில் குழம்பு இருந்தது. தட்டங்களில் பலகாரம் கிடந்தது. சாப்பிடும் ஆவலில் நரி அருகில் சென்றது. அப்பொழுது வீட்டுக்கார அம்மா வந்தார். குள்ள நரியைக் கண்டார். ஒரு தடியால் நரிக்கு 'பளார்' என்று அடித்தார். நரி பாய்ந்து ஓடியது. அப்படியே அது காட்டுக்கு ஓடித் தப்பிவிட்டது. பசுக்கன்று தாய்ப்பசுவுடன் சென்று மகிழ்ந்தது.★

- சபா.ஜெயராசா.

## குறும்புக்காரன் குட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அம்மா, நான் உன்னைச் சாக விடமாட்டேன்



1

உண்மைச் சம்பவம்

மிகக் கடுமையான மழை ‘சடசட’ வென்ற ஓசையோடு பெய்து கொண்டிருந்தது. பத்தடிக்குமேலே முன்னாலுள்ள பாதை தெரியவில்லை. காரின் ஹெட்லைட்டுகள் பிரகாசமாக இருந்தும் பிரயோசனமில்லை. தனது பத்து வயது மகன் டோனியோடு காரைச் செலுத்திக் கொண்டிருந்த ஹெலன் மேலும் முன்னேற முடியாமல் காரை மெதுவாக நிறுத்தினான். டெக்ஸாஸ் நகரின் ஒதுக்குப்புறமாக இருந்த அவளின் தோட்டத்துக்கும், மகன் டோனி படிக்கும் பாடசாலைக்கும் இடையே அவளையும் ஏற்றிக் கொண்டு பல முறை அந்தப் பாதையில் அவள் சென்றிருப்பதால் பாதை அவளுக்கு நன்றாகவே பரிச்சயமாகி இருந்தது. இன்று பாதைக்கு என்ன நடந்தது? குறுக்கே ஏதோ சுவர் எழுப்பியது போல் ஒன்றுமே தெரியவில்லை.

> **பின்சீற்றிலிருந்து முன்சீட்டுக் தாவினான் டோனி. இருவரும் மெதுவாக இருபக்க ஜன்னல் கண்ணாடிகளையும் இறக்கினார்கள். இதனால் வெளியே இருந்த வாயு அமுக்கமும் உள்ளிருந்த அமுக்கமும் சமமாகவே கதவைத் திறப்பது எளிதாகி விட்டது. கதவைத் தள்ளியவுடன் திறந்து கொண்டதோடு நீர் சளசவென உள்ளே பாய்ந்து காரை நிறைத்தது.**

அன்று 1980 ஆம் ஆண்டின் ஜூன் 10 ஆம் நாள். பள்ளிக்கூடத்தில் நடந்த ஒரு மாலை நேர விளையாட்டுப் போட்டிக்கு டோனியோடு வந்த ஹெலன் தமக்கு அன்றைய நாள் விபரீதமான நாளாக இருக்குமென ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. மாலை நேரத்தில் திடீரென்று கருமேகங்கள் திரண்டு மழை தூறத் தொடங்கிய போது காற்றும் சுழன்றடிக்கத் தொடங்கியது. விளையாட்டு நிகழ்வு ரத்து செய்யப்பட்டு விட்டது. அத்துடன் திடீரென்று வானொலியில் அந்தப் பகுதியில் புயல் அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மாணவர்கள் பெற்றோர்களோடு அவசர அவசரமாக வீடு நோக்கி ஓட ஹெலனும் மகனை இழுத்துக் காரில் போட்டுக் கொண்டு தன் பண்ணையை நோக்கி விரைந்தாள். அது ஒரு தனியான பாதை. வேறு ஆட்களோ, வாகனங்களோ அந்த வேளையில் அந்தப் பாதையால் வரவில்லை. இதற்குள் மழை வலுத்துவிடவே ஒரு வீதியோரக் கடையில் சற்று நேரம் நின்றார்கள். புயல் எச்சரிக்கைக்காக ஒலிக்கும் சைரன் தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது. கையில் எடுத்து வந்திருந்த ‘சாண்ட் விச்’ சை உண்ணுமாறு டோனிக்கு கொடுத்த ஹெலன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள். போவதற்கு வீட்டில் கணவனும் இல்லை. பண்ணை விஷயமாக வெளியூர் போயிருந்தார்.

நேரம் போய்க் கொண்டேயிருந்தது. இரவு 10.35 சைரன் ஒலி நின்றுவிட்டது.புயல்அபாயம் ஓரளவு நீங்கிவிட்டது போலும், மீண்டும் காரில் ஏறித் தனது பண்ணையை நோக்கிச் செல்லும் குறுகிய வீதியில் காரைச் செலுத்தத் தொடங்கினாள்.

கடையிலிருந்து வெகுதூரம் வந்த பின்னர் தான் ஆரம்பத்தில் எண்ணியவாறு பாதை தெரியாமல் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அதனால் காரை நிறுத்த வேண்டியதாயிற்று. மழையின் உக்கிரம் இன்னும் சரியாகத் தணியவில்லை.

திடீரென காரை யாரோ பின் நோக்கித் தள்ளுவது போலிருந்தது. பக்கக் கண்ணாடி வழியே பார்த்தவள் தெரிந்த காட்சியைக் கண்டு பதறிவிட்டாள். ஆம். காரின் அரைவாசி உயரம் வரை வெள்ளம்! முன்பக்கமும் வெள்ளமட்டம் உயர்ந்து கொண்டு வருவது தெரிந்தது. ஹெட்லைட்டின் உயரத்துக்கு வெள்ளம் வந்துவிட்டது. இன்னும் சற்றுநேரத்தில் ஹெட்லைட் மறைந்துவிடும். பிறகு காரும் சிறிது சிறிதாக மூழ்கி விடும். தானும் மகனும் வெள்ளத்தில் மூழ்கி அநாதையாகச் சாக வேண்டியதுதானா?

**பேபி**

சமீபத்தில் தான் ஒரு பெரிய சத்திரசிகிச்சைக்கு அவள் உட்பட்டிருந்தாள். இன்னும் உடல் ஆரோக்கியம் வழமை நிலைக்குத் திரும்பவில்லை. நீந்தத் தெரிந்திருந்தாலும் இப்போது அது கைகொடுக்கப் போவதில்லை. மகன் டோனிக்கோ நீச்சல் தெரியாது. இப் போதுதான் பழகிக் கொண்டிருக்கிறான்.

இந்தநிலையில் மகனையும் இழுத்துக் கொண்டு நீந்தித் தப்பிக்க முடியுமா? கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை இழக்கத் தொடங்கினாள். பின் ஆசனத்தில் டோனி சுருண்டு படுத்தபடி திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஹெலனின் மூளை தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தது. அடிக்கடி வந்துபோன பாதையானபடியால் ஒருவாறு அது எந்த இடம் என்று ஊகிக்கமுடிந்தது. மிகவும் பள்ளமான ஒரு பகுதி. சற்று முன்னால் ஒரு ஆறுபோன்ற ஓடை வருகின்றது. அதற்கு மேல் ஒரு பாலம். ஓடையிலிருந்து பாலம் கிட்டத்தட்ட 12 அடி உயரமிருந்தது. தான் இருக்கும் பகுதியிலிருந்து சரிவான மேடுபோன்ற பாதை உயரமான பாலத்தை அடைந்து மீண்டும் சரிவாகக் கீழே இறங்கும். எப்படியாவது அந்தப் பாலத்தை அடையமுடிந்தால் உயிர் தப்பித்துவிடலாம்.

டோனி சாதாரணமாக ஒரு பத்துவயதுப் பையனைப் போலில்லாமல் எப்போதும் பெற்றோருக்குப் பல வழியிலும் உதவுபவனாக துணிச்சல் மிகக் கவனமாக இருந்து வந்தான். அவர்களது பெரிய பண்ணையைப் பராமரிப்பதிலும் 200க்கும் மேற்பட்ட பசுக்களுக்கு நீரும் தீவனமும் வைப்பதிலும் அவன் மற்றவர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தான். ‘‘நான் இல்லாத நேரம் நீதான் அம்மாவைப் பார்க்க வேண்டும் ’’ என்று அவனது தந்தை அடிக்கடி அவனுக்கு கூறுவார்.

அன்று காலையிலும் ‘‘டோனி அம்மாவைப் பார்த்துக்கொள்’’ என்று கூறி அவனைத் தட்டிக் கொடுத்துவிட்டுத்தான் அவனது தந்தை போயிருந்தார். அந்த நேரத்திலும் அம்மாவைக் காப்பாற்றித் தானும் எப்படித் தப்புவது என்று தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினான். வெள்ள மட்டம் மெல்ல மெல்ல ஏறிக் கொண்டிருந்தது. எப்படியும் உடனடியாக காரிலிருந்து வெளியேறித்தானாக வேண்டும்.


பின்சீற்றிலிருந்து முன்சீட்டுக்குத் தாவினான் டோனி. இருவரும் மெதுவாக இருபக்க ஜன்னல் கண்ணாடிகளையும் இறக்கினார்கள். இதனால் வெளியே இருந்த வாயு அமுக்கமும் உள்ளிருந்த அமுக்கமும் சமமாகவே கதவைத் திறப்பது எளிதாகிவிட்டது. கதவைத் தள்ளியவுடன் திறந்து கொண்டதோடு நீர் சளசளவென உள்ளே பாய்ந்து காரை நிறைத்தது.

இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி மெதுவாக உருண்டு நீரில் இறங்கினார்கள். எந்த நிலையிலும் கடவுளை நம்பிக்கையோடு வேண்டினால் ஏதோ ஒரு வகையில் அவன் உதவுவான் என்பது உண்மையான கூற்று. அவர்கள் இறங்கிய இடம், நீரின் கடுமையான ஓட்டத்தைத் தடுத்துக் கொண் டிருந்த காரின் பக்கமாகவிருந்தது. இதனால் காரின் இருபக்கமும் வெள்ளம் சீறிப் பாய்ந்து கொண் டிருந்தது. இல்லையேல் இருவரும் வேகமாக நீரோட்டத்தில் அள்ளுப்பட்டுப் போயிருப்பார்கள். நிமிர்ந்து நின்ற போது ஹெலனின் இடுப்பளவுக்கும், டோனியின் நெஞ்சளவுக்கும் நீர் மட்டம் இருந்தது.

இடையிடையே மின்னிய மின்னலில் சுற்றியிருந்த பயங்கரம் தெரிந்தது. அவர்கள் நின்ற இடத்திலிருந்து பாலம் சுமார் இருபதடி தூரத்தில் இருந்தது. ஆனால் நீர் மட்டம் ஏறி, பாலத்தின் விளிம்பைத் தொட்டு ஓடிக்கொண்டிருந்தது. எப்படியும் பாலத்தில் ஏறினால் சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு மேற்கொண்டு என்ன செய்வது என்று தீர்மானிக்கலாம். ஆனாலும் நீர்மட்டம் பாலத்தையும் மீறினால் என்ன நடக்குமென்று சொல்லமுடியாதிருந்தது. எப்படியும் பாலத்தை அடைந்தாக வேண்டும். இப்போது என்ன செய்யலாம்? மெதுவாகப் பாலத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். ஆனால் அந்தோ பரிதாபம்!

(தொடரும்)

## ‘நீர் நாய் ஓய்!’



ரதாவான என்னும் இடத்திலுள்ள இறப்பர் தோட்டத்தில் இந்திய வம்சாவளியினர் அதிகமாகப் பணிபுரிந்த காலம் அது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடும் போது ‘ஓய்’ என்ற வார்த்தையை அதிகம் உபயோகிப்பார்கள். அத்தகைய ஓர் உரையாடல் இது.

நண்பர்கள் இருவர் இறப்பர் தோட்டத்தில் ஓடும் ஒரு சிறிய வாய்க்கால் ஓரமாக நடந்து போய்க் கொண்டி ருந்தார்கள். அப்போது ஒரு நீர்நாய் (ஒரு வகைப் பிராணி) ஓடுவதை ஒருவர் பார்த்து விடுகிறார். அதை உடனே தன் நண்பனுக்குச் சொல்ல விளைகிறார்.

‘நீர் நாய் ஓய்’

‘‘என்ன ஓய் சொல்றீர்? நான் நாயா?’’

‘‘இல்லை ஓய்! நீர் நாய் என்று சொல்லுறன்’’

‘‘அதான் ஓய். என்னை ஏன் நாயின்னு சொல்றீர்? நீர் நாய், உங்கப்பன் நாய். உன்பாட்டன் நாய்’’ மற்ற வர் கோபத்தின் உச்சத்துக்குப் போகிறார். சொன்னவருக்கோ என்ன செய்வதென்றே புரியவில்லை. தான் சொன்னதென்ன? அவர் கிரகித்துக் கொண்டது என்ன? எப்படியாவது நண்பருக்குப் புரியவைக்க வேண்டும். நீர் நாயோ ஓடிவிட்டது. அதைக் காட்டவும் முடியாது பிறகு சொல்கிறார்.

“என்ன ஓய் புரியாமல் பேசுறீர். நீர் நாயென்டு தானே சொன்னன். அதுக்கேன் ஓய் அப்பன் பாட்டனை இழுக்கிறீர்?மற்றவருக்கு இன்னும் கோபம் ஏறுகிறது.

நண்பனைப் பிடித்து உலுக்குகிறார். அப்போது தோட்டக் கங்காணி அந்த வழியாக வருகிறார். காட்சியைக் கண்டஅவர்ஓடிவந்துஇருவரையும்விலக்கிவிடுகிறார்.

‘என்ன ஓய் நடந்தது என்கிறார் கங்காணி’?

கோபம் கொண்டவர் கூறுகிறார், ‘‘சும்மா வந்த என்னை நாயின்னு சொல்கிறான்?’’

கங்காணி ‘‘ஏன் ஓய் அப்பிடிச் சொன்னீர்?’’

‘‘சத்தியமா கங்காணி, நான் சொன்னதை இவன் விளங்கிக் கொள்ளல. உண்மையா ஒரு நீர் நாய் இப்பிடி ஓடிச்சு. அதை இவனுக்குச் சொல்ல நினைச்சதுக்கு இப்பிடி பழிபோடுறான் கங்காணி’’ அழமாட்டாக் குறையாக அவன் சொல்கிறான். இப்போது மற்றவனுக்கும் புரிய மீண்டும் நடக்கிறார்கள். சிரித்தபடியே. கங்காணியோ இரண்டுபேர் முதுகிலும் தட்டி விட்டுப் போகிறார். ★ **நேரில் கேட்டு ரசித்தவர்:- பேபி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்து வயதுச் சிறுமியைத் துரத்தும் பாப்பராசிகள்



இந்த ஐந்து வயதுச் சிறுமியின் பெயர் சூரி குறூஸ். இவர் தான் இன்று உலகில் அதிகளவு படம் பிடிக்கப்படும் சிறுமி.

காரணம் டொம் குறூஸ் மற்றும் கேதி ஹோம்ஸ் ஆகிய உலகப் புகழ்பெற்ற பிரபலங்களின் பிள்ளை தான் இவர். இவர் எங்கு சென்றாலும் படப்பிடிப்பாளர்கள் இவரை மொய்க்கின்றனர்.

இவரின் ஐந்தாவது பிறந்த தினத்தன்று பாப்ராஸி படக்குழுக் கூட்டம் பிறந்த தினம் நடந்த இடத்துக்கு மேலாக ஹெலிகொப்டரில் வட்டமிட்டுத் திரிந்தனர், இவரைப் படம் பிடிப்பதற்காக. இதன் காரணமாகச் சில சந்தர்ப்பங்களில் சாதாரண சிறுமிகளுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களை இவர் இழக்கின்றார். இவரின் பெற்றோர் பின்பற்றும் சமயப்பிரிவின் படி இவருக்கு இப்போதே எல்லா விடயங்களிலும் முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் தாய் கேதியுடன் பொருள்களை வாங்கச் சென்றபோதும் இவரைப் படப்பிடிப்பாளர்கள் விடவில்லை. இவர் ஒரு சிறுமி போல் அல்லாது வளர்ந்தவர் போன்றே நடத்தப்படுகின்றார். படப்பிடிப்பாளர்கள் இவரைப் பின் தொடர இதுவும் ஒரு காரணம். ★

# அதிசய மலர்

பெஸல் நகர தாவரவியல் பூங்காவில் பூத்திருக்கும் அரிய ரக டைடான் மலரைக் காண்பதற்குப் பெருந்திரளான மக்கள் அங்கு வந்தவண்ணம் உள்ளனர்.



உலகில் பூக்கும் மிகப்பெரிய மலர் இனங்களில் இதுவும் ஒன்றாகும்.

கடும் சுகந்தம் கொண்ட இந்த மலர் மஞ்சள் நிற மின்குமிழ் ஒன்றின் வடிவில் சுமார் இரண்டு மீற்றர் உயரத்துக்கு நீண்டு வளருகின்றது.

இந்தப் பூ பெரிய வெள்ளியன்று மலந்துள்ளது. இதன் விஞ்ஞானப் பெயர் Amorphophallus tita nium என்பதாகும். இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவுப் பகுதியில் உள்ள மழை வீழ்ச்சிக் காடுகள் தான் இதன் தோற்ற இடம்.

அங்கு இவை சுமார் மூன்று மீற்றர் உயரத்துக்கு வளரும் பண்பு கொண்டவை. இது அரிதாகப் பூக்கும் ஒரு மலரினம். இதன் சுகந்தம் பூச்சிகளையும், வண்டுகளையும் கவர்ந்து இழுக்கக் கூடியது. பெஸல் நகரில் இந்தப் பூ இந்தளவுக்கு வளர 17 ஆண்டுகள் எடுத்துள்ளது. ஆனால் ஒரு சில நாட்களிலேயே இது வாடிப்போய்விடும் என்பதுதான் பரிதாபம். ★

# ஒரு தெரு; ஏழு தாய்மார்



இந்தப் படத்தில் காணப்படும் ஏழு இளம் தாய்மாரும் தென்வேல்ஸ் பகுதியின் மிஸ்கின் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரும் ஒரே தெருவில் வசிக்கும் அயலவர்கள்.

ஒரே காலப்பகுதியில் கர்ப்பிணிகளாக இருந்தவர்கள். ஏழுவார கால இடைவெளியில் ஒரே வைத்தியசாலையில் பிறந்தவை தான் இந்தக் குழந்தைகள் அனைத்தும். இப்போது இதேகால இடை வெளியில் தமது முதலாவது பிறந்தநாளுக்குத் தயாராகி வருகின்றனர்.

இவர்களுள் முதலாவது குழந்தையைப் பிரசவித்தவர் 34 வயதான நீலா எட்வர்ட் என்ற ஆசிரியை. இவருக்குப் பிறந்தது இரட்டைப் பெண் குழந்தைகள்.

இவர் கர்ப்பிணியாக இருந்த போது அதே தெருவில் இன்னும் ஆறு பெண்கள் கர்ப்பமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து அவர்களுக்கு தனது வீட்டில் விருந்தும் அளித்து மகிழ்ந்துள்ளார்.

இன்னமும் அந்த நட்பும் சந்திப்பும் தொடர்கின்றது. குறைந்த பட்சம் வாரம் ஒரு தடவையாவது இவர்கள் குழந்தைகள் சகிதம் சந்தித்துக் கொள்கின்றனர்.

குழந்தைகளோடு கூட்டமாக 'பார்க்' செல்கிறார்கள் . குழந்தைகளின் முதலாவது பிறந்த நாளைக் கூட்டாகக் கொண்டாடவும் இந்தத் தாய்மார் திட்டமிட்டு வருகின்றனர். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொசுகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, மே 01 ஆம் திகதி வெளியிடப்பட்டது.